
ஞானச்சுடர்
சந்நிதியான் ஆச்சிரமம்
கார்த்திகை
2017
239 ஆவது மலர்
முருகா
வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

# குறள் வழி



புகழ்பட வாழாதார் தந்நோவார் தம்மை
இகழ்வாரை நோவ தெவன்.

பொருள்: புகழுண்டாகும்படி வாழமாட்டாதவர், பிறர் தம்மை இகழின் அவ்விகழ்ச்சி தமது குறைபாட்டினால் வந்த தென்று தம்மை நோவாது இகழ்ந்தவரை நொந்துகொள் வது ஏனோ?

(237)

வசைஎன்ப வையத்தார்க்(கு) எல்லாம்இசையென்னும்
எச்சம் பெறாஅ விடின்.

பொருள்: ஒருவர் புகழைப் பெறாதொழிவ ராயின் அது அவருக்கு இழிவு என்று சொல்லுவர் நல்லோர்.


(238)

# நற்சிந்தனை

## மறப்பேனோ குருநாதன் தன்னை

### முத்தி நல்குமே

### ஊதூது சங்கே ஊதூது - 1



ஊதூது சங்கே ஊதூது
அந்தக்கரணம் நாமல்லவென் றூதூது 08

ஊதூது சங்கே ஊதூது
பஞ்சவாய்வு நாமல்லவென் றூதூது 09

ஊதூது சங்கே ஊதூது
தசநாடி நாமல்லவென் றூதூது 10

ஊதூது சங்கே ஊதூது
அடிமுடி இல்லையென் றூதூது 11

ஊதூது சங்கே ஊதூது
காமக்குரோதம் நாமல்லவென் றூதூது 12

ஊதூது சங்கே ஊதூது
உன்னையுன்னால் அறியென் றூதூது 13

ஊதூது சங்கே ஊதூது
சிவதொண்டன் வாழ்கவென் றூதூது 14

# ஞானச்சுடர்



வெளியீடு:

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

உ

# ஞானச்சுடர்

வெளியீடு - 2 சுடர் - 239

2017 கார்த்திகை

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| விநாயகர் மகத்துவம் | கு. ஸ்ரீஸ்கந்தராஜா | 01 -03 |
| திருச்சதகம் | சு. அருளம்பலவனார் | 04 -06 |
| வாழ்க்கைக்கு இன்பம்... | கு. சோமசுந்தரம் | 07 -10 |
| திருவருட்பயன் | ஆ. ஆனந்தராசன் | 11 -14 |
| தனம் தரும், கல்வி தரும்... | இரா. சத்துருசங்காரவேல் | 15 -20 |
| பகவத்கீதையின் உலகம்... | பூ. சோதிநாதன் | 21 -23 |
| ஆன்மா லயிக்கும்... | ஆர்.வீ. கந்தசுவாமி | 24 -25 |
| சமய வாழ்வு | இரா. செல்வவடிவேல் | 26 -29 |
| பபா சுவாமிகள் | கே.எஸ். சிவஞானராஜா | 30 -32 |
| வழித்துணை | ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் | 33 -34 |
| கண்டோம் கதிர்காமம் | அன்னைதாசன் | 35 -36 |
| குருவானவரும் மணிவாசகரும் | திருமதி ஜெ. இராஜேஸ்வரி | 37 -38 |
| இறைவன் தந்த... | திருமதி ப. நடராஜா | -39 |
| நித்திய அன்னப்பணி... | சந்நிதியான் ஆச்சிரமம் | 40 -41 |
| வட இந்திய பத்திரிநாத்... | சி. புவனேஸ்வரி | 42 -45 |
| திருமுறை பாடிப் பணிவோம் | திருமதி சி. யோகேஸ்வரி | 46 -48 |
| சித்தர்களின் ஞானம் | சிவ. மகாலிங்கம் | 49 -55 |
| அலைபாயும் நெஞ்சே... | பு. கதிரித்தம்பி | -56 |
| வட இந்திய யாத்திரை | மோகனதாஸ் சுவாமிகள் | 57 -59 |
| படங்கள் தரும் பதிவுகள் | சந்நிதியான் ஆச்சிரமம் | 60 -66 |
| வாசகர் போட்டி | சந்நிதியான் ஆச்சிரமம் | 67 -68 |


வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இலக்கம்: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

# ஞானச்சுடர்

# ஐப்பசிமாத வெளியீடு

**வெளியீட்டுரை:-**

ஞானச்சுடர் 238ஆவது மலருக்குரிய வெளியீட்டுரையினை ஆச்சிரமத்தின் பணிகளுக்கெல்லாம் ஊன்றுகோலாக விளங்குபவரும் ஆசிரியருமான திரு க. கைலைநாதன் அவர்கள் மேற்கொண்டிருந்தார்கள்.

அவர் தமது உரையின்மூலம் ஆச்சிரமம் ஆற்றும் சகல பணிகளையும் சபையில் உள்ளோருக்கு எடுத்துக் கூறியதோடு, ஒரு ஆன்மீக மலராக விளங்கும் இம்மலரது வளர்ச்சியானது எம்மால் நினைத்துப் பார்க்க முடியாது. அத்துடன் ஆன்மீகம் சார்ந்த மலர் ஒன்று எவ்வித விளம்பரமுமின்றி தொடராக 238 மாதகாலம் வெளிவருவதென்பது நடைமுறைச் சாத்தியமன்று. ஆனாலும் இம்மலர் வெளியீடு எவ்வித தடங்களுமின்றி வெளிவந்துகொண்டிருப்பது சந்நிதி வேலவனது பேரருளுடன் கூடிய ஆச்சிரம சுவாமி அவர்களின் முயற்சி என்றே கூறவேண்டும் என்று கூறியதோடு இம்மலர் மென்மேலும் புதுப்பொலிவுடன் வெளிவரவேண்டும் என்று கூறித் தனது வெளியீட்டுரையினை நிறைவு செய்தார்.

**மதிப்பீட்டுரை:-**

ஐப்பசிமாத ஞானச்சுடர் மலருக்குரிய மதிப்பீட்டுரையை சைவ சமய ஆசிரிய ஆலோசகரும் சைவப்புலவரும் ஆச்சிரமத்தின் சகல செயற்பாடுகளுக்கும் தன்னாலான பங்களிப்பை வழங்கி வருபவருமான திரு செ. கந்தசத்தியதாசன் அவர்கள் மேற்கொண்டிருந் தார்கள்.

அவர் தமது உரையில் ஒவ்வொரு வருடமும் ஐப்பசி மாத மலருக்குரிய மதிப்பீட்டுரையை சமீபத்தில் அமரராகிவிட்ட ஆசிரியரும், நண்பருமாகிய க. நித்தியதசீதரன் அவர்கள் ஆற்றிவந்துள்ளார். இம்முறை அவரது பணியை நாம் ஆற்றுவதற்கு வந்துள்ளேன். இந்நேரத்தில் அவரையும் உள்நினைந்து இம் மதிப்பீட்டுரையினை ஆற்றுகின்றேன் என்ற முத்தாய்ப்புடன் தனது கருத்தை அடியார்களுக்கு எடுத்துக் கூறினார்.

இம்மலரில் இடம்பெறும் ஆக்கங்கள் அனைத்தும் ஆன்மீகம் சம்பந்தமாக வெளி வருவதால் இம் மலருக்கு ஆக்கங்கள் வழங்குவோர் கருத்துச் செறிந்ததும், ஆக்கபூர்வ மான தகவல்களையும் வழங்கவேண்டும். ஆன்மீக தாகம் கொண்ட அனைவருக்கும் இம்மலர் ஒரு வரப்பிரசாதம் அதை நாம் போட்டு உடைக்கக்கூடாது. கூடியவரையில் இம்மலரோடு தொடர்புபட்ட அனைவரும் இம்மலரின் வளர்ச்சிக்குக் காத்திரமான பங்களிப்பை வழங்கவேண்டும் என்று கூறியதோடு மலரில் இடம்பெற்ற ஆக்கங்களின் தன்மைபற்றி சபையில் உள்ள அடியவர்களுக்கு விளக்கிக் கூறியதோடு தனது மதிப்பீட்டுரையினை நிறைவு செய்தார்.

# சுடர் தரும் தகவல்

யாழ்ப்பாண கந்தபுராணக் கலாசாரம் என்பது நாவலரின் நாமத்தோடும்-தமிழோடும் உறவாடி அழகுறப் பொலிந்து இன்று பட்டி தொட்டியெல்லாம் பரந்திருப்பது நாம் செய்த தவப்பயனே. 1822 டிசம்பர் 18இல் பூமியில் அவதரித்து "நாவலன்" என்ற நாமத்துடன் சைவத்துக்கும் - தமிழுக்கும் காவலனாக இறுதிக் காலம்வரை வாழ்ந்து, சிவபதமெய்திய நாவலர் பெருமானின் குருபூசைத் தினம் டிசம்பர் 8 ஆகும்.



சிவத்தமிழ் புரியுமாறு சொற்பொழிவாற்றும்திறனும், அனைவரும் புரியும்படியான சிறுசிறு வசனங்களில் கட்டுரைகள் எழுதியும், புராண படனங்களைப் புரியும் படியாக ஓதிப் பயன் சொல்லுவதும் ஆகியவற்றில் நாவலருக்கு நாவலரே இணையாவார்.

சிறுவர்களுக்கான ஆத்திசூடி, கொன்றை வேந்தன், பாலபாடம், சைவ வினாவிடை போன்றவையும், பெரியவர்களுக்காக எழுதிய கந்தபுராணம், பெரியபுராணம், சைவ வினாவிடை, திருவிளையாடற்புராணம் போன்றவற்றைத் தூய தமிழ் வசன நடையில் எழுதியும், இவற்றினை அச்சியந்திர சாலையை உருவாக்கிப் பதிப்பித்து நூலுருவாக்கித் தந்துள்ளமையும் நாவலரின் பணிகளின் உச்சமாகும்.

"தற்கால உரைநடையின் தந்தை", "வசனநடை கைவந்த வள்ளலார்" எனப் பலரும் நாவலர் பெருமான் பற்றிப் புகழுரை கூறினாலும், தமிழ்ப் பேராசான் சி.வை. தாமோதரம்பிள்ளையின்,

> "நல்லைநகர் ஆறுமுகநாவலர் பிறந்திலரேல்
> சொல்லு தமிழ் எங்கே, சுருதி எங்கே
> எல்லவரும் ஏத்தும் புராணங்கள் எங்கே,
> பிரசங்கமெங்கே, ஆத்தினறிவெங்கே
> அறை"

எனும் கருத்து நாவலரின் பெருமைக்கு மகுடம் சூட்டிய மணி வாசகங்கள் ஆகும்.

1849இல் திருவாவடுதுறை ஆதீனம் வழங்கிய "நாவலர்" எனும் நாமம் உலகம் உள்ளவரை நீடித்து நிலைத்து நின்று நினைவு கூரப்படும் என்பது சத்தியமான உண்மை.

# ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய திருவகுப்பு

## 04. திருவேளைக்காரன் வகுப்பு

வானவர்பொ ருட்டுமக வானதுபொ ருட்டுமலர்
வாவியிலு தித்தமுக மாயக் காரனும்
வாரணப திக்குதவு நாரணனு வக்குமரு
மானுமய னைக்கறுவு கோபக் காரனும்
வாழியென நித்தமற வாதுபர விற்சரண
வாரிசம ளிக்குமுப காரக் காரனும்
மாடமதில் சுற்றியத்ரி கூடகிரி யிற்கதிர்செய்
மாநகரி யிற்கடவு ளாயக் காரனும்
வாளெயிற தற்றபகு வாய்தொறுநெ ருப்புமிழும்
வாசுகியெ டுத்துதறும் வாசிக் காரனும்
வாளகிரி யைத்தனது தாளிலிடி யப்பொருது
வாகைபுனை குக்குடப தாகைக் காரனும்
மாசிலுயி ருக்குயிரு மாசிலுணர் வுக்குணர்வும்
வானிலனு வுக்கணுவு பாயக் காரனும்
வாதனைத விர்த்தகுரு நாதனும்வெ ளிப்படம
காடவியி னிற்பதொர்ச காயக் காரனும்;

மீனவனு மிக்கபுல வோருமுறை பொற்பலகை
மீதமர்த மிழ்த்ரயவி நோதக் காரனும்
வேரிமது மத்தமதி தாதகிக டுக்கைபுனை
வேணியர்து திப்பதொரு கேள்விக் காரனும்
வேலைதுகள் பட்டமலை சூரனுடல் பட்டுருவ
வேலையுற விட்டதனி வேலைக் காரனும்
மீனுலவு கிர்திகைகு மாரனுநி னைக்குமவர்
வீடுபெற வைத்தருளு தாரக் காரனும்
மேனையரி வைக்குரிய பேரனும தித்ததிறல்
வீரனும ரக்கர்குல சூறைக் காரனும்
வேதியர்வெ றுக்கையும நாதிபர வஸ்துவும்வி
சாகனும்வி கற்பவெகு ரூபக் காரனும்
வேடுவர்பு னத்திலுரு மாறிமுனி சொற்படிவி
யாகுலம னத்தினொடு போம்விற் காரனும்
மேவியபு னத்திதணி லோவியமெ னத்திகழு
மேதகு குறத்திதிரு வேளைக் காரனே.

# கார்த்திகைமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

S. சதாசிவமூர்த்தி
(கனடா)
K. கனகசபேசன்
(கனடா)
உரிமையாளர்
(E.S.P. நாகரெட்ணம் அன்கோ, யாழ்ப்பாணம்)
ச. ஜெயதாசன்
(கருகம்பனை, காங்கேசந்துறை)
திருமதி தங்கராசா சரஸ்வதி
(புலோலி மேற்கு)
ச. வைத்தியநாதக்குருக்கள்
(கந்தவனக்கடவை, பொலிகண்டி)
உரிமையாளர்
(சிவா பிரதேர்ஸ், யாழ்ப்பாணம்)
மா. ஞானலிங்கம்
(ஆசிரியர், அபிராமி மகால், அச்சுவேலி)
க. தங்கராசா
(ஜெயகணேசா ஸ்ரோர்ஸ், பருத்தித்துறை)
சி.வ. முருகையா
(ஆசிரியர், பரராஜசேகரப்பிள்ளையார் கோயிலடி, இணுவில்)
து. நாகேந்திரம்
(நல்லூர்)
S. மங்களரூபன்
(கல்வளை வீதி, சண்டிலிப்பாய்)
சின்னையா ரஞ்சிதமலர்
(மல்லாகம்)

**ம.க. ஸ்ரீதரன்**
(கரவெட்டி)
**இ. தம்பிரத்தினம்**
(முருகேச பண்டிதனார் வீதி, சுண்ணாகம்)
**திருமதி P. குகதாசன்**
(K.K.S. வீதி, இணுவில்)
**P. நமசிவாய**
(அல்வாய் மத்தி)
**வ. செல்லத்துரை**
(சங்கீத கலாபூஷணம், அச்சுவேலி)
**இ. சிவராசா**
(கரவெட்டி கிழக்கு)
**சி. விஜயகுமாரன்**
(உரும்பராய்)
**ம. தியாகலிங்கம்**
(வியாபாரிமூலை, பருத்தித்துறை)
**செல்வநேசன் கஜன்**
(கல்வளை வீதி, சண்டிலிப்பாய்)
**க. பரராஜவிருந்தம்**
(காவில், கரணவாய்)
**சு. தில்லையம்பலவனார்**
(இளை. விவாகப் பதிவாளர், புத்தூர்)
**கந்தசாமி கதிர்காமத்தம்பி**
(மல்லியோடை, வல்வெட்டி)
**K. மகேந்திரன் J.P.**
(நவநீதபதி, இமையாணன்)
**திரு செந்தில்நாதன்**
(கொக்குவில் கிழக்கு)
**R. பத்மா**
(சுண்டுக்குளி)
**கே.எஸ். ஆனந்தன்**
(இணுவில்)

**கி. பகவத்சிங்கம்**
(இளை. அதிபர், நீர்வேலி)
**யோகராசா குமார்**
(ஆலடி வீதி, மட்டுவில் கிழக்கு)
**அ. தில்லைநாதன்**
(சிவன்வீதி, ஆவரங்கால்)
**செ. பாலச்சந்திரன்**
(K.K.S. வீதி, யாழ்ப்பாணம்)
**சுபத்திரா விவேகானந்தன்**
(அளகொல்லை, அளவெட்டி)
**த. சந்திரசேகரம்**
(நாகர்கோவில்)
**கனகலிங்கம் மயூரன்**
(பாரதிவீதி, அச்சுவேலி)
**ச. வதனி**
(நீர்வேலி மேற்கு)
**மு. பாலசிங்கம்**
(சுண்ணாகம்)
**நீ. மயில்வாகனம் J.P.**
(வருணன், அச்சுவேலி)
**T.N. இராஜா**
(பொன்கிளர், சங்கானை)
**சோதிரட்ணம் அனுஷியா**
(அரசடி சந்தி, நவாலி)
**செ. உமாபதி**
(பிராமண வீதி, தும்பளை)
**V. சந்தனத்தேவன்**
(தூதாவளை, கரணவாய்)
**ஐயாத்துரை நடராசா**
(சிவசிதம்பரம் வளவு, கரவெட்டி)
**S. செந்தூரன்**
(மாருதி இல்லம், மாறாப்புலம், அல்வாய்)
**திருமதி தயாநிதி சுசிகலா**
(தெல்லிப்பழை)
**செ. சுப்பிரமணியம்**
(யாழ்ப்பாணம்)

**A. பிரதாபன்**
(சந்திரபுரம், உடுவில்)
**வை. இராசேந்திரம்**
(இணுவில்)
**C.H. புவனேஸ்வரி**
(மானிப்பாய்)
**திருமதி ஆறுமுகம் உமாதேவி**
(பண்ணாகம், சுழிபுரம்)
**திருமதி கிருஷ்ணகுமாரி கனகசிங்கம்**
(உரும்பராய்)
**V.S. மருதலிங்கம்**
(அரசடி சந்தி, மானிப்பாய்)
**அ. பாலேஸ்வரி**
(கதிரிப்பாய், அச்சுவேலி)
**செல்வி க. கமலாம்பிகை**
(ஆதவன் ஸ்ருடியோ, மீசாலை)
**க. திருச்செந்தூர்**
(வீரப்பதிராஜன், கரணவாய்)
**K. தங்கவேலாயுதம்**
(பருத்தித்துறை)
**சிவகுரு குகதாசன்**
(செல்வமதி, ஆவரங்கால்)
**வ. தம்பையா**
(கலட்டி வளவு, புலோலி மத்தி)
**மோகன் புவனா**
(புத்தூர்)
**திருமதி செல்வநாயகி ஞானசுந்தரம்**
(செங்குந்தா வீதி, கரவெட்டி கிழக்கு)
**வைத்திலிங்கம் பிரபாகரன்**
(துரைவீதி, கொக்குவில்)
**திருமதி பிரதீபன் பிரதீபா**
(அச்சுவேலி)
**வைத்திலிங்கம் உதயமலர்**
(கரணவாய் தெற்கு)

# விநாயகர் மகத்துவம்

– திரு குமாரசாமி ஸ்ரீஸ்கந்தராஜா அவர்கள் –

"பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்
சரண அற்புத மலர் தலைக்கணிவோமே"

அறுவகை அறிவையும் தரும், பிரணவப் பொருளாகிய பிள்ளையாருடைய பாத மலரைச் சூடிக்கொள்வோம் என்று கூறுகின்றார் ஔவையார். எந்த வித்தையாயினும் கற்கத் தொடங்குவதற்கு முன்பு பிள்ளையாரை வழிபட்டே நம்மவர்கள் ஆரம்பிப்பார்கள். காரிய சித்தி, புத்திக்கூர்மை, தேகபலம், அன்புள்ளம், கருணைப் பெருக்கம் இவற்றுக்கெல்லாம் மூலாதாரமாயிருப்பவர் விநாயகப் பெருமான்.



அத்தகைய பெருமை வாய்ந்த, விநாயகப் பெருமானை எல்லா ஆலயங்களிலும் உள் நுழைந்ததும், அங்கே கொடி மரத்தின் முன்னிலையிலும் மற்றும் ஆலய உட்பிரகாரத் திலும் காணலாம். அதுபோன்று விநாயகர் ஆலயங்களில் அவர் கருவறையிலும் வீற்றிருப்பார். சைவ சமய வழிபாட்டுப் பாரம்பரியத்தில், விநாயகப் பெருமானை வழிபாடு செய் வதற்கு, எப்போதும் முதலிடம் கொடுக்கப்பட்டு வருகிறது.

இறைவன் எல்லாம் வல்லவன் என்பது, மெய் கண்ட சாத்திரத்தின் முடிந்த முடிபு. இறைவனது வல் லமை அளவிறந்தது. தன் எல்லையில்லாத ஆற்றலால் உலகுயிர்கள் உட்பட உலக விடயங்கள் யாவையும் தாமே அறிந்தும், தாமே பரிபாலித்தும் அருள் பாலிப்பவராகையால், இவர் பல்வேறு நாம, ரூப பேதங்களிலும் தனித்து நின்று சிறப்புடன் அருள்பாலிக்கின்றார்.

தன்னியல்பில் ஒரு நாமம், ஓருருவம் இல்லாதவராகிய விநாயகப் பெருமான் தன்னில் வேறாகிய உயிர்களையும், உலகத்தையும் இயக்கி நிற்கும் பொதுவியல்பில் ஆயிரம் திருநாமமும், பல்வேறு திருவுருவமும், எண்ணிறந்த திருவிளையாடல்களையும் நிகழ்த்துபவ ராக இருக்கின்றார். இவற்றிற்கெல்லாம் காரணம் யாதெனில், இறைவனின் எண் குணங்களில் ஒன்றாகிய, பேரருளுடைமையேயாகும்.

மண்உல கத்தினில் பிறவி மாசற
எண்ணிய பொருளெல்லாம் எளிதில் முற்றுறக்
கண்நுதல் உடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்.

என்னும் மேற்குறித்த தேவாரப் பதிகம் மானிடப் பிறவியின் உண்மை இலக்கான மேலாம் நோக்கத்தையும், மனித குலம் தம் வாழ்விலே, கடைத்தேறும் வழிவகையினையும் மிகத் தெளிவாகவும், மிகத் துல்லியமாகவும், விளக்கியும், விளம்பியும் சுட்டி நிற்கிறது.

*நீ தியாகம் செய்யத் தயாராக இருந்தால்மட்டுமே உலகிலுள்ள மற்றவர்களை வெல்லமுடியும்.*

ஆனாலும் நாமே பெரும்பாலும் அவ்வுண்மைதனைக் கண்டும் காணாதிருக்கின்றோம். இறைவனது எண்ணிறந்த ஆற்றல்களில், இடையூறுகளை ஆளும் ஆற்றலும் ஒன்று. அவ்வாற்றல் நித்தமும் முனைந்து நிற்க விளங்குபவரே விநாயகக் கடவுள். மேலும், மெய்ப்பொருளாய் விளங்கும் அகரம் உகரம் மகரமாகிய சிவம் சக்தி நாதம் ஆகிய பிரணவ ரூபமும் அவரே. ஓங்காரம் ஒலிகளுக்கெல்லாம் மூலம், ஆகவே, "நாத விந்து கலாதீ நமோ நம" என்றார் அருணகிரிநாதர்.

விநாயகப் பெருமானது திருவருட் சக்திகளே சித்தி, புத்தி என்னும் ஞான சக்தியும் கிரியா சக்தியுமாம். இவரது திருவடி நிழலில் உலவும் பெருச்சாளி வாகனமானது, ஆன்மாக்கள் அழிவு தரும் உலகியல் இன்பங்களை நுகர்ந்து துன்பச் சூறாவளியில் இடைவிடாது உழலாது, அறியாமையை விலக்கி, மெய்ஞ்ஞானத்தைப் பற்றிநின்று, பேரின்பப்பேறு உய்தியுறுதலை விளக்குகிறது. இவரது பேழை வயிற்றில் உலகம் யாவுமே அடங்கும். இவரது ஐந்து கரமும் ஐந்து தொழில்களையும், இவரது முக்கண்களும் சூரியன், சந்திரன், அக்கினியையும் குறித்து நிற்கிறது. இவர் ஞானக் கருணையும், அறக் கருணையும், மறக் கருணையும் உடையவர். எவ்வகையிலும் விநாயகர் உருவம் வெளிப்படுத்தும் தத்துவமானது ஞான வடிவத்தையே நமக்கு உணர்த்துகின்றது. காணாபத்திய மதத்தவர் இவரையே பரமாக மதித்து வழிபடுவர். விநாயகப் பெருமானைப் பிரமன், விட்டுணு, தக்கன், இந்திரன், நளன், மன்மதன், சந்திரன், இராவணன், அகத்தியர், ஔவையார், நம்பியாண்டார் நம்பி ஆகியோர் வழிபட்டுப் பேறு பெற்றனர்.

## விநாயகர் வழிபாடு:

விநாயகர் வழிபாடு மிகவும் சுலபமானது. சாணம் அல்லது மஞ்சள் உருண்டை செய்து, அதில் அறுகம் புல்லை வைத்தால் அதுவே வழிபடத் தகுந்த விநாயகராகிவிடும். அவரது வழிபாட்டில் மூன்றுமுறை, இரு கைகளாலும் தலையைக் குட்டிக் கொள்ளுதலும், கைகளை மாற்றி இரு காதுகளைப் பிடித்துக்கொண்டு தோப்புக்கரணம் போடுதலும், இவருக்கான சிறப்பு வழிபாட்டு முறையாகும்.

## விநாயகர் விரதங்கள்:

ஒவ்வொரு வருடமும் பிரதி மாதங்கள்தோறும் வரும் வெள்ளிக்கிழமையிலும், ஒவ்வொரு சஷ்டி மற்றும் சதுர்த்தசித் திதிகளிலும் விநாயக விரதம் அநுட்டிக்கப்படுகின்றது. இந்நோன்பு நோற்பின்போது, விநாயகரை அறுகம் புல்லால் அர்ச்சித்துப் பூசிப்பவருக்கு, அவர், அளவிறந்த பலனைக் கொடுப்பார். பகலில் உபவாசமிருந்து, ஆலய தரிசனம் செய்த பின்னர், இரவில் கொழுக்கட்டை, மோதகம் முதலியனவற்றை விநாயகருக்கு நிவேதித்ததும் உணவு உட்கொள்ளலாம். "கணபதி பூசை கைமேற் பலன்" என்பது பழமொழி.

விநாயகரை முதலில் வழிபட்டதன் பின்னரே எல்லாக் காரியங்களையும், பூசைகளையும், விழாக்களையும், வைபவங்களையும் ஆரம்பிப்பது நம் தமிழர் மரபு. அன்றுதொட்டு இன்றுவரை தமிழர்களின் எழுத்து வழக்கிலும், எவற்றையேனும் எழுதத் தொடங்கும் முன்னர் பிள்ளையார் சுழிபோட்டு, விநாயகரை வழிபட்டதன் பின்னரே எழுத்து வழக்கினை

நிறைவேற்றுகின்றனர். அதுபோன்றே பண்டுதொட்டுச் சகல தமிழ் நூல்களுமே முதலில் விநாயகர் வணக்கத்துடனேயே ஆரம்பித்திருப்பதை நாம் பார்க்கிறோம்.

திருகோணமலைப் பட்டினத்தில் சுற்றவரச் சைவ ஆலயங்கள் பல இருக்கின்ற போதிலும், சைவ மக்கள் செறிந்து வாழும் பட்டினத்தின் மத்தியில், புதுப்பொலிவும், புதிய அழகும் திகழ்கின்ற வகையில், இவ்வாலய பரிபாலன சபையினரால் நிர்மாணிக்கப்பட்டுத் தற்போது, 2012இல் கும்பாபிஷேகம் செய்யப்பட்ட அருள்மிகு தெய்வானைப் பிள்ளையார் பெருமான், இங்கே சகல அடியார்களினதும் இடர் களைந்து, அடியாரவர் தம் இஷ்ட சித்தி களை எல்லாம் வாரி வழங்கியவாறு எப்போதுமே அருள்பாலித்த வண்ணம் வீற்றிருக்கின்றார்.

சுபம்.

கழுகு ஒன்று ஆற்றங்கரை மரமொன்றிலே கூடுகட்டி தனது குஞ்சுடன் வாழ்ந்து வந்தது. திடீரென்று ஒருநாள் ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து மரத்தைச் சூழ்ந்து கொண்டது. எங்கும் பரவியிருந்த நீர் எந்த நேரத்திலும் மரத்தை வீழ்த்திவிடலாம் என்ற நிலை. ஆபத்தை உணர்ந்த கழுகு தனது குஞ்சைக் காப்பாற்ற முனைந்தது. முதற்கட்டமாக குஞ்சைத் தனது கால்களில் தூக்கிக்கொண்டு பறக்க ஆரம்பித்தது. "நான் துன்பப்பட்டாலும் எனது குழந்தையைக் காப்பாற்ற பெருமுயற்சி செய்கிறேன். எனது பிற்காலத்தில் என் குழந்தை என்னை இப்படிக் கவனிக்குமா?" என்ற கேள்வி மனதில் எழுந்தது. உடனே மனதில் எழுந்த கேள்வியைக் குஞ்சிடம் கேட்டது கழுகு. அந்தக் குஞ்சு தாயைப் பார்த்துக் கோபத்துடன் "எப்படி நீ இந்தக் கேள்வியைக் கேட்கலாம்? உன் குழந்தையின்மீது உனக்கு எப்படி அளவிட முடியாத பாசம் உள்ளதோ, அதுபோன்றுதான் எனக்கும் என் குழந்தைகள்மீது இருக்கும். என் தாயான உன்னிடத்தில் எனக்கு அன்பு உள்ளது. என்னை வளர்க்க நீ பட்ட துன்பத்தை நான் அறிவேன். தேவைப்படும்போது என்னாலான உதவியை உனக்கு நான் செய்வேன். ஆனால் என் குழந்தைகள்மீது எனக்கு இயற்கையாகவே ஏற்படக்கூடிய பாசத்துக்கு ஈடு இணையே கிடையாது" என்றது. அதன் சொற்களில் இருந்த உண்மையைத் தாய்க் கழுகு புரிந்துகொண்டது. கீழ்நோக்கிப் பாய்வது தண்ணீரின் இயற்கை. அதுபோன்று பிள்ளைகளின்மீது பாசத்தைப் பொழிவதும் உயிரினங்களின் இயற்கை நியதி. "நான் இப்போது இதைத் தருகிறேன். நீ பின்னர் திருப்பிக்கொடு" என்பது வியாபாரம். நம்மையும் நம் குடும்பத்தையும் மட்டும் கவனித்தால் போதும் என்பதல்ல இதன் கருத்து. நமக்காக எல்லாவற்றையும் தியாகம் செய்து, நம்மை வளர்த்து ஆளாக்கிய பெற்றோருக்கு அன்புடன் சேவை செய்வது நமது தலையாய கடமையாகும். நாம் எவ்வளவுதான் செய்தாலும் அவர்கள் நம்மீது பொழிந்த அன்புக்கும் பாசத்திற்கும் எதுவுமே ஈடாகாது. இந்தத் தத்துவத்தின் அடிப்படையில்த்தான் வழிவழியாக ஜீவராசிகள் அனைத்தும் வளர்ந்து வாழ்ந்து இவ்வுலகமே இவ்வளவு காலமும் தழைத்தோங்கி இருக்கிறது.

*ஆசைக்குக் கண்ணில்லை, அது மனிதனை நரகத்தில் தள்ளிவிடும்.*

# திருச்சதகம்

(தொடர்ச்சி...

## பக்திவைராக்கிய விசித்திரம்

(திருப்பெருந்துறையிலருளிச் செய்யப்பட்டது)

மறைந்த
– சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள் –
(யாழ்ப்பாணம் – காரைநகர்)

## 05. கைம்மாறு கொடுத்தல்

47. மேலை வானவ ரும்மறி யாததோர்
கோல மேயெனை யாட்கொண்ட கூத்தனே
ஞால மேவிசும் பேயிவை வந்துபோம்
கால மேயுனை யென்றுகொல் காண்பதே.

**ப-ரை:**

மேலை வானவரும் அறியாதது ஓர் கோலமே- மேலாகிய பதவிகளிலுள்ள தேவர்களும் அறிய முடியாததாகிய ஒப்பற்ற திருக்கோலத்தையுடையவனே. எனை ஆட்கொண்ட கூத்தனே- என்னை ஆட்கொண்டருளிய திருவிளையாட்டையுடையவனே, ஞாலமே விசும்பே இவை வந்து போம் காலமே- மண்ணும் விண்ணும் இவற்றினுட்பட்ட நீர் நெருப்பு வளியும் ஆகிய ஐம்பெரும்பூதங்களும் தோன்றி ஒடுங்குவதற்குக் காரணமான காலதத்துவமாயிருப்பவனே; உனை காண்பது என்றுகொல்- அருமையில் எளியையாய் வந்து அருள் செய்த உன்னை இனிக் காண்பது எப்போது?

மேலைவானவரும் அறிதற்கரிதாகிய ஒப்பற்ற திருக்கோலத்தையுடையவனே, என்னை ஆட்கொண்டருளிய கூத்தனே ஞாலமே நீரே தீயே வளியே விசும்பே இவை தோன்றி ஒடுங்குதற்குக் காரணமான கால தத்துவமானனே; உன்னை இனிக் காண்பது எப்போது என்பதாம்.

மேலை வானவர் என்றது மேலான பதங்களிலுள்ள தேவரை அவர் திருமால் பிரமன் முதலியோர். மேலை என்பதில் ஐ- சாரியை வானவரும் என்பதில் உம்மை உயர்வு சிறப்பு. அறியாதது- அறியமுடியாதது. வினையாலணையும் பெயர். அறியாதது ஆகிய கோலம், ஓர் கோலம் எனத் தனித்தனி இயையும், வானவரும் அறிய முடியாத ஒப்பற்ற திருக்கோல முடையனாதலின், மேலை வானவரும் அறியாதது ஓர் கோலமே என்றார்.

"பூவேறு கோனும் புரந்தரனும் பொற்பமைந்த
நாவேறு செல்வியு நாரணனு நான்மறையும்
மாவேறு சோதியும் வானவருந் தாமறியாச்
சேவேறு சேவடிக்கே சென்றூதாய் கோத்தும்பி"

கோத் 1.

"முன்னாய மாலயனும் வானவருந் தானவரும்
பொன்னார் திருவடி தாமறியார்" பூவல்லி 17.

"பங்கயத் தயனுமா லறியா நீதியே" அருட் 1.

என அடிகள் பிறாண்டு அருளியவாறுங் காண்க.

*அன்பில் கரைந்துவிடு. அது உன்னைச் சொர்க்கத்தில் சேர்த்துவிடும்.*

அடிகளை ஆட்கொண்டதும் மதுரை இறைவனது அறுபத்துநான்கு திருவிளையாடல்களுள் ஒன்றாதல் "எனை ஆட்கொண்ட கூத்தனே" என்பதனால் அறியப்படும். ஆட்கொண்டமையே இங்கு இறைவன் செய்த கூத்தாகலின் திருவிளையாட்டாதல் இனிது புலனாம். ஞாலமே விசும்பே என்றருளியமையால் அவற்றினிடைப்பட்ட நீர் நெருப்பு காற்று என்னும் ஏனைய பூதங்களும் கொள்ளப்படும். ஏகாரங்கள் எண்ணுப்பொருளன. வந்துபோதல்- தோன்றி ஒடுங்குதல். காலம்- காலதத்துவம். அது, அதனை இயக்குகின்ற இறைவனை உணர்த்தியது. இறைவன் அருட்டிருமேனி கொண்டு ஆட்கொண்டருளி மறைந்தமையின் "உனை என்று கொல் காண்பது" என்பது ஆராமை மிகுதியால் அருளியதாகும்.

இதன்கண், உனை என்றுகொல் காண்பதே என்றதனால் கைம்மாறு கொடுக்க முடியாது வருந்துதலும் புலப்படுதலின் கைம்மாறு கொடுத்தல் என்னும் ஐந்தாம்பத்து நுதலியபொருள் புலப்படுமாறு காண்க. 43.

48. காண லாம்பர மேகட் கிறந்ததோர்
வாணி லாப்பொரு ளேயிங்கொர் பார்ப்பெனப்
பாண னேன்படிற் றாக்கையை விட்டுனைப்
பூணு மாறறி யேன்புலன் போற்றியே.

**ப-ரை:**

காணல் ஆம் பரமே- நின் அருளாற் காண்டற்குரியதாகிய மேலாகிய பொருளே, கட்கு இறந்தது ஓர் வாள் நிலா பொருளே- கண் ஒளிக்கு அடங்காததாகிய ஒப்பற்ற பேரொளிப் பொருளே, பாணனேன்- வீணானாகிய யான் புலன் போற்றி- ஐம்புல இன்பங்கள் என்னைப் பற்றாது பாதுகாத்து, இங்கு ஓர் பார்ப்பு என- இவ்வுலகத்தே குடம்பை தனித்தொழியப் பறந்து செல்லும் ஒரு பறவைக் குஞ்சுபோல, படிறு ஆக்கையை விட்டு- பொய்யாகிய இவ்வுடம்பை நீக்கிவிட்டு, உன்னை பூணும் ஆறு அறியேன்- உன்னைப் பொருந்தும் வழியை அறியாதவனாயினேன்.

நின் அருளாற் காண்டற்குரியதாகிய மேலான பொருளே, கண் ஒளிக்கு அடங்காததாகிய ஒப்பற்ற பேரொளிப் பொருளே, பாணனேன் ஐம்புலவின்பங்கள் என்னைப் பற்றாது பாதுகாத்து இங்கு ஓர் பார்ப்பெனப் பொய்யாகிய இவ்வுடம்பை நீக்கிவிட்டு உன்னைப் பொருந்தும் வழியை அறியாதவனாயினேன் என்பதாம்.

எல்லாப் பொருட்கும் அப்பாலாய இறைவனது அருட்குருமேனியை அவனருளாலே தாம் கண்டமைபற்றிக் "காணலாம் பரமே" என்றார். பரம்- எல்லாப் பொருட்கும் அப்பாலாயவன்; திருக்கோவை 251 உரை. "அவனருளே கண்ணாகக் காணினல்லால்" (நாவு 311:9) எனத் தேவாரத்து வருதலும் ஈண்டைக்கேற்ப அறியற்பாலது. வாள் நிலா- ஒருபொருட் பன்மொழி; பேரொளியைக் குறித்தது. பேரொளியையுடைய பொருளை அற்ப ஒளியையுடைய கண் காணமாட்டாது தம் ஒளி மழுங்குதல் பற்றிக் "கட்கிறந்ததோர் வாணிலாப் பொருளே" என்றார்.

இங்கு- இந்நிலவுலகத்து, இங்கு பூணுமாறறியேன் என இயையும். பார்ப்பு- பறவைக் குஞ்சு. "அவற்றுட், பார்ப்பும் பிள்ளையும் பறப்பவற்றிளமை" என்பது தொல்காப்பியம் (மரபு 4) பார்ப்பென என்றது தனக்காதாரமாயிருந்த முட்டையோட்டினை விடுத்துச் செல்லும் குஞ்சுபோல என்றவாறு. உடம்பினுள் வேற்றுமையின்றி நின்றே பின் புகாமற் போதலின்

பார்ப்பு உயிர்க்குவமையாயிற்று பார்ப்பென ஆக்கையை விட்டு என இயையும். பறவைக் குஞ்சைக் கூறினார் பறந்துபோதற்றொழிலான் உயிரோடொப்புவமையெய்துவது அதுவே யாகலின்.

பாழ்நன் என்பது பாணன் என மரீஇயிற்று. வாழ்நன், வாணன் என்றாயதுபோல. பாணன்- வீணன். இறைவனைப் பொருந்து வழியை அறியாது வீணே இருத்தல்பற்றி அடிகள் தம்மைப் "பாணன்" என்றார். படிறு- பொய்; என்றது நிலையின்மையை. ஆக்கை- என்பு நரம்பு முதலியவற்றால் கட்டப்பட்டது. பூணுதல்- பொருந்துதல். பூணுமாறு என்பதற்கு உன் திருவடியைப் பொருந்துமாறு எனினுமமையும். ஆக்கையை விட்டுப் பூணுமாறு அறியேன் என்பதற்கு ஆக்கையை விடுதற்கும் உன்னைப் பொருந்துதற்கும் வழியை அறியேன் என் பது கருத்தாகக் கொள்க. "மண்மேல் யாக்கை விடுமாறும், வந்துன் கழற்கே புகுமாறும்" (குழைத் 9) என வருதல் ஈண்டறியற்பாலது. போற்றுதல்- பாதுகாத்தல். "அனையவை போற்றி நினைஇயன நாடிக்காண்" (கலி 15:23) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. புலன் போற்றுதல்- ஐம்புல இன்பங்கள் தம்மைப் பற்றாது பாதுகாத்தல். இறைவனை அடைதற்குப் புலன் போற்றுதல் இன்றியமையாததாகலின் "புலன்போற்றி" என்றார். புலன் போற்றிப் பூணுமாறு என இயையும்.

இதன்கண், தம்மை ஆட்கொண்டருளிய இறைவனுக்குக் கைம்மாறு கொடுக்கும் நெறியின்றி வருந்தும் அடிகள் பாணனேன் படிற்றாக்கையை விட்டு உனைப் பூணுமாற்றினை யாவது அறியாதவனாயினேன் என வருந்திக் கூறுதலால் கைம்மாறு கொடுத்தல் என்னும் ஐந்தாம்பத்து நுதலிய பொருள் போந்தவாறு காண்க. 44

(தொடரும்...

## அலைமோதி இசைபாடும் ஆற்றங்கரையானே

சிந்தை தனை சிந்திக்க வைக்கும் முருகா
மந்தை போல் மாழாமல் காக்கும் செவ்வேள்
எந்தை மனம் கோணாமல் வேல் கொண்டு
சொந்த பந்தம் அறுத் தெடுக்கும் கை.

கை யார் கொண்ட அறிவு சார் வேலும்
மை பூசும் விழிகொண்ட துணையும்
வை அன்பு எந்தனில் என்று கூறும் முகமுமி
சை பாடி துதிக்க நல்நெஞ்சம் தரும் தமிழும்

தை மாதம் போற்றிப் புகழ்பாட என்நெஞ்சம் துடிக்கும்
பை அரவல்குல் மடந்தையர் அருகிருக்கும் துணையும்
மை யவனனே பதியமர்ந்த சந்நிதியானவனேநி
ரை நுரை அலை மோதி யிசைபாடும் ஆற்றங்கரையானே!

-பொ. பாலேஸ்வரன்-

# வாழ்க்கைக்கு இன்பம் தரும் சிரிப்பு நலம்

– திரு குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள் –

"வாய்விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும்" என்பது ஆன்றோர் வாக்கு. "சிரித்து வாழவேண்டும், பிறர் சிரிக்க வாழ்ந்திடாதே" என்ற பாடலடி பொருள் நிறைந்தது. இதன் பொருள் உணர்ந்து, தம் வாழ்க்கையைச் சீராக நடத்தி வருபவர்களின் வாழ்வு இன்பம் நிறைந்ததாகவே என்றும் நிலைத்திருக்கும்.

சிரிப்பு, இன்பத்தின் வெளிப்பாடு. மகிழ்ச்சி சிரிப்பாக மலர்கிறது. உள்ளத்து உவகை; உதட்டில் புன்முறுவல் ஆகவும்; முகத்தில் புன்னகையாகவும் ஒளி வீசுகின்றது. புன்னகை, பொன் நகைகள் தரும் அழகைக் காட்டிலும், பன்மடங்கு அழகையும் பொலிவையும் தருகின்றது. "அகத்தின் அழகு முகத்தில் தெரியும்" என்பது ஔவை மொழி. அகத்தின் அலங்கோலமும் முகத்தில் விகாரமாகத் தெரியும் என்பது அனுபவம் மூலம் பெறப்பட்ட உண்மை. அழகு என்பதன் மறுபெயர், ஒழுங்கு; அலங்கோலம் காட்டுவது ஒழுங்கீனம்.

மனிதனின் மனத்திலும், பேச்சிலும், செயலிலும் ஒழுங்கு இருப்பின்; வாழ்க்கையும் ஒழுங்காக விளங்கும். மனம் ஒழுங்காக இருக்கும்போது, மனத்தில் நேர்மறை எண்ணங்களே தோன்றும். இத்தகைய தூய எண்ணங்கள், சிந்தனைகள், நல்லுணர்வுகள் என்பன மனிதனின் பேச்சிலும், செயலிலும், நடத்தைகளிலும் வெளிப்பாடாகின்றன. விளைவு; இன்பமே எந்நாளும், துன்பம் இல்லை என்னும் அதி உன்னதநிலை; மனித வாழ்வில் எய்தப்படுகிறது. இன்பத்தின் அறிகுறி முகமலர்ச்சி, புன்னகை, சிரித்து வாழ்தல் ஆகும். வாழ்க்கையில் நல்லொழுக்கம் பேணி வாழ்தலின் பயனாக, இன்பம், மகிழ்ச்சி, சிரிப்பு, அமைதி, நிம்மதி, நிறைவு என்பன கிடைக்கப் பெறுகின்றன. சிரிப்பு மனித குலத்திற்கு மட்டுமே உரித்தானது. வேறெந்த உயிரினத்தினாலும், சிரித்து வாழ முடிவதில்லை.

தற்காலத்தில், மனிதர்களின் ஒழுங்கீனங்கள், நடத்தைப் பிறழ்வுகள் என்பன காரணமாக; எங்கே மகிழ்ச்சி, அமைதி, சிரிப்பு, புன்னகை, நிம்மதி, மன ஆரோக்கியம் என்பன பறிக்கப்பட்டு விடுமோ என்னும் அச்சம் வரவர அதிகரித்து வருகிறது. மனம் மாசடைதல்; சூழல் மாசடைவதற்குப் பிரதான காரணம் ஆகும். விளைவுகளை ஆராயாமல், வினைகளைச் செய்வதில் தற்கால மனிதர்கள் விற்பன்னர்களாக விளங்குகின்றனர். இன்றைய இயற்கைச் சீற்றங்கள், அழிவுகள், அனர்த்தங்கள், பல்வேறு கொடிய நோய்கள்; மற்றும் பல்வேறு சமூக, அரசியல், பொருளாதாரப் பிரச்சினைகள் அனைத்திற்கும் மனிதர்களின் மனங்கள் அழுக்காறு, பேராசை, கடும் தற்பற்று மற்றும் பொருட்பற்று, முறையற்ற பால் கவர்ச்சி, வஞ்சம், வெறுப்புணர்ச்சி போன்ற மனமாசுக்கள், மன அழுக்குகள் என்பவற்றால் நிரப்பப்பட்டிருத்தலே பிரதான காரணம்.

மனிதர்களின் நேர்மறை எண்ணங்கள் உற்பத்தித்திறன், "கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆகிவிட்ட கதையாகி" விட்டது. அதேவேளை, எதிர்மறை எண்ணங்கள்

*பணத்தை இழந்தால் சொற்ப நஷ்டம்; நேரத்தை இழந்தால் எல்லாமே நஷ்டம்.*

உற்பத்தித் திறன் தற்காலத்தில் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாகப் பல்கிப் பெருகிப் பாரிய வளர்ச்சி கண்டு வருகிறது. அதேவேளை, பிறரின் தகாத செயல்களையும், நடத்தைப் பிறழ்வுகளையும்; கண்டும் கேட்டும் எள்ளி நகையாடுபவர்கள் தொகை பன்மடங்கு அதிகரித்துவிட்டது. பிறரில் குற்றங் குறைகளைக் கண்டு எள்ளி நகைப்பவர்கள்; தம்மிலும் அதே குற்றங் குறைகள் நிரம்பி வழிகின்றன என்பதைத் தெரிந்து கொள்ளவோ, தெரிந்து திருத்திக் கொள்ளவோ ஏனோ மறுக்கிறார்கள் என்பது தான் அவிழ்க்கமுடியாத பெரும் புதிராக, தற்காலத்தில் மனிதர்களை எதிர்கொள்கின்றது. இன்று, அநேகமாக எல்லோருமே ஏதோ விதத்தில், பிறர் சிரிக்க வாழ்ந்துகொண்டு தான் இருக்கிறார்கள்; எள்ளிநகையாடுபவர்கள் உட்பட. இதிலிருந்து பெறப்படும் ஓர் உண்மை என்னவெனில் பிறரின் குற்றங் குறைகளைக் கண்டுபிடித்து, எள்ளிநகையாடுபவர்கள்; சிரித்து மகிழ்பவர்கள்; தாமும் அதே குற்றங்களைச் சலிக்காமல், புதிய புதிய உத்திகளைக் கையாண்டு, தொடர்ந்து செய்துகொண்டுதான் இருக்கிறார்கள் என்பதாகும். கண்ணாடி வீட்டில் வசிப்பவர்கள், மற்றொரு கண்ணாடி வீட்டிற்கு ஒருபோதும் கல் எறியக்கூடாது. அது தமக்கே ஆபத்தாக முடியும் என்பதால்த்தான் முன்னோர்கள் இப்படிக் கூறிவைத்துள்ளார்கள். ஆனால், தற்காலத்தவர் பலர் தன் புத்திபூர்வமாகவும் செயற்படுவதில்லை; ஆன்றோர் அறிவுரைகளையும் கேட்டு நடப்பதில்லை என்று உறுதிமொழி எடுத்துவிட்டார்கள் போல்த் தோன்றுகிறது. இந்த உறுதிமொழியில் மட்டும், அவர்கள் தங்கள் நேர்மைத்திறனை வெளிப்படுத்தி வருகிறார்கள்.

ஆரோக்கிய மனம், உடல் ஆரோக்கியத்திற்கும், உறுதுணையாக அமைகின்றது. உடலும் உள்ளமும் ஆரோக்கியமாக இருப்பின், வாழ்வில் இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை எனும் உன்னதநிலை எய்தப்பட்டு விடும். அப்பொழுது மகிழ்ச்சி, சிரிப்பு என்பன மனிதரில் குடிகொண்டிருக்கும். ஆரோக்கியம் குன்றியிருக்கும்போது துன்பம், துயரங்கள், அழுகை என்பன மனிதரைப் பற்றிப்பிடித்துக் கொள்கின்றன. அவற்றிற்கு இடமளித்து, ஆதரவு கொடுத்தால் பின் அவற்றைத் தொலைப்பது சிரமமான காரியம். அவற்றை முளையிலேயே கிள்ளி எறிந்து விடுவதே புத்திசாலித்தனம்.

நாம் சிரித்து மகிழும்போது இன்பம் துய்க்கிறோம். அதேவேளை, பிறர் சிரித்து மகிழும்போது நாம் பிறர் இன்பத்தைக்கண்டு பொறுக்கமுடியாமல் துன்புறுகிறோம். எரிச்சல், பொறாமை, வெறுப்பு முதலிய தீய குணங்களின் ஆதிக்கமே இதற்குக் காரணம். பொதுவாகவே, ஆமை என்னும் பிராணி, வீட்டிற்குள் புகுந்தால், ஏதோ கஷ்டங்கள், கெடுதிகள், இழப்புக்கள் சம்பவிக்கப்போவதற்கு அறிகுறி என்று அச்சம் தெரிவிப்பது நம்மிடையே நெடுங்காலமாக இருந்து வருகிறது. கெட்ட நிமித்தமாக, எண்ணிக்கொண்டு அதற்குரிய பரிகாரங்களில் ஈடுபடுவர். நன்கு சிந்தித்துப் பார்த்தால் நம் முன்னோர்கள் கூறிவைத்த ஆமைவேறு; இன்று நாம் கருதுகின்ற ஆமை வேறு என்பது தெரியவரும். இன்று நாம் ஆமை என்று கூறுவது நீரிலும் நிலத்திலும் வாழுகின்ற பிராணியையே யாகும். அந்த ஆமையை அபசகுனம் எனக் கொள்வது தவறு; அறியாமையின் விளைவு. மூடநம்பிக்கையின் உச்சக்கட்டம். அறிவுபூர்வமாகச் சிந்தித்துத் தெளிந்தால்; பொறாமை, அழுக்காறாமை, அறியாமை, கல்லாமை போன்ற "ஆமை"களையே; நம் அகம் ஆகிய மனத்திற்குள் புகுவதற்கும், அங்கு நிரந்தரமாகத் தங்கி விடுவதற்கும் அனுமதிக்கக்

*நல்லவனாக இருக்கலாம், ஆனால் மௌனியாக இருக்கக்கூடாது.*

கூடாது எனக் கருதியே நம் முன்னோர், "ஆமை புகுந்த வீடு" என்னும் கூற்றினை முன்வைத்தனர்.

அதேவேளை, இன்னா செய்யாமை, கள்ளாமை, பொய்யாமை, புறங்கூறாமை, வெகுளாமை, வெருவந்த செய்யாமை, கொல்லாமை, புலாலுண்ணாமை, பிறன்மனை நோக்காமை, வன்சொல் வழங்காமை, மது அருந்தாமை, செய்நன்றி மறவாமை, திருடாமை, தீயோருடன் சேராமை- இவைபோன்ற "ஆமை" களை நம் அகம் ஆகிய மனங்களில் நிரந்தரமாகக் குடியிருத்தி, பேணிப் பாதுகாத்து நன்கு ஓம்பி வருவோமானால், நம் வாழ்வு சிறக்கும். அறநெறி வாழ்வு சித்திக்கும். இவ்வாறு மனிதர்கள் எல்லோரும் தூய வாழ்வு வாழ்ந்து வந்தால், "வான்முகில் வழாது பெய்யும்; நாடு செழிக்கும்; எல்லா வளங்களும் நலங்களும் நிறைவாகக் கிடைக்கப்பெறும். அரசாட்சி நல்லாட்சியாக, நல்லிணக்கம் சிறக்க வேற்றுமைகள் களையப்பெற்று சமத்துவம், சகோதரத்துவம், புரிந்துணர்வு, ஐக்கியம், ஒருமைப்பாடு என்பன மக்களிடையே உறுதிபெறும். மக்கள் தங்கள் கடமைகள், உரிமைகள், பொறுப்புக்கள் என்பவற்றை அறிந்து; யாவருடனும் நல்லுறவு பேணி, அமைதி, மகிழ்ச்சி, நிறைவு ததும்ப இன்பமாக வாழ்வர் என்றும், அன்றலர்ந்த செந்தாமரை மலர்போன்று முக மலர்ச்சியுடன், புன்னகை தவழ, ஆனந்த வாழ்வு சித்திக்கும். இன்பமும் துன்பமும்; சிரிப்பும் அழுகையும் வெளியிலிருந்து வருவதில்லை. அகத்திலிருந்துதான் வெளிவீசுகின்றன. அகம் ஆகிய மனத்தின் தன்மையைப் பொறுத்தே, அதற்கேற்ப இன்ப, துன்பங்களும், அவற்றின் வெளிப்பாடாக; சிரிப்பும், அழுகையும் அமைகின்றன.

"சித்திரமும் கைப்பழக்கம்; செந்தமிழும் நாப்பழக்கம்" என்று கூறுவதுபோல, இன்பமும் துன்பமும்; சிரிப்பும் அழுகையும் மனப்பழக்கம் எனலாம். மனம் நல்லமனம், தீயமனம் என்று பிரிவுபட்டுப்போய் உள்ளது. நல்லமனம் அமைந்துவிட்டால் நல்ல எண்ணம், இன்சொல், நல்ல செயல் என்பன விளைச்சலாகப் பெறப்படுகின்றன. எனவே நல்ல மனம் வாய்க்கப்பெற்றவர்கள், சிரித்து இன்பமாக வாழ்கிறார்கள். கெட்ட மனம் கொண்டவர்களின் வாழ்க்கை, துன்பங்கள் துயர்கள் நிறைந்ததாக அமைந்து விடுகிறது. அதனால் அழுதுகொண்டே வாழ்கின்றார்கள். இன்ப துன்பங்களுக்கு அவரவர் மனங்களே காரணம் ஆகும். மனத்தைச் செம்மையாக வைத்துக்கொள்ளத் தவறுகின்ற மனிதர்கள் தமக்கும் சமுதாயத்திற்கும் கெடுதி செய்கின்றனர்.

தற்கால உலகம்; விஞ்ஞான, தொழில்நுட்ப அறிவு திறன்களின் வளர்ச்சியில் மிக வேகமாக விருத்திபெற்றும், தினம் தினம் பல்வேறு இடர்பாடுகள், இன்னல்கள், அவலங்கள் ஆகியவற்றில் சிக்கித் தவிக்கிறது. இதன் காரணத்தை ஆராய்ந்தால், கெட்ட மனம் கொண்டவர்களின் தொகை பெரிதும் அதிகரித்து வருவதேயாகும் என்பது தெரியவரும். அறிவின் பெருவளர்ச்சி, நெஞ்சத் தூய்மையின் அடித்தளத்திலிருந்து, ஏற்படாவிட்டால் அழிவுக்குத்தான் பெரிதும் பயன்படும். இந்நிலைமையைத்தான் இன்று நிதர்சனமாகக் கண்டுகொண்டு இருக்கிறோம். மனிதன் கண்டுபிடித்த அணுகுண்டுகளுக்கும், போர்க் கருவிகளுக்கும் மனிதன் அஞ்சி அஞ்சித் தினந்தினம் செத்துப்பிழைத்துக் கொண்டு இருக்கிறான். உலகம் எந்த நேரத்திலும், அழிவிற்குள்ளாகலாம் என்ற அச்சம் ஒவ்வொரு மனிதனையும் கசக்கிப் பிழிந்து உபத்திரவம் கொடுத்துக் கொண்டிருக்கிறது. பல்வேறு புதுப்புது நோய்களுடன் அடிக்கடி இடம்பெறும் இயற்கைச் சீற்றங்களும் மனிதர்களை வாட்டி வதைக்கின்றன. இவற்றின்

காரணம் மனிதனின் அறிவு, ஆற்றல் மனப் பாங்கு, திறன்கள் என்பவற்றின் பெரு வளர்ச்சி, ஆன்மீகம், மனித விழுமியங்கள், அறநெறிகள், இறையுணர்வு என்பவற்றைப் புறந்தள்ளி அலட்சியப்படுத்திவிட்டு; ஏற்பட்டமையே யாகும். "அறிவு அற்றங்காக்கும் கருவி" என்பது வள்ளுவர் வாக்கு. இன்று, "அறிவு அழிக்கும் கருவி"யாக மாறிவிட்டமை மனிதனின் புல்லறிவாண்மையின் உச்சக் கட்டம். "கட்டுண்டோம், பொறுத்திருப்போம், காலம் மாறும்; தருமத்தையப்போது வெல்லக் காண்போம்" என்னும் மகாகவி பாரதியாரின் அமுதவாக்கு, உலகத்தவர்க்கு நம்பிக்கை ஒளியாக விளங்கட்டும்.

"வாழ்க வளமுடன்"
"வாழ்க வையகம்"

## அரசனும் சவரத்தொழிலாளியும்

ஒரு சவரத்தொழிலாளி ஓர் அரசனுக்குச் சவரம் செய்துகொண்டிருந்தபோது, தன் நாட்டு மக்களின் நிலைகுறித்து சவரத் தொழிலாளியின் கருத்தைக் கேட்டார். "எனது குடிமக்கள் அனைவரும் வளமையாகவும், மகிழ்ச்சியாகவும் உள்ளார்களா? என்று வினவினார் அரசர். "ஆமாம் மகாராஜா" என்று பதில் சொன்னான் சவரத்தொழிலாளி. "நம் நாட்டில் மிகவும் வறிய ஏழைகள்கூட எலுமிச்சை அளவு தங்கம் வைத்திருக்கிறார்கள்" என்றும் சவரத்தொழிலாளி கூறினான். அரசர் அதுகேட்டு ஆச்சரியப் பட்டுப்போனார். சவரத்தை முடித்துத் தொழிலாளி சென்றதும், தனது மூத்த, மதியுக மந்திரியை அழைத்தார் அரசர்.

"நமது நாட்டில் உள்ள மக்கள் அனைவரும் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள் என்று நான் நம்புகிறேன். ஆக, நான் ஒரு நல்ல ராஜா!" அரசர் பெருமிதத்தோடு தெரிவித்துக் கொண்டார். அரசர் எப்படி அவ்வாறு நம்புகிறார் என்பதை ஆராய்ந்து அறிந்த அமைச்சர், மக்களின் நிலைகுறித்த கருத்தை நம்பவில்லை. ஒருநாள் அமைச்சர், சவரத் தொழிலாளி இல்லாத நேரத்தில் அவனது வீட்டுக்குள் புகுந்துவிட்டார். அங்கே ஒரு பையில் எலுமிச்சை அளவில் ஒரு தங்க உருண்டை இருப்பதை அமைச்சர் கண்டார். "சவரத் தொழிலாளி அப்படிக் கூறியதற்கான காரணத்தைக் கண்டுபிடித்துவிட்டேன்" என்று தனக்குள் சொல்லிக் கொண்டார் அமைச்சர். பின்னர் அவர் அந்த தங்க உருண்டையை எடுத்துக் கொண்டு சத்தம் போடாமல் அரண்மனைக்குத் திரும்பிவிட்டார். அரசனிடம் தான் செய்ததைக் கூறி சவரத் தொழிலாளியிடம் மறுநாள் முன்புகேட்ட கேள்வியையே கேட்குமாறும், அவன் தனது கருத்தை மாற்றிக்கொண்டிருப்பான் என்றும் அமைச்சர் கூறினார்.

அடுத்தநாள், தொலைந்த தங்கத்தைத் தேடி அலுத்துக் களைத்துப் போயிருந்த சவரத் தொழிலாளி தாமதமாக அரண்மனைக்கு வந்தான். அவன் வாடிப்போன முகத்தோடு அரசருக்குச் சவரம் செய்யத் தொடங்கினான். குடிமக்களின் நிலை எப்படி இருக்கிறது என்று முந்திய நாள் கேட்ட கேள்வியையே மறுபடி கேட்டார் அரசர்.

"மகாராஜா, எல்லோரும் சந்தோஷமாக இருக்கிறார்கள் என்று கூறமுடியாது. சிலர் மன அமைதியின்றி கவலையால் தவித்துக்கொண்டிருக்கிறார்கள்!" என்றான் சவரத் தொழிலாளி. உடனே அரசர், ஒவ்வொரு மனிதனும் தனது சூழ்நிலையின் அடிப்படையிலேயே உலகத்தைப்பற்றிக் கணிக்கிறான் என்பதை அரசர் உணர்ந்தார். அந்த உண்மையை உணரவைத்த அமைச்சருக்கும் அரசர் உரிய பரிசளித்துக் கௌரவித்தார்.

*மனிதனிடம் ஏற்கனவே இருக்கின்ற தெய்வீகத்தை வெளிப்படுத்துவது மதம்.*

(தொடர்ச்சி...)

# உமாபதி சிவம் அருளிய திருவருட்பயன்

(விரிவான பொருளுரையும் தெளிவுரையும்)

முனைவர் ஆ. ஆனந்தராசன்



## 67. பளிங்குத் தூண்

தனக்கு நிழல் இன்றா ஒளி கவரும் தம்பம்
எனக் கவர நில்லாது இருள்.

**பொருள்:**

உச்சி வேளையில் பளிங்குத்தூண் பிற பொருள்களின் நிழல்கள் தன்னிடத்தில் படியாதபடி சூரியவொளி ஒன்றையே கவர்ந்து நிற்கும்.

அப்பளிங்குத் தூண்போல், உயிர் தன்னிடத்தில் பிற உணர்வுகள் சிறிதும் எழாதபடி திருவருள் ஒன்றையே முழுதுமாகப் பற்றி நிற்குமாயின் மல இருள் அடியோடு நீங்குவதாகும்.

**சொற்பொருள்:**

தனக்கு நிழல் இன்றா- (பளிங்குத்தூண்) உச்சி வேளையில் தன்னிடத்தில் பிற பொருள்களின் நிழல் பொருந்தாதபடி, ஒளி கவரும் தம்பம் என- சூரியனது ஒளி ஒன்றையே கவர்ந்து நிற்கும். அவ்வாறு கவர்ந்து நிற்கின்ற பளிங்குத் தூண்போல, கவர- உயிர் தன் னிடத்தில் பிற உலகவுணர்வுகள் பொருந்தாதபடி முதல்வனது திருவருள் ஒன்றையே பற்றி நிற்குமாயின், இருள்- அஞ்ஞானத்தைச் செய்யும் ஆணவ மலமாகிய இருள், நில்லாது- அடியோடு நீங்கும்..

**விளக்கம்:**

**திருவருளை முழுதுமாகப் பற்றி நிற்றல்:**

பளிங்குத் தூண் காலை வேளையில் சூரிய ஒளியைக் கிழக்குப் பக்கத்தில் கவர்ந்து நிற்கும். பிற பக்கத்தில் வேறு பொருள்களின் நிழலைத் தன்னிடம் கொண்டிருக்கும். மாலை வேளையிலும் இவ்வாறே அது சூரிய ஒளியை மேற்குப் பக்கத்தில் மட்டும் கவர்ந்து மற்றப் பக்கங்களில் வேறு பொருள்களின் நிழலைக் கொண்டிருக்கும். உச்சிவேளை யில்த்தான் அத்தூண் சூரிய ஒளியை முழுதுமாகக் கவர்ந்து நிற்கும்; சூரிய ஒளியில் முழுமையாக மூழ்கி நிற்கும் அப்பொழுது வேறு பொருள்கள் அருகில் இருந்தாலும் அவற்றின் நிழல்களை அது கவர்வதில்லை.

*கபடம் இல்லாத நாத்திகன் வஞ்சகனைவிடச் சிறந்தவன் ஆவான்.*

சூரியவொளியில் மூழ்கி ஒளிமயமாய்த் திகழும் அப்படிகத் தூண்போல உயிர் தன்னை முதுதுமாகத் திருவருளில் கொடுத்துத் திருவருள் ஒன்றையே பற்றி நிற்குமாயின், பிற பொருள்களின் நிழல்கள் படிகத்தூணைப் பற்ற மாட்டாததுபோல, வேறு உணர்வுகள் அவ்வுயிரைப் பற்றமாட்டா.

இதற்கு இலக்கியமாக வாழ்ந்த ஒருவரைக் குறிப்பிடலாம். அவர் திருக்கடவூர் என்ற ஊரினர்; சிறந்த சிவபக்தர். பெருமானுக்குக் குங்குலியத் தூபம் இடும் பணியைச் செய்து வந்தவர். வறுமை அவரது வாழ்வில் புகுந்தது. உணவுக்கும் வழியில்லாத நிலை. வீட்டில் உள்ள எல்லாவற்றையும் விற்றாயிற்று. இனி விற்பதற்கு ஒன்றும் இல்லை. பிள்ளைகள் இரண்டு நாளாகப் பட்டினி கிடந்தனர். அதனைப் பொறாத அவரது மனைவியார், தம்முடைய தாலியைக் கழற்றிக் கொடுத்து, அதனை விற்று நெல் வாங்கி வருமாறு கூறினார்.

அடியவர் அதனைப் பெற்றுக்கொண்டு கடை வீதிக்குச் சென்றார். வழியில் ஒரு வணிகனைக் கண்டார். அவன் வைத்திருந்ததோ குங்குலியப்பொதி. அவருக்கு இதைவிட வேறு என்ன வேண்டும்? மனைவி, மக்கள், பசி, பட்டினி முதலிய உலக உணர்வுகள் அவரைவிட்டு அகன்றன. திருவருள் உணர்வு அவரை விழுங்கிவிட்டது. தன்னையே இழந்து நின்ற அவரிடம் சிவ நினைவு ஒன்றே ஓங்கி நின்றது.

தாலியைக் கொடுத்துக் குங்குலியத்தைப் பெற்றுக்கொண்டார். சிறிதும் நிற்கவில்லை. மகிழ்ச்சியோடு விரைந்து கோயிலுக்குச் சென்றார்; குங்குலியப் பணி செய்து அங்கேயே தங்கிவிட்டார்.

சிவசிந்தனையில் மூழ்கி உணர்வுகளுக்கு இடங்கொடாமல் நின்ற அவரது நிலை, சூரியவொளியை முழுதும் பெற்று நின்ற பளிங்குத் தூணின் நிலைபோன்றது என்று சொல்லலாம்.

### இருள் நில்லாது:

பெத்த நிலையில் உள்ள உயிர்களாகிய நாம் நமக்கு வேறானதாகிய உடம்போடு வேற்றுமையின்றிக் கூடி வாழ்கிறோம்! "வேற்று விகார விடக்கு உடம்பின் உட்கிடப்ப ஆற்றேன்" என்று சொல்லும் பக்குவம் நமக்கு இல்லை. அதனைப் பிரிய மனமில்லை. அதுவே நாம் என்று இருக்கிறோம்; அந்த அளவுக்கு அதனோடு ஒற்றுமைப்பட்டிருக்கிறோம். ஆனால், உயிருக்கு இனிய உறவுப் பொருளாக, என்றும் உடனாக இருப்பவனாகிய இறைவனோடு ஒன்றுபட்டு நிற்கத் தெரியவில்லை நமக்கு. அது ஏன்?

அவனோடு ஒன்றுபட்டு நிற்க வொட்டாதபடி செய்வது ஆணவ மலமாகும். பெத்த நிலையில் அம்மலம் உயிரை வன்மையாய்ப் பற்றி நின்று அதன் அறிவை மயக்கி, "நான் இறைவனுக்கு வேறாக உள்ள தனியொரு முதல்" என்று கருதும்படியாகச் செய்கிறது.

பின், ஞானாசிரியரை அடைந்து அருளுபதேசம் பெற்ற காலத்தில் ஆணவ மலம் நீங்குகிறது. நீங்கினாலும் அது வாசனையளவாய் நிற்கும். அந்த நிலையிலும் அது உயிருக்குச் சிவானுபவம் விளையவொட்டாது தடுக்கும். அ∴து எங்ஙனம் எனில், உயிர் பதியாகிய சிவத்தை அதன் அருளையே கண்ணாகப் பெற்று அறியுமிடத்து "யான் பதியை எனது அறிவால் அறிகின்றேன்" எனத் தன்னையும், தன் அறிவையும் உணரச் செய்வது மல வாசனையேயாகும். இங்ஙனம் ஆன்மா தன்னையும், தனது அறிவையும் வேறு வேறாகப்

பகுத்து உணரின் சிவானுபவம் இல்லையாகும். இங்ஙனம் வேறு வேறாகப் பகுத்துக் காணுதலை விடுத்து ஆன்மா தன்னையும் தன்னறிவையும் மறந்து பதி ஒன்றையே உணர்ந்து அதில் அழுந்துவதே சிவானுபவ நிலையாகும்.

இச்சிவானுபவ நிலைய எய்த ஒட்டாதபடி செய்வது மலவாசனையே என்பது இதனால் விளங்கும். அவ் வாசனை திருவருளோடு உயிர் முற்றிலுமாக ஒன்றுபட்டு நிற்கும்போதே அடியோடு நீங்கும். இதனையே "நில்லாது இருள்" எனக் குறிப்பிட்டார் ஆசிரியர்.

மலவாசனையே உயிரைப் பற்றியுள்ள மாசு- ஆகும். அம் மாசு அடியோடு நீங்குமாறு திருவருளை முற்றுப் பெறுதலே உயிர் விளக்கம் அடைதற்கு வழியாகும் என்பது இச் செய்யுளில் உணர்த்தப்பட்டது.

## 68. பின் நிற்றல்

உற்கை தரும் பொற்கை உடையவர்போல் உண்மைப்பின்
நிற்கை அருளார் நிலை.

**பொருள்:**

இருளில் நடப்போர் தீப்பந்தத்தை ஏந்தி வருகிறவன் முன்னே செல்லத் தாம் அவன் பின்னே செல்வர். அதுபோலப் பாசப் பற்றாகிய இருளை விலக்கி ஞான நெறியிற் செல்லும் உயிர்களுக்கு உதவியாக இறைவன் தனது திருவருள் ஒளியை வழங்கி வருகின்றான். உயிர் அவனுக்குப் பின் நிற்றலே திருவருளை முற்றுப்பெறும் முறையாகும்.

**சொற்பொருள்:**

உற்கைதரும்- (இருளில் நடப்போர்) தீப் பந்தத்தை ஏந்திவரும், பொற்கை உடையவர்போல்- அழகிய கையை உடையவன் முன்னே வழிகாட்டிச் செல்ல, அவனுக்குப் அவன் பின்னே நடப்பதுபோல, உண்மைப் பின் நிற்கை- பாச இருளை விலக்கி ஞான நெறியில் செல்லும் உயிர்கள் தமக்கு உதவியாகத் திருவருள் ஒளியை வழங்கி வருகின்ற மெய்ப்பொருளாகிய முதல்வனுக்குப் பின்னே நிற்பதே, அருள் ஆர் நிலை- அவனது திருவருளை நிரம்பப் பெறும் முறையாகும்.

**விளக்கம்:**

உற்கை என்பது எரிகொள்ளியைக் குறிக்கும். உண்மை என்பது மெய்ப்பொருளாகிய இறைவனை உணர்த்திற்று.

உண்மைப் பின் நிற்றலாவது, எச்செயலைச் செய்யினும் தன் முனைப்பால் யான் செய்கின்றேன் எனக் கருதிச் செய்யாது "அவன் செய்விக்கின்றான் செய்கின்றேன்; ஆதலால் அச் செயலால் வரும் நன்மை தீமை, இன்பம் துன்பம், புகழ் இகழ் ஆகியவற்றுள் எதுவும் என்னுடையதன்று; எல்லாம் அவனுடையதே" என இவ்வாறு உணர்ந்து நிற்றல் ஆகும்.

மக்களிடத்திலே ஒரு பழக்கம் உள்ளது. பேசும்போது இடையிடையே "நம் கையில் என்ன இருக்கிறது? எல்லாம் அவன் பார்த்துக்கொள்வான்" என்று அடிக்கடி சொல்வார்கள். ஒருவர் வீடு கட்டி முடிக்கிறார்; புதுமனை புகுவிழா நடைபெறுகிறது. வந்திருந்த நண்பர்

ஒருவர் "வீட்டை நன்றாகக் கட்டியிருக்கிறீர்கள்" என்று பாராட்டுகிறார். அதற்கு அவர், "நானா கட்டி முடித்தேன்? ஆண்டவன் அருளால்த்தான் இது முடிந்தது" என்று சொல்லுகிறார்.

இப்படி, "நான் செய்யவில்லை, எல்லாம் ஆண்டவன் செய்கிறான். எனது செயல் என்று ஒன்றும் இல்லை. எல்லாம் ஆண்டவனுடையவை" என்று சொல்வது எளிது. அதனை வாழ்வில் அனுபவமாகக் கடைப்பிடிப்பது என்பது மிகவும் அரியது.

இந்த அரிய நிலை வருவதற்குத் தான் என்னும் தன்மையை இழந்து நிற்க வேண் டும். தனது அறிவு இச்சை செயல்களைச் சிவனது அறிவு இச்சை செயல்களுக்குள் அடங்கக் கொடுத்து நிற்க வேண்டும்.

இவ்வாறு நின்ற ஒருவர் மானக்கஞ்சாறர். அவரது ஒரே புதல்விக்கு அன்று திருமணம். வீட்டிலும் ஊரிலும் ஒரே விழாக்கோலம். மாப்பிள்ளை வீட்டார் ஊரை நெருங்கி விட்டனர். மணமகள் திருமணப்பொலிவோடு திகழ்ந்தார்.

அந்த நேரத்தில் ஒரு முனிவர் வீட்டிற் புகுந்தார். மானக்கஞ்சாறர் மகிழ்வோடு வர வேற்றார். வந்தவர் "என்ன நிகழ்ச்சி இங்கே?" என்று கேட்டார். திருமணம் நடைபெற உள் ளது என்பதை அறிந்து ஆசி வழங்கினார்.

மானக்கஞ்சாறர் தம் அருமை மகளை அழைத்துவந்து அவரது பாதங்களில் பணிவித் தார். நீண்டு தழைத்திருந்த அப்பெண்ணின் கூந்தலைப் பார்த்த முனிவர், "இது நாம் மார் பில் அணியும் வடத்திற்கு ஆகும்" எனக் கூறினார்.

கஞ்சாறர் கணமும் தயங்கவில்லை. மகள் நிலையை எண்ணி மதி கலங்கவில்லை. திருமணம் என்னாவது? என்றெண்ணித் திகைக்கவில்லை. "சிவனுடையது என்னறிவது" எனவும், "சிவனவனது என் செயலது" எனவும் நின்ற அவரிடத்தில் உலகியல் உணர்வுகள் எப்படித் தோன்றும்? அப்பொழுதே உடைவாளை உருவி மகளாரின் மலர்க்கூந்தலை அடி யோடு அரிந்து கொடுத்தார்.

இவ்வாறு தனது அறிவு இச்சை செயல் மூன்றும் சிவனது அறிவிச்சை செயல் களாகவே இருக்க வைத்துப் பயின்ற இவ்வடியார்களின் நிலையை உலகியலோடு மட்டும் பழகிய நம்மால் எவ்வாறு உணர்ந்துகொள்ள முடியும்?

முதல்வனுக்குப் பின் நிற்றலாகிய இதனை "அருளார் நிலை" என்று இங்கு குறிப் பிட்டார் ஆசிரியர். சிவப்பிரகாச நூலில் இந்நிலையைத் "தான் பணியை நீத்தல்" என்று சுட்டுவார். தன் செயலை முழுதுமாக நீத்து நிற்கும் நிலை என்பது அதற்குப் பொருளாகும்.

(தொடரும்...

**கர்ம ஞானியாய்!**

தலம் சிறக்க தர்மப்பணிகளாற்றி
நலம் சேர்ந்து நல்லடியார்களுக்கு
பலம் சேர்த்து சைவத்துக்கும் தமிழுக்கும்
காலம் போற்றும் கர்ம ஞானியாய்!
ஞாலம் போற்றும் ஞானச் சுடராய்!
கலாநிதிப் பட்டம் பெற்ற மோகன சுவாமிகள்
சேவைகள் பணிகள் வாழ்க பல்லாண்டு!

-இ. பஞ்சாமிர்தபாலன்-

*அவரவர் விதி அவரவர் கையிலே இருக்கிறது.*

# தனம் தரும், கல்வி தரும்..... .....பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே

## [புதையலும் - புதைபொருளும்]

– திரு இரா. சத்துருசங்காரவேல் அவர்கள் –

**தனம் தரும்; கல்வி தரும்; ஒருநாளும் தளர்வு அறியா**
**மனம் தரும்; தெய்வ வடிவம் தரும்; நெஞ்சில், வஞ்சம் இலா**
**இனம் தரும்; நல்லன எல்லாம் தரும்; அன்பர் என்பவற்கே;**
**கனம் தரும்; பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே!**

### பொழிப்புரை:

மேகம் போன்ற கரிய, மலர்கள் சூட்டிய கூந்தலை உடைய அபிராமித் தாயின் திருக் கடைக்கண்களின் அருட் பார்வையானது, தனது மெய்யன்பர்களுக்கு நல்ல செல்வங் களை வழங்கும். சிறந்த கல்வித் திறனை வழங்கும். எக்காலமும் சோர்வு அடையாத மனோதிடத்தை வழங்கும். தெய்வீகப் பேரழகை வழங்கும். மனத்தில் கபடம் ஏதும் இல் லாத கணவன் - மனைவி மக்கள் முதலான சுற்றத்தை வழங்கும். விரும்பும் நற்பயன்கள் யாவற்றையும் சேர்த்து வழங்கும்.

உரையாசிரியர்கள் அனேகர் இவ்வாறே, பொதுவான பார்வையில் உரை கண்டுள்ளனர். இப்பாசுரத்தின் பதங்களையும், அவற்றின் நிரைகளையும் சீர்செய்து, ஆழமாக நோக்கும் பொழுது பல புதிய கருத்துக்கள் புதையுண்டு உள்ளதைக் காணலாம். அவற்றை வெளிக் கொணர்ந்து சற்று ஆராய்வோம்!

அபிராமி அந்தாதிப் பாசுரங்கள்மூலம் எம்பெருமாட்டி அபிராமி அம்மை சகல சீவ ராசிகளுக்கும் பெற்ற தாயாகி அருள்பாலிக்கின்றாள் என்பதைத் தெளிவாகப் பதிவு செய்துள் ளார் அடிகளார் அபிராமிப்பட்டர்!

### சான்றுகள்:

1) "துணையும், தொழும் தெய்வமும், பெற்ற தாயும், சுருதிகளின்..." என்று 2ம் பாடலில், தனக்கும் எங்கள் எல்லோருக்கும் அவளே பெற்றதாய் என்பதை அறிந்துகொண்டேன் என்று உறுதிப்படுத்தி உள்ளார்.

2) "...பிரமன் முதலாய தேவரைப் பெற்ற அம்மே..." என்று 22ம் பாட்டில், அவளே விண்ணவர் யாவருக்கும் பெற்றதாய் என்பதையும் நிச்சயப்படுத்தி உள்ளார்!

3) "தவளே இவள் எங்கள் சங்கரனார் மனைமங்கலமாம்,
அவளே அவர்தமக்கு அன்னையும் ஆயினள்...." என்று 44ம் பாட்டில் அபிராமி அம்மையே, பரம்பொருளான ஈசனார்க்கும் பெற்றதாய் ஆகிக்கொண்டாள் (தத்துவ கிரமப்படி) என்பதையும் அடிகளார் நிருபணம் செய்துள்ளார்!

*துக்கம் என்பது அறியாமையின் காரணமாகத்தான் ஏற்படுகிறது. வேறு எதனாலும் அன்று.*

மனித பாரம்பரியத்தில், கைமாறு கருதாது உதவும் இயல்பினளான பெற்றதாயே, எமக்குக் கிடைத்த கண்கண்ட தெய்வம்! முன்னதாகவே நம் எல்லோருக்கும், அபிராமி அம்மையார் பெற்றதாய் ஆகிவிட்டார் என்பதை அடிகளார் உறுதிப்படுத்தி விட்டார்! ஆகையினால், நமது தெய்வத்தாயையும், எமது பெற்ற தாயையும் ஒருங்கிணைத்து, வழமையாகவே ஒரு தாய் தனது சேய்க்கு ஆற்றும் வழங்கல்களை வரிசைக் கிரமத்தில் விரிவாக ஆராய்வோம்.

ஒரு குழந்தை மண்ணில் பிறந்ததும் உடன் அழும்! அதன் முதற் செயற்பாடே இந்த அழுகைதான்! இது நிகழாதுவிட்டால், கூடிநிற்கும் நாம் எல்லோரும் அழுவோம்! "அழுதபிள்ளை பால் குடிக்கும்" என்பது நமக்கு மிகவும் பரிச்சயமான ஒரு முதுமொழி. இதற்கு அமைவாக, பிறந்த குழந்தையின் மருத்துவ, முதலுதவி போன்ற செயற்பாடுகள் முடிவடையவும், அக்குழந்தைக்குத் தாயானவள் தன் முலைப்பாலை ஊட்ட ஆரம்பித்து விடுவாள்! ஆகவே, ஒரு தாய் தனது சேய்க்கு வழங்கும் முதற்சேவை தாய்ப்பால் (ஆரம்ப ஆகாரம்) ஊட்டுவதே ஆகும்!! "பீரம் பேணில் பாரந் தாங்கும்" இது ஔவையாரின் கொன்றை வேந்தன். இதன் பொருள்: தாய்ப்பாலை நன்றாக ஊட்டி வளர்த்தால், அக்குழந்தை பிற் காலத்தில் சகல பொறுப்புக்களையும் நிர்வகிக்கும் பலம் பெறும்! (பீரம்- தாய்ப்பால்)

இவ்வழமையை நிலைநிறுத்தி, எம் அடிகளாரும் "தனம் தரும்" என்றே இப்பாடலை ஆரம்பித்துள்ளார்! தனம் என்பதைத் தாய்ப்பால் என்றே கொள்ளவேண்டும்! இக்கூற்றைச் சற்று விளக்கமாகப் பார்ப்போம்! "தனம்" என்ற பதம் பல கருத்துக்களில் பிரபல்யம் பெறுவதும், பெற்ற தாயோடு தொடர்பு உடையதும் ஆகும்! மேலும், "தனம்" என்பது ஆகுபெயராகத் தனத்தினின்று சுரக்கும் முலைப்பாலைக் குறிக்கின்றது. ஆகையினால் தனம் என்பது இங்கே தாய்ப்பால் என்றே வருகின்றது. அத்துடன் இவ்வழங்கலை, முன் கூட்டியே 9ம் பாட்டில் அழகாகத் தொட்டுக் காட்டியுள்ளார் அடிகளார்.

"..... வண்ணக் கனக வெற்பில்
பெருத்தன, பால் அழும் பிள்ளைக்கு நல்கின பேரருள் கூர்
திருத்தன பாரமும்....."

இதன் பொருளாவது:

பொன்னிறமான மேருமலையைப்போல பருத்தும், அழுத பிள்ளைக்குப் பால் கொடுத் தருளிய, (தேம்பி அழுத திருஞானசம்பந்த பிள்ளைக்குப் பால் சுரந்து அளித்த கருணையை ஞாபகப்படுத்துகின்றார் அடிகளார்.) பெருங் கருணைபுரியும் அழகிய திருத்தன பாரங்களும்...., என்றவாறு தொடர்கின்றது! ஆகவே, அழுத பிள்ளைக்குத் தாய்மார் முதலாவதாக வழங்குவது தாய்ப்பால்- ஆரம்ப ஆகாரம் என்பது இயல்பாகின்றது.

மேலும், "தனம்" என்ற பதத்திற்கு "செல்வம்" என்ற பொருளும் உண்டு. ஆனால் செல்வம் என்ற பதத்திற்கு "வெறுக்கை" என்றும் பொருள் உண்டு. ஆன்மீக இலக்கியங்களில் "வெறுக்கை" என்று கையாண்டு உள்ளனர். வெறுக்கை என்பதற்கு, வெறுப்பு, வேண்டாமை ஆகிய கருத்துக்களும் உண்டு. அத்தோடு, இவை நமக்கு நன்மை தராதவை. மேலும் செல்வம் அதிகரித்தால் துயரம், துன்பம் வந்துசேரும் என்பதும் யதார்த்தம்! இவ்வரிய உண்மையை மணிவாசகப் பெருமானாரும் தாம் அருளிய "போற்றித் திருஅகவல்" என்னும் பாசுரத்தின் 39ம் வாக்கியத்தில் "செல்வம் என்னும் அல்லலிற் பிழைத்தும்" என்று பதிவு செய்து, செல்வத்தால் துன்பம் விளையும் என்பதை ஏற்றும், நியாயப்படுத்தியும் உள்ளார்.

அத்துடன், நடைமுறையில் ஒரு குழந்தைக்கு வேண்டிய உடனடித் தேவைகளில் செல்வம் வந்துசேரவில்லை! ஆகவே ஒரு தாயானவள் தன் சேய்க்கு உடன் தேவைப் படாததையும், துன்பத்தைத் தரக்கூடியதும் ஆகிய செல்வத்தை முதல் வழங்கலாக தந்திருக்கவே மாட்டாள்! எனவே, அவள் தன் சேய்க்குத் தரும் முதல் வழங்கல் தாய்ப் பால் (ஆரம்ப ஆகாரம்) என்பதே யதார்த்தம்!!

அடுத்து நமக்குச் செல்வம் வேண்டும் என்பதை அடிகளார் ஒருபோதும் மறந்தாரில்லை! இப்பாடலில் வரும் ஆறாவது வழங்களில், சங்கைமிக்க வகையில், இச் செல்வம் வழங்கப்படுகின்றதை உணர்த்தி உள்ளார். அதனை முழுமையாக நாம் உணர்ந்து மகிழ்வோம்!

இரண்டாவது வழங்கலாகக் "கல்வி தரும்" என்று இப்பாடலில் அடிகளார் பதிவு செய்கின்றார். குழந்தையின் வளர்நிலையில் அதிகநேரம் தூக்கத்தில் கழிந்துவிடும்! குழந்தை தூங்குவதற்கு முற்படும்வேளை, தாயானவள் தாலாட்டுப் பாடியே தூங்கவைப்பாள். தாலாட்டும்பொழுது இசையுடன் ஒலி, ஓசையை எழுப்பியும், தொடர்ந்து இனிய சொற்களோடு பாடலாகவும் இசைப்பாள். தாலாட்டைக் கேட்டவாறே குழந்தை தூங்க ஆரம்பித்துவிடும். அங்கே, புரிந்துணர்வும் வளர ஆரம்பித்துவிடும். ஆம்! கருவில் உள்ள குழந்தை கற்றுக்கொள்ளும் என்கின்றது விஞ்ஞானம். இக்கூற்றை "பிரகலாதன் சரிதம்" மூலம் ஆன்மீகமும் ஏற்றுக்கொண்டுள்ளது. அடுத்து, குழந்தையின் விழிப்பு நிலையில், தாய் இசைவாகவே "அப்பா" "அம்மா" என்று ஆரம்பித்து நுட்பமாகவே பேச்சுக் கலையை ஆரம்பித்து வைக்கின்றாள்! குழந்தை மழலையாகப் பேச ஆரம்பிக்கின்றது. ஆகையினால், ஒரு குழந்தைக்குப் பெற்ற தாயே கல்வி புகட்டும் முதல் ஆசிரியர் ஆகின்றார். எனவே, "கல்வி தரும்" என்று அடிகளார் வைத்துள்ள இரண்டாவது பதிவு ஏற்புடையதும், யதார்த்தமானதும் ஆகின்றது.

தொடர்ந்து மூன்றாவது வழங்கலாகத் "தளர்வறியா மனம் தரும்" என்று பதிவு செய்கின்றார். தளர்வு என்ற பதத்தின் பொருள் சோர்வு, பலவீனம், சோம்பல் என்றவாறு வருகின்றன. தளர்வறியா என்று வரும்போது, தளர்வின் எதிர்ப்பதம் ஆகின்றது. ஆகவே, தளர்வறியா மனம் என்பது திடம், தைரியம், உறுதி, உற்சாகம் ஆகியவை கொண்டுள்ள மனம் என்பதாகின்றது. இந்த இயல்புகளே வீரத்தின் விளைவிடம் ஆகும். சுருங்கக் கூறின் அபிராமித் தாயானவள் வீரத்தை வழங்குகின்றாள் என்பது தெளிவாகின்றது.

ஒரு குழந்தையிடம் வீரம் செயற்பட ஆரம்பிக்கும் முறையினைக் காண்போம்! குழந்தையின் வளர்நிலையில் உடல் அசைவுகள் தோன்றும். நகர முற்படும். பிரண்டு, ஊர்ந்து, தவழ்ந்து, எழும்பி, விழுந்து, நடக்க முற்படும். இம்முயற்சியில் தாயானவள் தெம்பு கொடுத்து, கரங்களைப் பற்றித் துணிவை வரவழைத்து, விழுகின்றபொழுது, எழுப்பி நடக்கவைப்பாள்! வீரத்தை விதைத்து வைப்பாள்! குழந்தையும் நடந்து, ஓடி, ஆடிப் பாய்ந்து, தன் செயற்பாட்டில் முன்னேறி வெற்றி கொள்ளும். ஆகவே பெற்றதாயும், தெய்வத் தாயும் வழங்குவது தளர்வறியா மனம் என்பது உண்மையாகி, அடிகளாரின் பதிவையும் நியாயப்படுத்தி உள்ளது!

அடிகளாரின் நான்காவது பதிவு "தெய்வ வடிவம் தரும்" என்பதாகும். "குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று" மற்றும் "குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்தில்" என்னும் கவிஞர்களின் வாக்கால் குழந்தையானது தெய்வத்தோடு தொடர்பு உடையது

என்பதை நாம் தெரிந்துகொண்டோம்! குழந்தையின் ஆரவாரமும் மழலைமொழியும், பொக்கை வாய்ச் சிரிப்பும் எம்மனதைக் கவர்ந்து வசப்படுத்திவிடும். இவ்வசீகரத் தோற்றம், எமக்கு எம் மனம் கொண்ட, தெய்வம்போலவே காட்சி தரும். மேலும் தன் குழந்தையை நாள்தோறும் நீராட்டிச் சீராட்டி, இருக்கும் சிறு முடியைக் கோதி முடித்துப் பூச்சூடிப் பொட்டுவைத்து, கன்னத்தில் மையிட்டுச் சிங்காரித்து விடுகின்றாள். வடிவு மிளிர்கின்றது! மறுபடியும் தெய்வீகத் தோற்றம் பொலிகின்றது.

ஒரு மானிடத் தாயின் கைங்கரியத்தால் தெய்வ வடிவை உருவாக்க முடியும் என்றால், ஒரு தெய்வத் தாயின் படைப்பில் உருவாகும் பேரழகை எம்மால் அளவிட முடியுமா? அபிராமி அம்மையின் வடிவைப் பாடல்கள் எங்கும் அள்ளிச் சொரிந்துள்ளார்! "அபிராமி" என்கின்ற பதத்தின் தூய தமிழ் வடிவம் "பேரழகி" என்பதே ஆகும்.

"தாயைப்போல பிள்ளை நூலைப்போல சேலை". பேரழகித் தாயின் குழந்தைகளும் வடிவு உடையவர்களே! எனவே, இப்பதிவும் உரியவகையில் பொருந்தி நிற்பது அருமையாகின்றது!

அடிகளாரின் ஐந்தாவது பதிவு "நெஞ்சில் வஞ்சம் இல்லா இனம் தரும்" என்பதாகும். இப்பதிவினை இரண்டு கூற்றுக்களாக எடுத்துக் கொள்ளலாம். அவையாவன:-

1) நெஞ்சில் வஞ்சம் இல்லா, இனம் தரும்
2) நெஞ்சில், வஞ்சம் இல்லா இனம், தரும்

முதலாவது கூற்றில் காணும் தரிப்புக் குறியீடு அமையும் வகையில், மனத்தின் கண் கபடம் இல்லாத சுற்றத்தாரை வழங்கும் என்றவாறே பொருள் கொள்ளப்பட்டுள்ளதை ஏற்போம்!

ஆனால், 2ம் கூற்றின் குறியீடுகளுக்கு அமைவாக, (எம்) "நெஞ்சில், வஞ்சம் இல்லா இனம், தரும்" என்று எடுத்துப் பொருள் கொள்வோமானால் மிகவும் வியக்கத்தக்க சிறப்புக்கள் மிளிருவதைக் காணலாம்!

முதலில் "இனம்" என்ற பதத்தின் கருத்துக்களைச் சற்று நோக்கும்பொழுது, வகை (வழிவகை) சாதி, குலம், கூட்டம், சம்பந்தம், சுற்றம் என்பதாக அவை நீள்கின்றன. இவற்றுள்ளே "வகை" என்ற கருத்தை எடுத்துக்கொண்டு, 2ம் கூற்றின் பிரகாரம், எமது நெஞ்சில், சூது- வாது, கள்ளம்- கபடம் போன்ற வஞ்சக வகைகள் குடிகொள்ளாத மகிமை நிலையை வழங்கும் என்பது தெளிவு. இந்த வகையில் நாம் நல்மனத்தவராய், தூயவராய், பரிசுத்தராய் ஆகிவிடுவோம்! ஆண்டவரும் எம்மை நெருங்கி வருவார். நல்லருள் தருவார்! இவ்வரிய உண்மையை, "வஞ்சகர் நெஞ்சடையாளை" என்றே "உடையாளை" என்ற 84ம் பாசுரத்தில் அடிகளாரே இடித்து உரைத்துள்ளார்.

இவ்வரிய உண்மையை அப்பர் சுவாமிகளும் "கரவாடும் வன்னெஞ்சர்க்(கு) அரியானை" என்று தனது திருக்கச்சி ஏகம்பத்தில் பாடியருளிய தேவாரத்தில் உறுதிப்படுத்தி உள்ளார்.

மேலும் பொய்யாமொழி- வள்ளுவப் பெருமானாரும் திருக்குறள்- அறன்வலியுறுத்தல் அதிகாரம் 4ம் குறளில்

"மனத்துக்கண் மாசுஇலன் ஆதல் அனைத்து அறன்
ஆகுல நீர பிற"

(மனத்துக்கண் குற்றம் இல்லாதவனாக ஒருவன் இருத்தல் ஒன்றே அறம் (தர்மம்) ஆகும். மனத்தூய்மை இல்லாமல் செய்யப்படுபவை அனைத்தும் குழப்பத்தைக் கொண்டவை.)

என்று உரைத்து, நமக்கு முதன்மை யாக இருக்கவேண்டியது நமது மனத்தூய் மையே என்பதை வலியுறுத்துகின்றார். நிறை வாக, 2ம் கூற்றின் பொருள் முதன்மை பெறு கின்றது பிரத்தியட்சம்!

அடிகளாரின் ஆறாவதும் இறுதி யுமான இரட்டைப் பதிவுகள் "நல்லன எல் லாம் தரும்" என்பதைத் தொடர்ந்து "கனம் தரும்" என்பதோடு நிறைவு பெறுகின்றன. "கனம் தரும்" என்பதை அம்மையின் கூந் தலின் நிறத்தோடு மட்டும் தொடர்புபடுத்தி உள்ளனர் அனேக உரையாசிரியர்கள். கூந் தலின் நிறத்தைவிட, மிகவும் உயர்வான நுண்பொருட்கள், "நல்லன எல்லாம் தரும்" என்ற பதத்தின் முன்னே வைத்துப்பொருள் கொள்ளும்போது நிறைகின்றன. இதனைச் சற்று ஆராய்வோம்

"கனம்" என்ற பதத்திற்கு சங்கை, மாட்சிமை, பெருமை, மதிப்பு, சிறப்பு, சீரமை, நிறைவு என்றவாறு செறிவு நிறைந்த சொற் பயன்கள் நீள்கின்றன. இவ்வளவு கனம் மிக்க பதத்தைக் கூந்தலின் கரிய நிறத்துடன் மட்டுப்படுத்துவது பொருந்தாது. "கனம் தரும் நல்லன, எல்லாம் தரும்" என்றவாறு இணைத் துப் பொருள் கொள்ளும்போது, சாதாரண "நல்லன" என்ற பதம் சங்கை, பெருமை பெற்றுச் செறிவுமிக்க "நல்லன"வாக உயர்ந்து, எம்பெருமாட்டி எமக்குத் தந்தருளுகின்ற வழங்கல்கள் அளவிடமுடியாத பெருமைகள் கொண்டனவாக அமைகின்றன.

"கனம் தரும்" என்ற பொருளுக்கு நிகராகக் "கனம் அது உறு" என்று கையாண்டு, கனத்தின் பெறுமானத்தை மிக உயர்த்திக் காட்டுகின்றார் அருணகிரிப் பெரு மானார். அவர் தனது சுவாமிமலைத் திருப் புகழ் பகுதியில், "சரண கமல ஆலயத்தை" என்னும் பாடலில், "மிகுத்த கனம் அது உறு, நீள்சவுக்ய(ம்), சகல செல்வ(ம்), யோக(ம்) மிக்க பெருவாழ்வு, தகைமை, சிவஞானம், முத்தி, பரகதியும் நீ கொடுத்து உதவி புரியவேணும்" என்று பாடியருளிக் கனத்தின் பெறுமானத்தை அனைத்துப் பதங்களுடனும் இணைத்துப் பொருள் கொள்ளும்படி செய் துள்ளார். இப்போது கனத்தின் கனத்தை நாம் கண்டுகொண்டோம்.

மேலும், கூந்தல் கறுப்பு என்பது நியதியே! இதற்கு மேலதிக குறிப்பு ஒன்று தேவையில்லையே! பேரழகித் தாயின் கூந்த லைப் பூச்சூடியகுழல் என்றில்லாது, பூங் குழல் என்றே குறிப்பிட்டுள்ளார் அடிகளார். ஆகையினால் குழல் முழுவதும் பூக்கள் மயமாகவே விளங்குவது தெளிவாகின்றது. எனவே கரிய நிறம் தோன்ற வாய்ப்பே இல்லை. சைவத் திருமணச் சடங்குகளில், மணமகளின் அலங்கரிப்பில் கூந்தல் முழு வதும் பூக்களாலும் மாலைகளாலும் நிறைத் தும், முடிவில் குஞ்சம் கட்டியும், பூஞ்சடை யாக்கி விடுவார்கள். தலைமுடியின் கரிய நிறம் தென்படவே வாய்ப்பு இல்லை. இது போலவே, பேரழகித் தாயின் கூந்தலிலும் கரியநிறம் தெரிய வாய்ப்பே இல்லை. ஆகவே, "கனம் தரும் நல்லன, எல்லாம் தரும்" என்று இணைத்துப் பொருள் கொள்வதே சாலச் சிறந்ததாகும்!! இதனூடே எமக்கு மகிமை மிக்க செல்வங்கள் யாவும் வழங்கப்படும் என்பதும் உண்மை!!

நாம் இதுவரை பெற்றுக்கொண்டுள்ள தெளிவுகளோடு இப்பதிகத்தின் பதவுரை யைக் காண்போமாக!

**பூங்குழலாள் அபிராமி கடைக்கண் கள்**- பூக்களால் நிறைந்ததான கூந்தலை உடைய அபிராமித் தாயின் மகிமைமிக்க கடைக்கண்கள். **அன்பர் என்பவர்க்கே**- அவளுடைய மெய்யன்பர்கள் யாவருக்கும். **தனம் தரும்**- தாய்ப்பால் (ஆரம்ப ஆகாரம்) தொடக்கம் கடைசி வரையும் ஆகாரம்

வழங்குவாள். கல்விதரும்- சிறந்த கல்வித் திறனை வழங்கும். **ஒரு நாளும் தளர்வு அறியா மனம் தரும்-** எக்காலமும் சோர்வு அடையாத மனோதிடத்தை (வீரத்தை) வழங்கும். **தெய்வ வடிவம் தரும்-** அழகான சீரான உடல் அமைப்புடன் தெய்வப் பேரழகை வழங்கும். **நெஞ்சில், வஞ்சம் இல்லா, இனம் தரும்-** எமது நெஞ்சில், சூது- வாது, கள்ளம்- கபடம் போன்ற அழுக்குகள் குடிகொள்ளாது, எம்மைத் தூயவராக ஆக்குவதோடு எம்மிடம், மனத்தின் கண் கபடம் இல்லாச் சுற்றத்தார் யாவரையும் வழங்கும். **கனம் தரும் நல்லன, எல்லாம் தரும்-** மாட்சுமை மிக்க மேன்மைகள் முழுவதும், சகல செல்வங்கள், நீண்ட ஆயுள், மிக்க பெருவாழ்வு, யோகம், சிவஞானம், முத்தி ஆகிய பேறுகள் யாவையும் வழங்கும்.

பேரழகித் தாயின் வழங்கல்களை மீண்டும் தொகுத்து, சீராக்கிக் கொள்ளும்போது, இப்பாடற் புதையலில் அகப்பட்ட புதைபொருட்களைச் சிந்தித்து மகிழலாம்! மேலும் குடைந்தால், மேலும் புதையல்கள் வந்து சேரும். இக்கட்டுரைக்குள் அடக்க முடியாது! ஆகையினால் நிறுத்திக் கொண்டுள்ளோம்!!

அகப்பட்ட புதையல்கள் வருமாறு:-

1) எமக்குத் தாய்ப்பால் தொடக்கம் கடைசிவரை ஆகாரம் வழங்கும்.
2) கல்வி தருவாள்- அபிராமியே நான்முகிச் சக்தி என்று அடிகளாரே 50ம் பாடலில் குறிப்பிட்டுள்ளார்.
3) தளர்வறியா மனம் (வீரம்) தருவாள்.
4) அழகான தோற்றத்தையும், சீரான தேக அமைப்பையும் தருவாள்.
5) நமக்குக் கபடம் இல்லா மனத்தையும், மனத்தில் கபடம் இல்லாச் சுற்றத்தாரையும் தந்து அருளுவாள்.
6) தகைமை மிக்க மேன்மைகள் முழுவதும் தந்து அருளுவாள்.

அவையாவன:-

6-1: சுகவாழ்வும் - நீண்ட ஆயுளும்
6-2: சகல செல்வங்கள்: (பணம்- பொருள், நல்ல தொழில் வாய்ப்பு, திருமணம், குழந்தைப் பாக்கியம், ஆகிய அனைத்து இல்லறத் தேவைகள்)
6-3: யோகம்
6-4: சிவஞானம்
6-5: முத்தி

ஆகியவற்றுடன், வரையறை இல்லா மேன்மைகள் யாவையும் வாரி வழங்குவாள் கருணைக் கடலாம் அபிராமித் தாய். நாம் செய்யவேண்டியது, வீணே காலத்தைப் போக்காமல், உறுதியுடன் அவளது திருப்பாதங்களைப் பணிந்து, தினமும் தொழுகை வேளையில் இப் பாடலை, மனம் உருகிப் பாடிவர எல்லா மேன்மைகளும் வாழ்க்கை விழுப்பொருள்களும் நம்மை வந்து அடையும்! இது நிச்சயம்! நிச்சயம்!!

அபிராமித் தாயின் திருவடிகளுக்கு வணக்கம்!!

*பலவீனம் இடையறாத சித்திரவதையாகவும் துன்பமாகவும் அமைகிறது.*

# பகவத்கீதையின் உலகம் தழுவிய பரந்த நோக்கு

(தொடர்ச்சி...

– சுவாமி கிருஷ்ணானந்தா –
தமிழில்: திரு பூ. சோதிநாதன் அவர்கள் –

## அத்தியாயம் – 07
## சரியாகப் புரிந்துகொள்ளும் தன்மை

### 01. கட்டுமானத்தின் அடிப்படை.

பகவத்கீதையின் முதலாவது அத்தியாயத்தினுடைய அர்த்தம், அதன் சந்தர்ப்பம் என்பவற்றுக்குப் பின்னணியாக உள்ள முழு அடிப்படையினையும் இதுவரை அவதானித்து வந்துள்ளோம். அந்த முதலாவது அத்தியாயத்தை நன்றாக அவதானிப்பதற்கு அதிக நேரம் எடுக்கவேண்டி இருந்தது. இனி வரப்போகும் எல்லாக் கருத்துக்களையும் புரிந்துகொள்ள முதலாவது அத்தியாயமே அடிப்படையை அமைத்துத் தந்திருக்கின்றது. அதனால் அதனை அடிப்படையாகக் கொண்டே இனிவரும் அத்தியாயங்களைத் தொடரவேண்டி உள்ளது. முதலாவது அத்தியாயத்தின் பின்னணி எளிமையானது அன்று என்பதை நாம் கவனிக்க வேண்டி இருந்தது. பொதுவாக அம் முதலாவது அத்தியாயம் வெளிப்படையாகத் தோன்று வதுபோல ஒரு வெறும் அறிமுகம் மட்டும் அன்று. அதற்கும் மேலாகக் கீதையின் போதனை என்ற கட்டுமானத்துக்கான அடிப்படையைத் தயார் செய்யும் ஒரு பெறுமதிமிக்க விடயத்தை அது கொண்டுள்ளது. முதலாவது அத்தியாயத்தின் தலையங்கம் "ஆன்மாவின் சோகம் பற்றிய யோகம்" ஆகும். அம்முதலாவது அத்தியாயத்தின் ஆழமான பொருளைப் புரிந்து கொள்ளும் முறையிலேயே இதுவரை பார்த்துவந்த எல்லாக் கருத்துக்களையும் உங்களால் மீண்டும் ஞாபகத்துக்குக் கொண்டுவர முடியும்.

### 02. சோகமே யோகம்.

மனிதனின் பிரதிநிதியான அர்ச்சுனன் தன்னைச் சோகத்திலேயே காண்கிறான். அவனது அந்த நிலைமை ஆன்மிக நிலைமை என்றே கீதையில் வருணிக்கப்பட்டிருக்கின்றது. அதனாலேதான் சோகம்கூட யோகத்தின் ஒரு பகுதியாகக் கருதப்படுகிறது. அந்தச் சோகம் ஓர் எதிர்மறையான மனநிலையோ உலக வயப்பட்ட மனப்பாங்கோ அன்று. அச்சோகம் ஓர் அத்தியாவசியமான நேர்மறை நிலையின் ஆரம்பக் கட்டமாகும். ஆன்ம சாதகர் பிர பஞ்ச உண்மையை எதிர்கொள்ள முனையும்போது செய்யவேண்டிய வேலையே அந்த நேர்மறை நிலைமையை ஆக்குவதாகும். ஆரம்பத்தில் ஒருவர் எதிர்கொள்ளும் இருட்டே ஒரு பாரிய அகரீதியான தயாரிப்பின் திரண்ட விளைவாகும். உலகத்தில் பல வழிகளினாலும் பெறப்படும் சுயபரிசோதனை, கல்வி, அறிவு என்பவற்றின் ஆரம்பக் கட்டங்களுக்கு ஊடாக முன்கூட்டியே மேற்கொண்டுள்ள அகரீதியான தயாரிப்பே அச்சோகம் ஆகும். ஆனால்

*உன்னை நீயே பலவீனன் என்று நினைத்துக்கொள்வது மிகப்பெரிய பாவம்.*

அந்தச் சோகம் ஏன் வந்தது என்பதற்கு ஒரு விளக்கம் கொடுக்கப்பட வேண்டியுள்ளது. அந்த விளக்கம் கிருஷ்ண பகவானால் வழங்கப்பட்டுள்ள ஒரு விடையின் வடிவத்தில் வரு கின்றது. அவர் அதனைக் கீதையின் இரண்டாவது அத்தியாயத்தின் ஆரம்பத்தில் சில சுலோகங்களில் தருகின்றார்.

**03. தெளிவின்மை.**

புரிந்துகொள்ளுவதில் போதிய தெளிவின்மை இருப்பதனை அவர் அச்சுலோகங்களைக் கொண்டு சுட்டிக்காட்டுகின்றார். அங்கே சாங்கியம் எனக் குறிப்பிடும் அறிவு போதியளவு இல்லாததனாலேயே அத்தெளிவின்மை இருப்பது விளக்கப்படுகிறது. அத்தெளிவின்மையில் விவேகத்தின் குறைபாடும் தருக்கப் பிழையும் இருக்கின்றன. மனதின் முற்கோணங்களினால் மனிதன் மாசுபடுத்தப்படுவதனால் அந்தநிலை அங்கே மேலோங்கி நிற்கின்றது. அப்படிப்பட்ட மனத்திலேயே அந்தத் தெளிவின்மையும் தருக்கப் பிழையும் எழுகின்றன. அப்படி எழுவது ஒரு விதையில் இருந்து கொடி உண்டாகும் வேளையில் சுருள் வளையம் தோன்றுவதை நிகர்த்தது. எமது தருக்க முறை பெருமளவு எமது ஆளுமையினால் தளைப்படுத்தப்பட்டுள்ளது என்பதை யார்தான் மறுக்கக்கூடும்? எமது அந்த ஆளுமை பிரபஞ்சத் தோற்றப்பாட்டின் ஓர் அங்கமாக வைக்கப்பட்டிருக்கின்றது. அதனால் அந்த ஆளுமையில் இருந்துதான் எல்லாம் வந்து சேர்கின்றன. சாங்கியம் என்ற கலைச்சொல் கீதையின் இரண்டாவது அத்தியாயத்தில் அறிவு என்ற அர்த்தத்தில் உபயோகிக்கப்பட்டிருக்கின்றது. அந்த அறிவு உண்மையோடு ஒத்துப்போவதாகக் கொள்ளப்படுகிறது. அத்துடன் அவ்வுண்மையின் இயல்புக்கு ஒத்து வராதவை அதற்கு எதிரானவை ஆகும். அவற்றை அறிவின்மை எனலாம்.

**04. ஆன்மா அழியாது.**

சாங்கியம் அல்லது அறிவு என்றால் என்ன என்பது கீதையின் மூன்றாவது அத்தியாயத்தில் எமக்குக் கூறப்பட இருக்கின்றது. சாங்கியத்தைப் பற்றி அல்லது சரியாகப் புரிந்துகொள்வதை அறிவதோடு நாம் தவறான புரிந்துகொள்ளல் என்றால் என்ன என்பதையும் அறிந்து கொள்வோம். அர்ச்சுனனது சங்கடமான நிலைக்குக் கிருஷ்ண பகவான் உடனடியாக வழங்குவது ஒரு தத்துவ விளக்கமாக அமைகிறது. அத்துடன் அத்தத்துவ விளக்கத்தின்போது சில முக்கியமான அம்சங்கள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. அர்ச்சுனனால் முன்வைக்கப்பட்ட பல்வேறு வாதங்களுக்கும் உடனடிப் பிரதிபலிப்பாக வரும் திடீர்விடை ஒருவருடைய ஆன்மா அழியாதது என்பதாகும். மனிதரின் பிரதிநிதியாகிய அர்ச்சுனனின் மனத்தை நெருடுகின்ற மரணபயம், அழிவு, பேரிடர் முதலான எல்லாப் பிரச்சினைகளும் மனிதனின் சாராம்சம் அல்லது ஒருவரது அழிக்கமுடியாத தன்மையைப் பொறுத்தவரையில் அர்த்தமற்றவை ஆகிவிடும். இருக்கின்ற எதுவும் இறுதியில் அழியாது என்பதால் அழிவு என ஒரு விடயம் இருக்கமுடியாது. இல்லாத ஒன்றுக்கும்கூட அழிவு இருக்க முடியாது. இது மிகவும் எளிமையான ஒரு தருக்கம் ஆகும். இதுவே அர்ச்சுனனது மனதில் கிருஷ்ணனிடம் இருந்து வந்த ஓர் ஒளிக்கீற்றும் ஆகும். யுத்தத்தில் ஈடுபடுவது அத்தியாவசியம் என்ற கட்டளைக்கு எதிராக அர்ச்சுனன் முன்வைத்த கருத்துக்களில் ஒன்று அழிவினால் ஏற்படும் பயம் ஆகும். அர்ச்சுனனது இந்த வாதத்துக்கு ஒரு சிறிய பகுதியில் விடை

கீதையில் பெறப்படுகிறது. அப்பகுதியில் உண்மையின் அழிவு சாத்தியம் இல்லை என்று தெளிவாகக் கூறப்படுகின்றது. எது உள்ளதோ அது எப்பொழுதும் இருக்கின்றது. எது இல்லையோ அது எப்பொழுதும் எந்தச் சூழ்நிலையிலும் இருக்கமுடியாது. இப்பொழுது ஏதோ ஒன்று அழிக்கப்படுகின்றது எனக் கூறப்படும்போது அதனைக் கூறுபவர் எதனைக் கூறுகின்றார் என்று பலர் தருந்த முறையில் புரிந்துகொள்வதில்லை.

### 05. மாற்றமே அன்றி அழிவில்லை.

நாம ரூபங்களுக்கு ஒரு மாற்றம் மட்டுமே உண்டு. அவற்றுக்கு அழிவில்லை. இந்தப் பிரபஞ்சத்தின் கூர்ப்பு முறையில் நாமரூப அமைப்பே மாற்றத்துக்கு உள்ளாகின்றது. ஆனால் இந்த மாற்றத்திலும் கூட எந்த மூலகமும் பூரணமாக அழிவதில்லை. குறித்த ஒரு நிலைமையின் கீழ் ஒரு குறித்த முறையில் பகுதிகள் பிரிக்கப்படுவதும், அவை மீண்டும் ஒழுங்குபடுத்தப்படுவதுமே நடைபெறுகின்றது. எல்லாமே கடந்து செல்லுகின்ற இந்தச் சிறப்புச் செய்முறை பற்றிய அறிவு இல்லாதபோது ஒருவர் அதனை அழிவுச் செய்முறை என்றும், மரணம் என்றும் கருதுகின்றார். எனவே எல்லாவற்றின் சாரமும் அழிவற்றது என்பதே உண்மை. வஸ்துகளின் இந்தச் சாராம்சத்தை நாம் அவற்றின் ஆன்மா என்று அழைக்கின்றோம். எனவே மரணம் என்று அப்படி ஒரு விடயம் பற்றிப் பயங்கொள்ளத் தேவையில்லை. ஒருவர் ஏதாவது செயலில் தன்னை ஈடுபடுத்திக்கொள்ளும்போது மரணம் ஏற்படக்கூடும் என்ற நிலை இருப்பின் உடனடியாக அந்தப் பயம் கைவிடப்பட வேண்டும். ஏனெனில், எந்த ஒருவரின் ஆளுமையின் சாராம்சத்துக்கும் மரணம் இல்லை. ஆனால் நாமரூப அழிவு பற்றிய பயம் உளதை மறுக்க முடியாது. அப்படியான ஒரு சாத்தியத்தில் இருந்து எவரும் தப்பமுடியாது. ஏனெனில், எல்லைக்கு உட்பட்டது ஒருபோதும் தன்னில்தானே இருப்பை வைத்திருக்க முடியாது. கூர்ப்பு அல்லது பரிணாமம் அத்தியாவசியமாக இருப்பதனால் மரணமும் அத்தியாவசியமான ஒன்றாகவே ஆகின்றது. ஒரு வஸ்து ஒரு நிலையில் இருந்து இன்னொரு நிலைக்கு மாறிச் செல்லும் செய்முறைக்கு நாம் கொடுக்கும் பெயரே மரணம் அன்றி வேறொரு நிலையான அழிவு இல்லை. இதனையே நாம் வழமையாக ஒரு பொருள் இன்னொரு பொருளாக மாறுகின்றது என்கிறோம். எனவே ஒருவரின் சாராம்சத்தினது மரண பயம் என்பது கிடையாது. ஆனால், நாமரூப அமைப்பு மாற்றத்துக்கு உள்ளாகும் சந்தர்ப்பத்தில் இருந்து தப்பமுடியாது. அந்த மாற்றத்தையே நாம் ஆளுமையின் மரணம் என அழைக்கின்றோம்.

(தொடரும்...

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை

08.12.2017 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ள நாவலர் குருபூசை நிகழ்வின் விசேட கருத்தரங்கு விரிவுரையாளர் திரு அ. குமாரவேல் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

| சமயப்பணி | தமிழ்ப்பணி | சமூகப்பணி |
|---|---|---|
| திரு T. கருணாகரன் | செல்வி கதிர் தர்ஷினி | திரு S. சிவஸ்கந்தஸ்ரீ |

-சைவ கலை பண்பாட்டுப் பேரவை-

*எதிரிகளை அழிக்க ஒரேவழி அவர்களை நண்பர்களாக்குங்கள்.*

# ஆன்மா லயிக்கும் இடமே ஆலயம்

– திரு ஆர்.வீ. கந்தசுவாமி அவர்கள் –

உலகத்திலே மனிதகுலத்தை நல்வழிப்படுத்தவும் வாழ்வைச் சீரடையச் செய்யவும் ஆண்டவன் பல காலங்களிலும் பல்வேறுபட்ட அவதாரங்களை எடுத்துள்ளார். அதை மக்களுக்குக் காலம் காலமாக உணர்த்துவதற்காகத்தான் கீதையாகவும், பைபிளாகவும், குரானாகவும், புராணங்களாகவும் இன்னும் பல்வேறுபட்ட வடிவங்களாகவும் நமக்குத் தந்துள்ளார்.

அந்தக் காலகட்டங்கள் மறைந்த பின்பு மக்கள் மனதில் அவர்களைச் சீரான, தூய்மையான வாழ்க்கை நடத்த, ஆக்கபூர்வமான முன்னேற்றமடைய எமக்குச் சித்த புருஷர்கள், தவசிரேஷ்டர்கள் ஆன்ம தரிசனம் அடைந்தவர்கள் தாங்கள் பெற்ற அனுபவங்கள், உணர்வுகளை மேலும் உணரமுடியாத அனுபவங்களை, உலக மக்கள் நன்மைக்கு அமைத்துக் கொடுத்த வடிவங்களே கடவுள். அந்த இடத்தில் மனம் முழுமையாக லயமாகிய நிறுவனம்தான் ஆலயமாகும்.

மனிதர்கள் தம் பகுத்தறிவு மூலமாக உணர்ந்து தெரிந்து கொண்ட பொருளைத்தான் நம்புவார்கள். தவசிரேஷ்டர்கள் தாங்கள் பெற்ற அனுபவ வாயிலாக மனதில் உருவான மனித உருவத்திலேயே உருவங்களைக் கற்களில் செதுக்கி, அதைப் பிரதிஷ்டை செய்து, அவற்றைத் தெய்வ ஆற்றல் படைத்த உருவங்களாக ஏற்படுத்தினர். அப்படிப்பட்ட தங்கள் தவவலிமையால் உருவாக்கப்பட்ட உருவங்களுக்கு ஆக்கல், காத்தல், அழித்தல் என்ற தர்மங்களை நிறைவேற்றக்கூடிய பெயர்களைச் சூட்டினார்.

எந்தவகையான தடங்கலோ, குறைபாடுகளோ வராது தடுத்து ஆட்கொள்ளக் கூடிய கடவுள் உருவங்களையும் அமைத்தனர். அவைதான் விநாயகர், துர்க்கை, லஷ்மி, சரஸ்வதி ஆகியவையாகும்.

இப்படிப்பட்ட சீரான நோக்கத்துடன் அமைக்கப்பட்ட ஸ்தாபனங்களே கோவில்களாகும். மனிதர்களை வளர்ச்சி அடையச் செய்வதற்கு இவை மிக உறுதுணையாக உள்ளன.

"ஆலயம்" என்ற வார்த்தைக்கு உண்மையான பொருள் "ஆன்மா லயிக்குமிடம்" என்பதாகும். சித்த புருஷர்கள் தங்கள் தவ வலிமையால் மனித குலத்திற்கு, அதன் நன்மைக்காக அர்ப்பணித்துக்கொண்டு "ஜீவசமாதி" ஆனார்கள்.

"ஆன்மா" தூய்மையான நிலையில் லயிக்கவேண்டிய அந்தப் புனித இடத்தில் மக்கள் தங்கள் உடல் ரீதியான, மன ரீதியான பாவமூட்டைகளை அவிழ்த்து விட உதவும் நிலையங்களாக ஆக்கிவிட்டபடியால் அதன் புனிதத் தன்மைக்கும் குறைபாடு ஏற்பட்டுள்ளது என்பது உண்மையாகும். தூய்மையான பக்தி செலுத்துவதற்குப் பதிலாக மனிதன் தன் சுயநலம் கருதி, தன் சமூகத்தில் கிடைக்கின்ற அந்தஸ்துகள் கருதியும் செயற்பட்டதால்த்தான் அதற்காக 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை கோவில்களில் "குடமுழுக்குச்" சடங்கு மேற்கொள்கின்றார்கள்.

*மனிதன் தோல்வியின்மூலமே புத்திசாலி ஆகின்றான்.*

சமுத்திரம் எல்லா வகையான நீர் களையும் ஏற்றுக்கொள்ளும், ஆனால் அதே வேளையில் தன் தனித்தன்மையை இழக் காமல் இருப்பதுபோல் அந்தச் சித்த புருஷர் கள் நிறுவிய ஆலயங்களும் யுக யுகங்களா கப் புனிதமாக நிலைத்து நிற்கும் என்பதே உண்மை.

நாம் கோடை வெயிலில் காலில் செருப்பு இல்லாமல், நிழலுக்குக் குடையின்றி நடக்கும்போது, அவஸ்தைப்படும்போது எப் படி நல்ல மனம் படைத்தவர்கள் தங்கு வதற்கு நிழலும் தாகத்திற்கு நீரும் தந்து நாம் இளைப்பாற உதவுகின்றனரோ, அதே போலத்தான் கோவில்களும் உலக ரீதியான பிடியில் சிக்கி உழலும் மனிதர்களுக்கு மன ஆறுதல் அளித்து இறைவனை அடைய வழிசமைக்கும்.

வீட்டிலேயே, பூஜை, பக்தி செய்ய லாமே எனச் சிலர் எண்ணலாம். கோவில் களில், நாமாவளி, நாம சங்கீர்த்தனம், பஜனை ஆகியன பக்தியை ஊக்குவிக்கும். பக்திபூர்வமான நிகழ்ச்சிகளைத் தவிர அங்கு நம் புறக்கண்களுக்குத் தெரியாமல் சூட்சும மாகச் சித்த புருஷர்கள் பூஜைக் காலங் களில் வந்து அந்த இடத்தைப் புனிதமாக்கு கின்றனர் என்பது சித்தர்கள் கூற்று, அதனால் நம்மை அறியாமலே தெய்வீக அனுபவம் எங்கள் கண்களை நீர்க்குணமாக்குகின்றது.

மேலும் அங்கு நடைபெறும் தீப ஆராதனை முதலான சடங்குகள் நம்மனதை அந்த நிகழ்ச்சியில் முழுமையாக ஈடுபடச் செய்கின்றன. அத்துடன் நம் மனதைக் கவ ரச் செய்து ஆண்டவன் பால் வயப்படுத்த உதவுகின்றது.

கோவில்களில் நடைபெறும் அந்தத் தெய்வீக வழிபாட்டில் நம் உள் மனம் நம்மை அறியாமலே ஆழ்ந்துவிடச் செய்கின்றது. ஆனால் இந்தச் சீரான மனநிலை எல்லோருக் கும் வீடுகளில் பூஜை செய்தாலோ, பக்தியில் ஈடுபட்டாலோ கிடைப்பதரிது.

அதாவது கூட்டுப்பிரார்த்தனை அபரி மிதமான மன ஆற்றலை உண்டுபண்ணி, அதை முழுமையாக அனுபவிக்க உடல், மனம் ஆகிய நிலைகளிலும் அந்த அனு பவத்தை உணர உதவுகின்றது. ஆதலால் கோவில்களில் இறைவன் பால் முழுமையாக லயிக்கச் செய்யவும் உதவுகின்றது.

ஆகம முறையாக, மந்திர பூர்வமாக முன்னோர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்ட மந்திர பீடங்கள் திருக்கோவில்கள். இறை யருளின் அதிர்வு அலைகள் பரவி நிற்குமிடம். இத்தகைய திருக்கோவில்களுக் குச் சென்று வணங்கி வழிபடுதல் தனித் திருந்து வழிபடுவதைக் காட்டிலும் அதிக மான பலன் தரும்.

உலகப் பிணைப்புக்களில் இருந்து சிறிது ஓய்வு பெறவும், மனநிம்மதி அடைய வும் ஆலய வழிபாடு சிறந்ததாகும்.

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்பது ஔவையாரின் வாக்காகும்.

## குருபூஜை தினங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நவம்பர் | 24 | கார்த் | 08 | வெள்ளி | இராமநாதர் |
| டிசம்பர் | 08 | கார்த் | 22 | வெள்ளி | ஆறுமுகநாவலர் |
| டிசம்பர் | 11 | கார்த் | 25 | திங்கள் | மெய்ப்பொருளார் |

*உடலிலும் மனதிலும் வலிமை இல்லாமல் போனால் ஆன்மாவை அடையமுடியாது.*

(தொடர் -02)

# சமய வாழ்வு

– திரு இரா. செல்வவடிவேல் அவர்கள் –

இந்த உலகிலே பரந்து விரிந்து கிடக்கும் எண்ணிறைந்த மக்கள் கூட்டத்தில் போற்றப்படும் சமயங்கள் அல்லது மதங்கள் எண்ணிறைந்தவையாகவே காணப்படுகின்றன. அவற்றில் நமது சைவசமயமும் ஒன்றாயிருக் கிறது. நம்முடைய அனுபவத்திற்கு அகப் பட்ட மதங்களையும் சைவ சமயத்தையும் இரண்டு பக்கத்தில் வைத்து நாம் நடு நின்று நிறுத்துப் பார்ப்போமேயானால் நமது சைவ சமயமே அவ் எல்லா மதங்களினதும் பெருமை மிக்கதாய்க் காணப்படுகிறது. இனி நமது அனுபவத்தில் வராத வேறு மதங்களில் ஏதே னும் சைவ சமயத்தை ஒத்ததாகவேனும், அல்லது மேலானதாகவேனும் இருக்குமா? என்று ஆராய்ந்து பார்ப்பது அவசியமாகும். ஏனைய மதங்களில் ஒன்று சைவ சமயத்தில் காணப்படும் எல்லாக் கொள்கைகளையும் கொண்டதாக இருக்குமாயின், அது வேறு பெயரால் வழங்கப்பட்டாலும் அதனையும் சைவசமயமென்றே கொள்வது இழுக்காகாது. இனி அப் பிறமதங்களில் ஏதேனும் ஒன்று சைவ சமயத்தில் இல்லாத அரிய பெரிய கொள்கைகள் உடையதாய் இருப்பது என் பதும் நடக்கமுடியாததாகும். ஏனெனில் உலகத்திலுள்ள எல்லா மதங்களும் ஒரே முழுமுதல் அறிவுப் பொருளாகிய கடவுளை யும், சிற்றறிவுடைய உயிர்களையும், அறி வில்லாத உலகத்துச் சடப்பொருள்களையும் ஆராயும் முத்திறப்பட்ட ஆராய்ச்சியில் அடங் குமே அல்லாமல் இம் மூன்றில் அடங்காத ஒரு மதம் எங்கும் இல்லை என்பது எல்லோ ராலும் ஏற்றுக்கொள்ளக்கூடியதாகும்.

கடவுள், உலகம், உயிர் என்னும் இம் முப்பொருள்களையும் பற்றி எழுந்த பலதிறப்பட்ட கொள்கைகளும், அக்கொள் கைகள் எல்லாவற்றையும் பற்றிய ஆராய்ச்சி களும், அவற்றில் பொருந்துவன இவை, பொருந்தாதன இவை என்னும் பகுத்தறிவு நிகழ்ச்சியும், பொருந்துவனவற்றைத் தெளிந் துரைத்து உண்மை முடிபு காட்டுஞ் சித்தாந் தமும் ஆகிய இவை எல்லாம் நமது சைவ சமயத்தின் கண்ணே இருப்பதனால் எல்லா மதங்களும் நமது சைவ சமயத்தின் கண்ணே அடங்கத், தான் எதிலும் அடங்காததாய் வீறுகொண்டு நிற்பதால் சைவ சமயம் ஒன்றே எல்லாவற்றினுஞ் சிறந்த உண்மைச் சமயம் என்பது நிறுவப்படுகிறது; இது பற்றியே தாயு மான சுவாமிகளும்,

"இப் பரிசாந் சமயமுமாய் அல்லவாகி
யாது சமயமும் வணங்கும் இயல்பதாகி"

என்றும்,

'இராசாங்கத்தில் அமர்ந்தது வைதிக சைவ மழகி தந்தோ"

என்றும்,

"சைவ சமயமே சமயம்" என்றும் அருளிச் செய்தார்.

இனிச் சைவசமயமே எல்லாச் சமயங்களிலும் மேம்பட்ட சிறப்புடையது என்பதனை

*கோழைகள் எப்போதும் வெற்றியடைய முடியாது.*

ஒரு சிறிது வகுத்து ஆராய்ந்து பார்ப்போம். முதலாவதாக கடவுளைப்பற்றி ஆராய்ந்தறியும் வகையில் அம்முழுமுதற் பொருளுக்கு பெயர் வைத்து வழங்கும் முறையிலும் சைவ சமயமே ஏனைய எல்லாச் சமயங்களிலும் மேம்பட்ட சிறப்புடையதாக உள்ளது என்பதை மட்டும் எடுத்துக்காட்ட விளைகிறேன்.

உலகில் காணப்படும் எல்லா உயிர்களும் துன்பத்திலிருந்து விலகி இன்பத்தைப் பெறும் நோக்கமுடையவையாகும். உயிர்கள் எல்லாவற்றிற்கும் முதல் முதல் அனுபவத்திற்கு வருவது துன்பமே அல்லாமல் வேறில்லை; பகுத்தறிவு இல்லாத சிற்றுயிர்கள் முதல் பேரறிவுடைய மக்கள்வரை எல்லா உயிர்களும் உடம்புகளிற் புகுந்து பிறந்தவுடன் பசித் தீயினால் துன்புறுத்தப் படுவதை நம் கண்ணெதிரே காண்கிறோம் அல்லவா? பின்னர் தாம் உட்கொள்ளும் உணவால் பசி தீர்ந்ததும் மகிழ்ந்து இன்புறுதலையுங் காண்கிறோம் அல்லவா? இதனால் உயிர்களுக்கு முதல் அனுபவமாய் நிற்பது துன்பமென்றும், அது நீங்குமாயின் பின் அனுபவமாய் வருவது இன்பம் என்றும் அறிய முடிகிறது.

நம்முடைய கட்புலனுக்கு எட்டாத மிகச் சிறிய புழுக்களுள்ளும் (நுண்ணுயிர்கள்) துன்பத்திலிருந்து விடுதலை பெற்று இன்பம் பெறுவதற்கு எவ்வளவு சுறுசுறுப்போடு செயற்படுகின்றன என்பதைப் பாருங்கள். கூரிய ஓர் ஊசி நுனியால் தங்கிய ஒரு சிறு நீர்த் துளியை உருப்பெருக்கக் கண்ணாடியின் உதவியுடன் பார்க்கும்பொழுது அதில் அளவற்ற புழுக்கள் பல்வேறு வடிவு உடையவையாக இருப்பதைக் காணலாம். அவற்றில் வலிவாலும் வடிவத்தாலும் பெரியவை சிறிய புழுக்களைப் பிடித்துத் தின்ன மிகவும் பரபரப்பாகத் திரிவதையும், மற்றொரு புழுவும் அவ்விரையைப் பிடிப்பதற்காக வந்து சண்டையிடுவதையும், வெற்றிபெற்ற புழு தன்னுடைய இரையைத் தின்று பசி நீங்கி இன்பமடைவதையும் காண்கிறோம். இவ்வாறாக பசி தீர்ந்த பின்னர் ஆணும் பெண்ணுமாயுமுள்ள அவை ஒன்றையொன்று மருவிக் களித்தலையும் காண்கிறோம். இவ்வாறு கண்ணுக்கு எட்டாத நிலையிலுள்ள சிறு புழுக்களில் காணப்படும் துன்ப நீக்கமும் இன்ப ஆக்கமும் அறிவிலும் நாகரிகத்திலும் மேலவராகக் கருதப்படும் மக்களிடத்திலும், அவரிலும் சிறந்த தேவரிடத்திலும் அடுத்தடுத்து நிகழ்வதைக் காணும்பொழுது எல்லா உயிர்களும் துன்பத்தை நீக்கி இன்பம் பெறுவதையே விரும்பி நிற்கின்றன என்பதை அறிந்துகொள்ள முடிகிறது.

அறிவிற் சிறிய விலங்கினங்கள் மட்டுமே துன்ப நீக்கத்தையும் இன்ப ஆக்கத்தையும் விரும்புகின்றனவா? அறிவில் பெரிய மக்களுந் தேவரும் இவ்வாறில்லாமல் அறிவு விளக்கத்தையே நாடி நிற்கிறார்களா? ஒருநாள் முழுவதும் மெய் வருந்தப் பாடுபடுகிறவர்களும், தமது உழைப்பினாற் பெற்ற பொருளைக் கொண்டு பசிப்பிணியைப் போக்கி இன்புற்றும், காமப் பிணியைப் போக்கத் தம் மனைவியுடன் வாழ்ந்து வருகின்றார்கள்; பல ஆண்டுகளாகக் கலை ஞானங்களை மிக வருந்திக் கற்றுப் பெரும் பொருள் ஈட்டுகின்றவர்களும் தம் பசித் துன்பத்தைப் போக்கித் தம் மனைவியோடு கூடி இன்புற்று வருகிறார்கள். வேறு இன்னும் எந்த வகையான முயற்சியைச் செய்பவர்களைப் பார்த்தாலும், அவர்கள் எல்லோரும் பசி, காமம் என்னும் இருவகைத் துன்பத்தையும் போக்கி இன்புறும் நோக்கத்திலே இருப்பதைத்தான் காண்கிறோம். இவ்வாறில்லாமல் அறிவுடைய சிலர் பசி காமம் என்னும் இவ் இரண்டையும் சிந்தியாது அறிவு நூல்களைக் கற்று அறிவு

*துருப்பிடித்துத் தேய்வதைவிட உழைத்துத் தேய்வது மேலானது.*

நிரப்பும் முயற்சியில் மட்டும் ஈடுபட்டு நிற்பதைக் காண்கிறோம். இவ்வாறு இவர்கள் அறிவு நூற் கல்வியில் முயல்வது என்பதும் பேரின்பப்பேற்றின் பொருட்டாகவே அன்றி வேறு நோக்கம் இல்லை என்பது தெளிவாகும்.

ஆற்றல், அறிவு பெரிதோ மற்ற இன்பம் பெரிதோ எனின், எல்லா உயிர்களும் இன்பத்தையே நாடி நிற்கும் இயல்புடையவை என்பதை அறிந்தோம். அறிவு விளக்கத்தின் பயன் எல்லாம் இன்பப் பேறாகவே முடிவதையும் காண்கிறோம். அறிவிலும் இன்பமே பெரியதும், சிறந்ததும் ஆகும். எனவே இன்ப வழிபட்டு நிற்கும் பக்தி மார்க்கமே அறிவின் வழிப்பட்டு நிற்கும் ஞான மார்க்கத்திலும் சிறந்தது என்பது தெளிவாக அறியப்படுகிறது.

மக்களாய்ப் பிறந்த நம் அனைவருக்கும் அறிவு புறத்தேயுள்ள உலகத்துப் பொருட்களை மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறி வாயிலாக அறிவதுடன், அங்ஙனம் அறிந்தவற்றைத் தமது அகத்தே கொண்டுபோய் வைத்து அது நல்லது இது தீயது எனவும், இது இதனை ஒத்தது இது இதனை ஒவ்வாது எனவும் பகுத்துணரவல்லதாகவும் இருப்பதனால், விலங்கினங்களின் அறிவைவிட எத்தனையோ மடங்கு பெரிதான புற அறிவால் வரும் இன்பமும் சிற்றுயிர்களுக்கு கிடைக்கும் இன்பத்திலும் எத்தனையோ மடங்கு பெரிதாய்த் திகழ்கின்றது. பசி எடுத்த காலத்தில் மட்டும் இரைதேட முயன்று பசி நீங்கியபின் உறங்கிக் கழிக்கும் விலங்குகள் பலவற்றைப் போல் இல்லாமல், அப்பசித் துன்பத்தை நீக்க முயலும்போதும் வருங்காலத்தை நாடி உழைக்கும் மக்களின் அறிவின் மேன்மையைப் பாருங்கள்! விலங்குகளின் பெரும்பாலானவை நாளைக்கு என்ன செய்வோம் என்னும் கவலை சிறிதுமே இல்லாதவையாகும். மக்களோ நாம் முதுமைக் காலத்திலும் வருந்தாது இருக்க வேண்டும் என்னும் வருங்கால அறிவுடையதாக இளம்பருவத்தில் ஆனமட்டும் முயன்று பொருளைத் திரட்டிச் சேமித்துக் கொள்கிறார்கள்; அது மட்டுமா? தமக்கு மட்டுமே வேண்டுமென்று பொருள் தேடிக்கொள்ளாமல் தமது இன்பத்திற்கு உதவியாய் நிற்கும் மனைவி மக்கள் பெற்றார் உற்றார் நண்பர் முதலானவருக்கும் வேண்டுமெனவும் பொருள் தேடிக்கொள்கின்றனர். சிலர் தேடிய பொருள் கொண்டு பலருக்குப் பயன்படும் வகையில் கைத்தொழில் உழவு வாணிபம் முதலிய முயற்சிகளின் மூலமாக தாம் பயன்பெறுதலல்லாமலும் பிறரையும் பயனடையச் செய்கிறார்கள். இவ்வாறு விரிந்த அறிவு கொண்டு தாம் இன்பமடைவதுடன் பிறர்க்கும் இன்பத்தை வழங்குகிறார்கள். இதனையே தெய்வப் புலவன்

"தாம் துன்புறுவது உலகு இன்புறக் கண்டு
காமுறுவர், கற்று அறிந்தார்"

என்று தெளிவாகக் கூறிச் சென்றுள்ளார். இவ்வாறு தாமும் மகிழ்ந்து பிறரையும் மகிழச் செய்யும் இயல்பு விலங்குகளுக்கு உண்டா?

மக்களிற் கற்றவராயுள்ளோர் ஏனைய கற்றறிவில்லாதார் அடையும் இன்பத்திலும் மிகச் சிறந்த இன்பத்தை அடைகின்றனர். கல்லாதவருக்கும் கற்றறிவுடையவருக்கும் அகத்தும் புறத்தும் அறிவு காணப்படுமாயினும் அவ்வறிவு கற்றவரிடத்து நுணுகிவிரிந்து பெருகிப் பேரின்பந் தருவது போலக் கல்லாதவருக்கு தரமாட்டாது. இக்கருத்தையே ஐயன் வள்ளுவன்,

*எவன் ஒருவனுக்குத் தன்னம்பிக்கை இல்லையோ அவனே நாத்திகன்.*

"கல்லா தான் ஒட்பம் கழிய நன்று ஆயினும்
கொள்ளார் அறிவு உடையார்"

எனக் கூறுகிறார். இதன் விளக்கம் யாதெனில், "இயற்கையிலே ஒருவனுக்கு, அறிவு நன்கு அமையப் பெற்றிருந்தாலும், பல நூல்களைக் கற்ற கல்வி அறிவு இல்லையென்றால், அவன் இயற்கை அறிவை, அறிஞர்கள் பெரிதாக மதித்துப் போற்றமாட்டார்கள்".

(தொடரும்...

## ஆற்றங்கரையான் அற்புதங்கள் அளவிடமுடியாது

ஆற்றங்கரையான் அற்புதம்.....
அளவிட்டுக் கூற முடியாது.....
ஆழ் கடலைப் போல.....
ஆ..... என்ன? ஆச்சரியம்....

குன்றினில் வீற்றிருக்கும் குமரா!
குலம் தழைக்க வழிகாட்டும் வேலா!
குறத்தி மகளை மணந்த குமரா - எம்
குறைகள் கூறிவிட்டால் போதும் - எம்மை
குணமாக்கும் மருந்து நீதான்!

சந்நிதி தன்னில் எம்
சஞ்சலம் கூறி அழுதால்
சந்நிதியான் தீர்த்திடுவான் என்று
எம் முன்னோர் கூறியதைக் கேட்டு
என் கவலைகள் கூறினேன்
என் குமரவேள் வந்தான் கனவில்
என்னிடம் கூறிவிட்டாய் - இனி
என் பொறுப்பு உன் துயர் என்றான்
ஏமாந்து விட்டோமா? என்று
ஏங்கித் தவித்த போது
எம் வேதனையை போக்கிடவே
எம் வேளைமுகத்தம்பி குமரன்
எம் வேண்டுதலை ஏற்றுவிட்டான்

எம் சந்ததி தழைத்திடவே
எம் சஞ்சலம் போக்கிடவே
என் வயிற்றில் சண்முக வேலன்வந்தான்
எம் மனம் குதுகலத்தில் மிதந்தது
எம் விதி குறுக்கிட்டதால்
எம் குழந்தை குறுகிய காலத்தில்
எம்மை விட்டுப் போனான்.

ஏங்கித் தவித்தோம் - தினமும்
எம் செல்வத்தை இழந்து
எம் ஏக்கம் பல்கிப் பெருகவே
ஏன்? இந்த வாழ்வு எமக்கு - என
என் குமரன் தேரோடும் வீதியெல்லாம்
என் கண்ணீரோடு ஓடினோம்.

மறை போதித்த மால் மருக - என்
குறை தீர்த்தாய் என்றிருந்தேன்
குறைதனை கூட்டிவிட்டாய் நீ
நிறை காண வாழ்வு எமக்கு ஏன்?
எடுத்துவிடு எம் உயிரை என்று
மன்றாடி நின்றவேளை
மால் மருகன் மனம் இரங்கி
மாதங்கள் எட்டு ஓடிச்சென்ற பின்
மகளாக வந்தான் குமரன் - எம்
குறைகளும் நீங்கியது - இன்
மனம் மகிழ்ந்தோம் - எம் வாழ்வில்
நிறையும் கண்டோம்
நிம்மதியுற்றோம் நித்தமும் - குமரன்
நினைவிலே வாழும் பேறும் பெற்றோம்.

-திருமதி ஈஸ்வரி செல்வம்-

# பபா சுவாமிகள்

– திரு கே.எஸ். சிவஞானராஜா அவர்கள் –

காலத்திற்குக் காலம் மகாஞானிகளைத் தந்து கொண்டிருப்பது நம் சமயமாகும். அவர்கள் எமக்குக் குருவாக அமைந்து, இறைவனையடைவதற்கு வழிகாட்டிகளாகத் திகழ்ந்து விடுகிறார்கள். ஞானிகளுக்குப் பட்டமோ, படிப்போ, பதவியோ, பாராட்டோ, விருதுகளோ அவசியமில்லை. அப்படி ஏதாவது இருந்தாலும் அவர்கள் பெரிதாக அலட்டிக்கொள்வதில்லை. அப்படி ஏதாவது புகழ்ந்து உச்சத்தில் கொண்டு போய் விட்டாலும், உடனடியாகக் கீழே இறங்கி வந்துவிடுவார்கள். இந்தப் பண்பு ஞானிகளுக்கு மட்டும் வாய்க்கப்பெறுவதாகும். அஞ்ஞானிகளுக்கு இதுதான் கொண்டாட்டமாக இருக்கும். மெஞ்ஞானம் வாய்க்கப் பெற்றவர்கள் எதையுமே பெரிதாக எடுக்க விரும்பமாட்டார்கள். ஆண்டவனும் லௌகீகத் துறையில் ஏற்படும் நிலையில்லாதவற்றை உணர்த்துவதற்காகவே ஞானிகளை நிலையாக்குவதும், படைப்பதும், முன்னிலைப்படுத்துவதும் தேவைப்படுத்தப்படுகிறது. அந்த நோக்கில், 63 நாயன்மார்கள் தொடக்கம் இற்றைவரை பல மெஞ்ஞானிகளை நாம் கண்டும்- கேட்டும்- அனுபவித்தும் ஆன்மீக வாழ்வில் திளைத்திருக்கின்றோம். குறிப்பாகச் சமய குரவர்கள், சந்தான குரவர்கள், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், கடையிற்சாமியார், செல்லப்பா சுவாமிகள், யோகர் சுவாமிகள், குடைச்சாமிகள், பெரிய சந்நாசியார், நயினை முத்துக்குமார சுவாமியார், செல்லாச்சி அம்மையார், சடையம்மா, சிவசத்தர் சுவாமிகள், வடிவேல் சுவாமிகள், சுவாமி ரமண மகரிஷி பரமஹம்சர் இராமகிருஷ்ண சுவாமிகள், இராமலிங்க வள்ளலார், சுவாமி விவேகானந்தர், சுவாமி ஞானப்பிரகாசர், சடைவரத சுவாமிகள், அன்னை தங்கம்மா, சபாரத்தின சுவாமிகள், அருட்கவி வினாசித்தம்பி, கிருபானந்த வாரியார், மணிஐயர், மகாதேவா சுவாமிகள், மயில்வாகன சுவாமிகள், பெரியண்ணை என்று நம்மை யாரென்று நமக்குணர்த்திய மகா ஞானிகள் தொடர்ந்தும் பிறந்தவண்ணம் இருக்கிறார்கள். எமது சமயமும் காலந்தோறும் ஞானிகளைத் தந்தவண்ணமே மிளிர்கின்றது. தற்போதும் ஓர் இளைய சுவாமி ஒருவர் ஆன்மீக இடங்களில் வலம் வருகின்றார். அவரைப் பற்றிய ஓர் அறிமுகமே இக்கட்டுரையாகும். அவரே இவர்!

## பபா சுவாமி

பெரிய படிப்பென்று இவர் படிக்காதவர். உடை நடை பாவனை அப்படி இப்படி எதையுமே கவனிக்காதவர். வேட்டியோ சாரமோ சட்டையோ எதுவென்றாலும் அதிலே ஒரு கதையுமிருக்கும்- கவலையுமிருக்கும். கவனமோ எங்களுக்கிருக்கும். பேச்சிலே இரண்டு எழுத்துக்கள் ஒன்றித்தால்போல ஒரு பிடிப்பு இருக்கும். நரையும், திரையும் நிறைந்த பொம்மைத் தலை. வாடைக் காற்றுக்குச் சரிந்து கவிழ்ந்த பயிர்போல மீசையும், தாடியும், சீப்புக்கும் சோப்புக்கும் இடங்கொடாத தலை, சட்டைக்குள் அடங்காத உடம்பு, சாரத்துக்குள்ளும், வேட்டிக்குள்ளும் தடுமாறும் கால்கள், இந்தப் பெரிய உருவத்திற்காகச்

*நீங்கள் யாருக்கும் உதவிசெய்ய முடியாது, சேவை மட்டுமே செய்ய முடியும்.*

சரிக்கட்டப்பட்ட ஒரு இரண்டு சில்லு வாகனம், எதை எதையோ திணித்து மருந்தாக வெளியிலெடுக்கும் ஞானப்பை, செருப்பே அணியாத வறண்ட கால பாலைவனக் கால்கள், உருண்டு திரண்ட திறந்த மேனி, ஒளி சிந்தும் பார்வை, மழலை பேசும் தமிழ், வஞ்சகம் எள்ளளவும் இல்லாத நெஞ்சகம், தன் வடிவத்தையே அழகு பார்க்காத ஒரு பிரம்மச்சாரி, அடுத்த வேளைக்கு உணவு தேடாத ஒரு துறவி, தன்னைத் துறந்த தார்மீகப் பிறவி. மிகவும் எளிய முறையில் உடல்மொழியால் ஆன்மீக மழையை பொழிவிக்கும் சொரூபி. இணுவில், சந்நிதி, கதிர்காமம், கிளிநொச்சி, மலையகம் எனப் பல இடங்களிலும் பல வடிவங்களில் தரிசனமாக மிளிர்பவர். அவர்தான் பொன்னுத் துரை அருள்செல்வம் ஆவார்.



## இணுவில்

ஆன்மீகம் நிறைந்த, புராதனச் சிறப்புமிக்க, இணுவில் கந்தசுவாமி கோவிலில் "பபா சுவாமிகள்" தென்கிழக்கு மூலையில் சும்மா இருக்கும் தவக்கோலத்தில் பொலிந் திருப்பார். மேற்சொன்ன குணாம்சங்களைக் கூட்டிப்பார்த்தால் உருவம் தானாகப் பளிச்சிடும். அவரோடு சில அடியார்களும் சேர்ந்து ஆன்மீக சுகம் அனுபவிப்பர். பரராசசேகரப் பிள்ளையார், கந்தசுவாமியார், மஞ்சத்தடி முருகன், சிவகாமி அம்மன், காரைக்கால் சிவன், செகராசசேகரப் பிள்ளையார், வட்டுவினி அம்மன், லிங்கேஸ்வரர், இளந்தாரி வைரவர், அரசோலைப் பிள்ளை யார், அண்ணன்மார், வேங்கடேஸ்வரர், ஆஞ்சநேயர், பல்லப்ப வைரவர், விளாத்தியடி வைரவர், விசாலாட்சி சமேத பரமேஸ்வரர் என சகல ஆலய சம்பத்துக்களோடும் அற்புதங் களோடும் வரங்களோடும் பபா சுவாமிகள் பூத்திருப்பார். எந்தவொரு கவலையுமில்லாமல், எல்லாமே அவனேதான் என்ற பரம்பொருளின் சிந்தனையோடு, எதிர்பாராத தெய்வீக வார்த்தைகளை உதிர்த்து விடுவார். தான் நினைத்த மாத்திரத்தில், எதிர்பாராமல், எதிர்பாராத வீட்டுக்குச் செல்வார். சாப்பாடு தயாராக இருக்கும். சிலவேளைகளில் சாப்பிடுவார். சிலவேளை களில் உண்ணாமலேயே திரும்பிவிடுவார்.

## சந்நிதி

பெரும்பாலும் "பபா சுவாமிகள்" சந்நிதியான் ஆச்சிரமத்திலேயே மோகன் சுவாமி களோடு சேர்ந்து அவரது தொண்டுகளுக்கு அனுசரணையாகவும், ஆதரவாகவும் இருக்கிறார். சந்நிதி முருகன் எதை எண்ணுகிறாரோ அது மோகன் சுவாமிக்கு வாலாயமாகிறது. அந்த வாலாயத்திற்கு பபா சுவாமிகள் பக்கபலமாக இருந்து வேண்டிய ஒத்துழைப்பினை நல்குவதில் பேறடைகின்றார். முருகனுக்கும் எளிமையுடன் கூடிய பாமரவடிவமே பிடிக்கும். கீழிறங்குதல் என்பது ஆன்மீக வடிவமாகும். சந்நிதி அத்தகு கீழிறங்கும் படிமுறையினைக் கற்றுத் தருகிறது. ஆன்மீக வாழ்வில் பலர் மேலிருந்து கீழிறங்க முடியாமல் மேடைகளோடும், கதிரைகளோடும், பதவிகளோடும் சிக்கெனப் பிடித்திருக்கும் காலமதில் மோகன் சுவாமிகளும், பபா சுவாமிகளும் வழிகாட்டிகளேயாவர்.

## அற்புதம்

நாட்பட்ட நோய்கள் இவரது பார்வையால் நீங்கி பழையபடி கடமைக்குத் திரும்பிய பலர் இப்போதும் உள்ளனர். நாரிப்பிடிப்பால் துவண்ட பெண்ணவள், பல வைத்தியங்கள் செய்தும் குணமாகாத நிலையில், தனது மடியில் இருந்த ஓலை நெட்டியை நீட்டி இதைச் செருகுமாறு கொடுக்க விடிந்து எழுந்து குணமாகி நடந்து சென்று பழையபடி வழமைக்குத் திரும்பினார். "இந்தா! நீ வீடு கட்டப்போகிறாய் என்றதும் வீடு கட்டி முடிந்தது! என்ன யோசிக்கிறாய்? கடனும் தீரப்போகிறது. அடேயப்பா! நல்ல உத்தியோகம் கிடைத்தது. பெரிய தேர்தல் வந்தது. இந்தா பார்! வீட்டுக்குப் போகப்போறார்கள் பாருங்கோ" என்றார் பபா சுவாமிகள். அப்படியே நடந்தது. மோகன் சுவாமிபோல் யாரும் பிறக்க முடியாது என்று கூறினார். அது இந்தியாவரையும் ஒலித்தது. இலங்கைக்குப் புரியாததை இந்தியா செய்தது. மேலும் முதியவர்கள், இளையவர்கள், குழந்தைகள், பிஞ்சுகள், பதவியிலுள்ளோர் இவரது பார்வையினால் மட்டுமல்ல, இவரைக் காண்பதனால் கூட வல்லமை பெற்றுச் சித்திபெறுவர்.

இறைவன் மனிதனாகப் பிறப்பதும் உண்டு.
மனிதன் இறைவனாக மாறுவதும் உண்டு.
தேவர்கள் மனிதனாக இறங்குவதும் உண்டு.
மனிதர்கள் தேவர்களாய் நடமாடுவதும் உண்டு.
பேயனாய் பித்தனாய் ஆண்டியாய் வருவதும் உண்டு.
பூட்டுகளுக்கு இறைவனைத் தெரிவதுண்டு! ஆனால்
பூட்டைத் திறக்கும் சாவிகள் தொலைவதுமுண்டு.

செல்லப்பரைக் கண்டவர்கள் தெய்வப்பிறவிகள். கடையிற் சாமியைக் கண்ட நாய்க்கும் முத்தி கிடைத்தது. யோகரைக் கண்டவர்கள் அதிசயப் பிறவிகள். குடையிற் சாமியைக் கண்டவர்கள் பேறானவர்கள். பெரியண்ணையைக் கண்டவர்கள் சிவமானார்கள். பபா சுவாமி களைப் பார்த்தவர்கள் துலங்குவார்கள். இனியென்ன? அவரை ஒருமுறை பார்த்துக் கதைத்துப் பசியாறுங்கள்.

பபா ஒரு தேவர்! இணுவிலில் 1959.12.15இல் பிறந்திருக்கின்றார். அவர் அருள்செல்வம் என்றும் அருட்செல்வம் என்றும் இப்போ அருட்தெய்வமாக நடமாடுகிறார். இதனைப் புரிந்து கொள்வதற்கு இன்னும் பல காலங்கள் போகலாம். பபா சுவாமிகளை எழுதுவதற்குக் கிடைத்த பாக்கியம் நடு இராத்திரி. இப்பொழுது நேரம் 01.10.2017 இரவு 12.00 மணி. ஏனென்றால் அவரே என்முன் கதிரையில் அமர்ந்திருக்கின்றார்! நம்புவீர்களா? அதனால்த்தான் அருட் செல்வம் அருட்தெய்வமாயிற்று.

### அனுசரணை

சமுதாய சூழ்நிலைக்கு ஏற்ப வாழ்க்கையை அனுசரித்து அமைத்துக் கொள்வதுதான், வெற்றிகரமான வாழ்க்கைக்கு உரிய முழு ரகசியமாகும். இந்த உண்மை, வாழ்க்கை மலர்ச்சி பெறுவதற்கு அடிப்படையாக இருந்து பெரிதும் துணை புரிகிறது. சூழ்நிலைக்கு ஏற்ப நன்றாக அனுசரித்துக் கொள்பவர்கள் நீண்ட காலம் வளமான வாழ்க்கையை வாழ்கிறார்கள்.

**-சுவாமி விவேகானந்தர்-**

*பலமற்ற மூளையால் நாம் எதையுமே செய்ய இயலாது. அதனால் அதைப் பலப்படுத்த வேண்டும்.*

# வழித்துணை 5

– ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் –

01 மாமிசமும் தாவரமும் போசனமே யன்றி
நாமிறையை அடைகின்ற மார்க்கமது வல்ல
பூமிதனில் புரிந்துணர்வு பிறந்திட்டால் போதும்
சாமியின்முன் மாமிசமும் தாவரமும் ஒன்றேயாம்.

02 விட்டுக் கொடுத்தலென்றோர் சிறுவிடயம் பிறர்க்காய்நாம்
தொட்டுக் கொடுத்திட்டுத் துயரின்றி வாழ்ந்திட்டால்
எட்டிப் பிடிக்கவே முடியாத பெருவிடயம்
கிட்டுதற்கு அதுவே வழித்துணையாம் என்றறிவீர்.

03 மரமது பூப்பது மானிடரால் எனில்
சிரமது மாலைகள் ஏற்பது நியாயமே
மனமது கூடப் பூத்திடா மானிடர்
மார்பினில் மாலைகள் அனலிடை இட்டதே.

04 ஆண்டவனை வேண்டினாலும் விட்டாலும் அவனியிதில்
உண்டென்பது உங்களுக்கு உண்டு அதுமாறாது
மீண்டுமோர் பிறப்பதனில் சிறந்துநீர் பிறந்திடிலோ
என்றென்றும் ஆண்டவனை வேண்டுதலே வழியாகும்.

05 பிறப்பதனில் எழுதியதே தினம்தினம் நடப்பதனால்
நிறச்சேலை முழுவியளம் நடப்பதினை மாற்றாது
பிறர்மனதை நோகடிக்கும் பொறுப்பற்ற செயலொன்றே
உறக்கத்தைக் கெடுத்துங்கள் நிம்மதியைக் குலைத்துவிடும்.

06 சகிக்கவே முடியாத விடயமொன்றைச் சகிக்கையில்
வகிக்கின்ற வாழ்விற்கு அர்த்தமில்லைப் போலிருக்கும்
மகிழ்ச்சியோடு எதையுமே சகித்துக்கொண் டிருப்போர்க்கு
வெகிழ்ச்சியது நீங்கிப் பின் பெருமகிழ்ச்சி நிலைத்திருக்கும்.

*எந்த வேலையாக இருந்தாலும் அதைத் தன் விருப்பத்திற்கு மாற்றுபவனே அறிவாளியாவான்.*

07 நீதிநெறி மேதினியில் சீர்குலைந்து போனதென்று
வீதியிலே வீழ்ந்துநாம் விம்மிவிம்மி அழுவதிலும்
பாதியதில் எமக்கும்தான் பங்குண்டு என்கின்ற
சேதியெண்ணிச் செயல்பட்டால் நீதிஎன்றும் நிலைத்திருக்கும்.

08 குறையொன்றைப் பிறர்மீது கூறுகின்ற போதினிலே
நம்முறையுள் நிறைந்திருக்கும் குறையினையும் எண்ணவேண்டும்
கறைபடிந்த நம்மிதயக் கதவுகளைப் பூட்டிவிட்டு
சிறையுடைத்துப் பிறர்குறையை வெளிக்கொணர்தல் நன்றன்று.

09 முடிந்ததோர் விடயம்தன்னை முடிந்ததாய் எண்ணிடாமல்
கடிந்ததைத் தினமும் பேசிக் காலத்தைக் கழித்திடுதல்
விடிந்ததும் விடியாவாழ்வில் விபரீத இருளும் சூழ்ந்து
மடிந்தழிந்து போதற்கே அது மறைமுக வழியும் காட்டும்.

10 உடற்பலத்தை பலமென்று நம்பியே இருப்பவர்கள்
உடல்கெட்டுப் போனதுமே பலமிழந்து போய்விடுவர்
திடமனதைப் பலமென்று தினம்நம்பி இருப்பவரோ
தடம்பதிப்பர் தரணியில்தாம் பலம்பெற்றோரென்றே.

## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை

சந்நிதியான் ஆச்சிரமத்தின் சகல பணிகளிலும் முன்னின்று ஒத்துழைப்பும் ஆலோசனைகளும் நல்கிவரும்,

1) யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர் திரு துரை. கணேசமூர்த்தி அவர்களின் தாயார் **திருமதி மாரிமுத்து அம்மா துரைச்சாமி** அவர்களின் மறைவுக்கும்,

2) புட்டளை மகா வித்தியாலய அதிபர் திரு ஆ. சிவநாதன் அவர்களின் தாயார் **திருமதி கமலாம்பாள் ஆறுமுகம்** அவர்களின் மறைவுக்கும்

சந்நிதியான் ஆச்சிரமம் தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றது. அவர்கள் இருவரதும் ஆத்ம சாந்திக்காக ஆச்சிரம சமூகம் பிரார்த்திக்கின்றது.

ஓம் சாந்தி... சாந்தி... சாந்தி.

# கண்டோம் கதிர்காமம்

[தொடர்ச்சி...

– திரு அன்னைதாசன் அவர்கள் –

அங்கே, எமக்கு முதல் சிலர் எழுந்து தமது காலைக் கடன்களை முடிக்க ஆரவார மாகிக் கொண்டிருந்தனர். நானும் எழுந்து கட்டிலின்மேல் இருந்தவண்ணம் அயலில் உள்ளவர்களுடன் அளவளாவிக் கொண டிருக்கிறேன். ஒருவர் பதறியடித்துக்கொண்டு ஓடிவந்து ஐயா! ஐயா! இங்கே பாம்பு நட மாட்டம் இருக்கிறதாம். கவனமாக இருக்கும் படி சுவரில் எழுதி வைத்திருக்கிறார்கள் என்றாரே எல்லோரும் துள்ளி எழுந்து கட்டிலின் மேல் நின்றபடி அங்கும் இங்கும் பார்த்தது மட்டுமல்ல மெத்தைகளையும் உயர்த்தி உயர்த்திப் பார்த்தார்கள். எந்தன் மனநிலை சொல்லிவேலையில்லை. இன்று, என்னடா சந்நிதியானே! முழுவியளமே இப்படி இருக் கிறதே என்று எண்ணியவேளை ஒருவர் வந்து குளியலறைத் தண்ணீரும் முடிந்துவிட்டது என்கிறார். எப்படி இருக்கும் எங்கள் நிலை. சரி நடப்பதைப் பார்ப்போமென்றிருக்க எமக்கு வழிகாட்டிய அன்பர் வந்துவிட்டார். அவர் எமது அல்லோல கல்லோலத்தை உணர்ந்து விட்டார். ஐயா! இது ஒரு பெரிய தோட்டம். இங்கே கள்ளர்களின் தொல்லையுங்கூட. அவர்கள் இங்கு வந்து இவற்றை அசிங்கப் படுத்தியும் விடுவர், அவர்களிற்கு எச்சரிக்கைக் குத்தான் இப்படி எழுதி வைத்திருக்கிறோம், நீங்கள் ஒன்றுக்கும் பயப்படத் தேவை இல்லை என்றாரே! போன உயிர் மீண்டது போலிருந்தது. அத்துடன் நீங்கள் வருவீரகள் என்று தெரிந்து கூட்டித் துடைத்து சகல ஆயத்தங்களும் செய்து துப்பரவாக வைத் திருக்கிறோம். அங்கு அவர் இங்கு வரும் நீர் சப்ளையை நிறுத்தியிருந்தார். இப்போ சரி செய்துவிட்டோம்- தொட்டியில் இருந்த தண்ணீரதான் முடிந்தது. நீங்கள் விரைவாக ஆயத்தமாகி வாருங்கள். உங்களுக்குரிய வகுப்பு ஒழுங்குகள் அங்கே பிரதான மண்ட பத்தில் நடைபெற உள்ளன என்பதையும் அறிவுறுத்திச் சென்றார்.

எனவே அனைவரும் ஆயத்தமாகி அப்பிரதான மண்டபத்திற்குச் செல்கிறோம். அங்கே வகுப்புகளிற்கு எல்லோரும் ஆயத்த மாகிவிட்டனர். சைதன்ய சுவாமிகளின் தலை மையில் தியான வகுப்புகள் ஆரம்பமாகின. ஏறக்குறைய 18பேர் பங்குபற்றியிருந்தனர். தீபமேற்றல் சுவாமிகளின் ஆரம்ப உரை களுடன் மௌனப் பிரார்த்தனை ஓங்காரத் தைத் தொடர்ந்து நடைபெற்றது. பின் அறி முக உரைகள், எல்லோரும் தம்மைத்தாமே அறிமுகமாக்கினர். அப்பொழுது எங்களுடன் வெளிநாட்டு வெள்ளைக்கார அன்பர்கள் ஐந்துபேரும் பங்குபற்ற வந்துள்ளார்கள் என அறிய முடிந்தது. மூன்று பெண்களும் இரு ஆண்களுமாக ஐவர். அவர்கள் ஒவ்வொரு வரும் ஏற்கனவே அறிமுகமில்லாத இளை ஞர், ஸ்ரீலங்காவிற்கு வந்தபின் ஏற்பட்ட ஆன் மீக நாட்டப் பிணைப்பே ஜனாப் பைஸல் அவர்களுடனான தொடர்புக்கு காரணமாக இருந்ததென்பதையும் அறியமுடிந்தது. அதே வேளை சிவன், விஷ்ணு, தியானம் என்பவற் றைப் பற்றிய அறிவுகூட எம்முடன் வந்தவர் களிலும் பார்க்க விஞ்சி நிற்பதையும் அறிந்து உணரமுடிந்தது. தொடர்ந்த பயிற்சிகளின் பொழுது ஆழ்நிலைத் தியானம் சமய விழு மியச் சிந்தனைகள், கடைப்பிடித்தல் என்ப வற்றில் கணிசமான அறிவு மேம்பாடடைந்து இருப்பதையும் கண்ணுற்றோம். இவர்கள் சைவ உணவுப் பிரியர்களுங்கூட. இவர் களுடன் கலந்துரையாடும்பொழுது எமது ஆச்சிரமத்தைப் பற்றியும் ஆச்சிரமத்தினூடாக

*உடல் பலவீனத்தையோ, மன பலவீனத்தையோ உண்டாக்கும் எதையும் அணுகக் கூடாது.*

சுவாமிகள் செய்யும் சமூகப் பணிகளைப் பற்றியும் விளக்கியபொழுது அவர்கள் வியந்ததுடன் இம்முறை பயண ஒழுங்கு பெரும்பாலும் பூர்த்தி நிலையில் இருப்பதால் தமது அடுத்த முறை ஸ்ரீலங்காவிற்கான விஜயத்தின்பொழுது சந்நிதியானிடமும் வந்து நேரில் தரிசித்து செல்வதற்கான தமது அவாவினையும் தெரிவித்து மகிழ்ந்தனர். பயிற்சி வகுப்பு இப்போ ஒரு நாற்பது நிமிடங்களே நடைபெற்றன. அதன் ஆரம்பமே மிகவும் சுவையாக இருந்தது. தொடக்கமே கடவுள் இருக்கின்றாரா எனத் தொடங்கி கடவுளின் கிருபையே இந்நிகழ்வு என முடித்த பாங்கு அபரிமிதமானது. தொகுப்பாக கூர்மையான ஒரு நிலைப்படுத்தப்பட்ட புத்தியாலும் அசையா நம்பிக்கையாலுமே இறைவனை எல்லோரும் எளிமையாக உணர முடியும் என்றும் உள்ளத் தூய்மையே கடவுளைக் காட்டும் என்றும் நிரந்தர அமைதி சகலர்க்கும் அன்பு செலுத்துவதாலும் சகலரிடத்திலும் நல்லதையே பார்ப்பதாலுமே கிடைக்கும் என்றும் விளக்கியமை சிறப்பாக இருந்தது. இவற்றை மிக ஆர்வமாகக் கிரகித்ததுடன் இடைக்கிடையே சிறுசிறு சந்தேக நிவர்த்திக் கேள்விகள் கேட்டு அவ்விளைஞர் யுவதிகள் தெளிந்த சிறப்பையும் காட்சியாகக் காட்டலாம். இவை அவர்களுக்கு மட்டுமல்ல வாசகர்களுக்குமான செய்தியுங் கூட.

இப்பொழுது காலைத் தேனீர் சிற்றுண்டி மிகவும் சுவையாக அவரவர் விருப்பிற்கமைவாக இடியப்பம் பிட்டுடன் சுய பரிமாறல் முறையுடன் முடிந்தது. ஆனந்தமாக அனைவரும் அருந்தியபின் வெளிக்களத் தரிசிப்பு நிகழ்வு நடைபெறுகிறது. ஜனாப் பைஸல் அவர்களும் அவரது உதவியாளரும் அவர்களது செல்லப்பிராணிகள் (காவலர்கள்) தமது நீளமான பயங்கரமான நாக்கைத் தொங்கவிட்டபடி அவற்றைக் காட்டி விளக்கியபடி எம்முடன் வருகிறார்கள். அங்கே பார்க்கிறோம் மிகப் பெருந்தோட்டம். அது வானளாவ உயர்ந்த மரங்கள் ஏற்ற இறக்கமான பெரு நிலப்பரப்பு ஒரு பகுதியில் மேய்ச்சல் புற்றரை. ஒரு பகுதியில் ஆழ்துளைக் கிணற்றிலிருந்து நீரெடுத்து சுத்திகரித்து போத்தல்களில் அடைக்கும் தொழிற்சாலை. ஆங்காங்கே சிறு கொட்டில்களாகத் தங்குமிடமனைகள் ஏறக்குறைய 190 ஏக்கர் நிலப்பரப்புக் கொண்ட ஓர் தோட்டத்தில்...

(காட்சி தொடரும்...

---

238ஆவது மலரில் வாசகர் உள்ளங் கண்டோம். முதலில் எமது மதிப்புமிகு வாசகர்களில் ஒருவரான திரு க.ச. தர்ப அவர்களுக்கு எமது நன்றிகளும் பாராட்டுக்களும் வாழ்த்துக்களும்.

அன்பான வாசகர்களே!

ஆம்! பலரை வியக்க வைக்கும் பன்மை விளைமுற்றோடு கூடிய தலைப்பு "கண்டோம் கதிர்காமம்" என்பது பண்டிதர்களின் பார்வையையே கவர்ந்தது. ஆச்சிரம சுவாமிகள் சொல்வது போன்று இத்தலைப்பு சந்நிதியான் தேர்ந்தெடுத்தது. திகட சக்கரத்தின்மூலம் திகைக்க வைத்த முருகனல்லவா? இவன். அத்தோடு இப்படியாக தொடர் காட்சிகளைக் காட்டி நீள வைப்பான் என அன்று நாம் நினைத்ததுமில்லை. சந்நிதியான் ஆச்சிரமத்தினூடாக எம்மில் பலருக்கு அவன் காட்டிய காட்சிகள் பதிவாகின்றன. அத்துடன் அக்காட்சிகளூடாக இவ்வுலக மக்களுக்கு அரிய செய்திகளைக் காட்டி நிற்பதையும் பல வாசகர்களது அபிப்பிராயங்கள்மூலம் அறிய முடிகிறது. நேர்சிந்தனையாளர்களான அவர்களது தூண்டலூடனும் சந்நிதியானின் அருட்தூண்டலூடனும், கட்டுரை வளர்கிறது. அத்துடன் இதுவெறும் மலையகத்துடன் மட்டும் நின்றுவிடவில்லை. கிழக்கு தெற்கு மத்தி எனப் பரந்துபட்ட சந்நிதியான் ஆச்சிரமப் பணிகளூடு பயணிக்கின்ற ஒன்று. எனவே "கண்டோம் மலையகம்" என தலைப்பினை மாற்றுவது பொருந்தாது. தொடர்களுக்கு தலைப்பு ஓர் சுட்டியேயொழிய அத்தியாயங்கள் முழுவதும் பலிச்சிடவேண்டும் என்ற அவசியமில்லை. இடைக்கிடையே இதன் விளக்கத்தை தொட்டு இழுத்துச் செல்வதையும் உற்றுநோக்கின் புரியும். எனவே விரைவில் இத்தொடர் நிறைவுக்கு வர இருப்பதால் "அவன்" தந்த தலைப்போடே தொடர்வோம். காட்சிகளைக் காண்போம். வளர்க எல்லோரது வாசிப்பூக்கமும்.

*உன்னால் சாதிக்க இயலாத காரியம் என்று எதுவும் இருப்பதாக ஒருபோதும் நினையாதே.*

# குருவானவரும் மணிவாசகரும்

– திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்கள் –

பாண்டி நாடே பழம் பதி எனவும், தென் பாண்டி நாடே சிவலோகம் எனவும் புகழ்பெற்ற பாண்டி நாட்டிலுள்ள திருவாத வூரிலே, அந்தண குலத்திலே சம்புபாத சிவாச் சாரியாருக்கும் சிவஞானவதி என்பாருக்கும் குழந்தையாகப் பிறந்தவர் திருவாதவூரர் என இயற்பெயர் கொண்ட மணிவாசகப் பெருமான்.

நாட்டிலே அஞ்ஞான மாயை நீங்க வும், மக்கள் மனதில் தெய்வ நம்பிக்கை வளர்ந்தோங்கவும் ஞானசூரியன்போல் தோன்றி னார் திருவாதவூரர்.

இறைவனே இவருக்காக பல திரு விளை யாடல்களைச் செய்தமையை யாம் அறிவோம். சிவபெருமான் குருவடிவாக திருப் பெருந்துறையில் எழுந்தருளியமையும் அவர் சார்பில் குதிரை விற்பவராக பாண்டி நாடு சென்றமையும், மணிவாசகரைக் கொண்டு திருவாசகம், திருக்கோவையார் என்னும் திரு முறைகளைப் பாடுவித்தமையும், பின் அவர் சொல்ல, அத்திருமுறைகளை "வாதவூரன் சொல்லப் பொன்னம்பலவன் எழுதியது" என்ற வகையில் எம்பெருமானே தமது திருக்கரங் களால் எழுதியமையும் அற்புத நிகழ்வு களாம்.

சாதாரண ஒரு குருவின் உபதேசமே எம்மை நல்வழிக்கு கொண்டுவந்து விடும். இங்கு இறைவனே குருவாக எழுந்தருளி உப தேசித்தார் என்றால் பாண்டியனது அமைச்ச ராக இருந்த திருவாதவூரரில் எத்தகைய மாறுதல் நிகழ்ந்திருக்கும் என்று சிந்தித்துப் பாருங்கள். குருவருள் பெற்ற திருவாதவூரர் இரும்பு பொன்னானாற்போல் மாறுதல் அடைந் தார். அந்த அருள் கலந்த அனுபவத்தால் சொல் நயம், பொருள் நயம், பக்தி ரசம் சொட்டப் பாட ஆரம்பித்தார். இவரது வாசகங் கள் மாணிக்கங்கள்போல் மிளிர்ந்ததால் மணிவாசகர் என்ற பெயரையும் இவர் தம் குருவானவர் மூலம் பெற்றார். அவரது சிந் தனை, வந்தனை யாவுமே எம்பிரானுக்கு அர்ப்பணமானது. தனக்குக் கிடைத்த ஞான குருவின் கருணையை எண்ணி எண்ணி மனம் நெகிழ்ந்து உருகிப் பாடலானார் மணி வாசகர். திருவாசகமும் பிறந்தது.

மணிவாசகருக்காக காட்டு நரிகளைப் பரிகளாக்கி, பெற்றி பிறர்க்கரிய பெம்மான் பெருந்துறையான், கொற்றக் குதிரையின் மேல் வந்தருளிப் பாண்டியனைத் திருப்திப் படுத்திய பின் தன் திருவிளையாடலையும் காட்டினார் இறைவன். அரியோடு பிரமற்கு அறிவறியொண்ணான், நரிகளைக் குதிரை கள் ஆக்கி, மீண்டும் நரிகள் ஆக்க, குதிரை கள் கொண்டு வந்தவருக்கும் தனது மந்திரி யார்க்கும் பரிசு நல்கி மகிழ்ந்த பாண்டியன், பெருஞ் சீற்றங்கொண்டு தனது மந்திரியாரான திருவாதவூரரை கடுமையாகத் தண்டிக்க உச்சி வெய்யிலில் தன் மெய்யன்பன் வருந்து வதைக் கண்ணுற்றார் கண்நுதலான்.

இறைவனின் அடுத்த திருவிளை யாடல் ஆரம்பமாகின்றது. பாண்டிய நாட்டிலே மதுரையின் செல்வமான வைகை பெருக் கெடுக்கின்றது. ஆற்றின் சீற்றத்தைத் தடுக்க முடியாமல் நாடே அல்லற்படுகின்றது. பாண் டியன் நிலை பரிதாபத்திற்குட்பட்டதாயிற்று. அறியாது மெய்யடியார் ஒருவரை, எம் பெரு மானின் அன்பனைத் தண்டித்து விட்டான் அல்லவா!

*உற்சாகமாக இருக்கத் தொடங்குவதுதான் வெற்றிகரமான வாழ்க்கைக்கு அறிகுறி.*

சீற்றமும் தவிப்பும் கொண்ட பாண்டியனின் கட்டளைப்படி நகர மக்கள் வைகைக்கு அணை கட்டுகிறார்கள். மீண்டும் திருவிளையாடல் ஆரம்பமாகின்றது. தனது அடியாளான வந்தியம்மைக்கு ஆற்றுக்கு அணை கட்டும் கூலியாளாக எழுந்தருளுகின்றார் எம்பெருமான். அம்மையின் பிட்டினைக் கூலியாகப்பெற்று அணைகட்டி, தன் குறும்பால், பாண்டியனின் பிரம்படிக்கும் ஆளாகின்றார் ஐயன்.

பிட்டுக்கு மண் சுமந்த பெருந்துறைப் பித்தனின் பேரருளைப் பெற்ற மணிவாசகரின் பக்குவம் சொற்களில் அடங்கா.

திண்போர் விடையான் சிவபுரத்தார் போர் ஏறு
மண்பால் மதுரையில் பிட்டு அமுது செய்தருளி
தண்டாலே பாண்டியன் தனை பணி கொண்ட
பண்பாடல் பாடி நாம் பூவல்லி கொய்யாமோ!

என மணிவாசகரைப் பாடவும் வைக்கின்றார் திருப்பெருந்துறை மேவிய ஈசனார். இந்தவகையில் மணிவாசகர் ஞான மார்க்கத்தில் பக்திபெற்று உய்வுற்றமை சொல்லுந்தரமன்று.

## கல்விப்பணி

செல்வம் கொடுக்கும்
போதுதான்
செல்வமாகிறது - எங்கள்
செல்வச் சந்நிதியான் தந்த
செல்வப் புதல்வனாம்
டாக்டர் மோகனதாஸ்
சுவாமிகளின் நாமம்
ஈழத் திருநாட்டின்
பட்டி தொட்டியெல்லாம்
வாழும் பாமர சிறார்களின்
கல்விப் பசி போக்கிட
காலத்தால் அழியாது
வாழும் வரம் பெற்று
சேவை நிலைத்திட
வாழ்த்துகிறேன் பணிவுடனே
வாழ்க நீடூழி
வளர்க நின் கல்விப்பணி

**--எஸ். சிவனேஸ்வரராஜா-**

**(மாத்தளை)**

# இறைவன் தந்த இனிய அனுபவம்

- திருமதி ப. நடராஜா அவர்கள் -

தும்பிக்கையான் என்றும் துணையிருப்பான் - அந்த
நம்பிக்கையே எமை வாழ வைக்கும்.

முருகன் வந்தான் முத்தமிழறிவு தந்தான்
அருகில் வந்தான் அருளமுதம் தந்தான்
குருவாய் வந்தான் குலப்பெருமை தந்தான்
கருணை பொழியும் திருக்காட்சி தந்தான்

இருளைப் போக்கி ஒளியைத்தரும் இதிகாசம் தந்தான்
விரும்பும் அடியவர் அருந்தி மகிழ்ந்திடத்
திரு வாசகமாம் நறுந் தேனைத் தந்தான்
உருகிப் பருகி உவந்திடவே திருப்புகழைத் தந்தான்

கந்தன் வந்தான் கவிதை தந்தான்
சிந்தை மகிழ்ந்திடச் சிவபாலனாய் வந்தான்
தந்தை தாய் ஆசானாய் அன்பைப் பொழிந்தான்
எந்தையீசனாய் உடலிடம் கொண்டு உவகை தந்தான்

முப்பெரும் சக்தியாய் முருகன் வந்தான்
இப்புவியில் இன்பமாய் வாழ இயல்புவழி தந்தான்
செப்பரும் செயல்கள் செய்திடும் கருவி யாக்கினான்
முப்புரம் எரித்தவன் சபையில் முந்தியிருக்கச் செய்தான்

எண்ணம்போல் வாழ்வு தந்தே ஏற்றி வைத்தான்
பண்ணிய செயலின் பலனாய் வந்து பக்குவம் தந்தான்
கண்ணின் மணியாய்க் கருத்தில் கலந்தே கவிதை தந்தான்
தண்ணளி தந்திடும் சாந்த சொருபி சற்குரு நாதனாகினான்

சித்திகள் பல தந்தாலும் அது அவனுக்கே சொந்தம்
தித்திக்கும் தேன்சுவைத் தமிழும் அவனுக்கே சொந்தம்
வித்தைகளால் விளை பயனும் அவனுக்கே சொந்தம்
சக்தி தருமவன் நாமம் சொல்லும் நாவும் அவனுக்கே சொந்தம்

எண்ணற்கரிய பிறவிகள் எடுத்தாலும்
நுண்ணிய கலைபல பயின்றாலும்
பண்ணற்கரிய பணிகள் பல பண்ணினாலும்
தென்னவனாம் சிவன் அன்பிற்கே யாம் அடிமை

எல்லாம் அவன் செயல் என்றிருப்போம்
நல்லன வெல்லாம் நடந்தேறும்
வல்லமை தந்திடும் வாகீசன்
செல்லப்பன் புகழ் பாடி நிற்போம்.

"யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்"

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி...)

| | | |
|---|---|---|
| செல்வராணி நடராஜா | கனடா | 5000. 00 |
| புஸ்பராணி காசிநாதன் | சுண்ணாகம் | 3000. 00 |
| கேசவன் சிந்துஜா | சுவிஸ் | 15000. 00 |
| செபரீஸ் நித்தியா | சுவிஸ் | 10000. 00 |
| செ. நாகன் | நவக்கிரி | 1000. 00 |
| வே. பாண்டியர் | கைதடி | 1000. 00 |
| P. டிவேஸ் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| ரா. ஜெயசீலன் | துன்னாலை வடக்கு | 5000. 00 |
| பொ. குகனேஸ்வரன் | கொக்குவில் | 2000. 00 |
| நி. நிஷாந் | கொக்குவில் | 1000. 00 |
| ச. கஜீவன் | தம்பசெட்டி | 1000. 00 |
| அபிலஷா ஸ்ரீகரன் | பிரான்ஸ் | 10000. 00 |
| துரைரட்ணம் இந்திராணி | பருத்தித்துறை | 10000. 00 |
| த. குமாரதாசன் குடும்பம் | நல்லூர் | 1000. 00 |
| பசுபதி சுகந்தன் | தம்பசெட்டி | 5000. 00 |
| R. ராமச்சந்திரன் | சுண்ணாகம் | 1000. 00 |
| கு. பவிராஜ் | சரசாலை வடக்கு | 10000. 00 |
| N. நித்தியானந்தன் குடும்பம் | கனடா | 2000. 00 |
| பா. பாஸ்கரன் | நெடுங்கேணி | 1000. 00 |
| க. கணேசன் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| ச. கைலநாதன் | மீசாலை | 5000. 00 |
| திருமதி இராமச்சந்திரன் குடும்பம் | கரவெட்டி | 5000. 00 |
| அ. ராஜ்சங்கர் | உரும்பராய் | 5000. 00 |
| சிவரதி கணேசலிங்கம் | லண்டன் | 6புட்டி அரிசி |
| S. நேருஜன் | கனடா | 5000. 00 |
| கா. யோகேஸ்வரி | சாவகச்சேரி | 1000. 00 |
| ரவீந்திரன் ராதா | சுண்ணாகம் | 4000. 00 |
| நா. ரமணன் | அச்சுவேலி தெற்கு | 5000. 00 |
| சி. சூரியகுமார் | இணுவில் | 1000. 00 |
| சுதாகரன் நிர்த்திகா குடும்பம் | ஆவரங்கால் | 500. 00 |
| K. பார்த்தீபன் | மண்கும்பான் | 2000. 00 |
| சாவித்திரியம்மா அருணாசலம் | பருத்தித்துறை | 8000. 00 |
| சி. சகுந்தலாதேவி | மல்லாகம் | 500. 00 |
| சி. நேமினா | மல்லாகம் | 2000. 00 |

*எழுமின், விழுமின், குறிக்கோளை அடையும்வரை நில்லாது உழைமின்.*

| | | |
|---|---|---|
| வ. சண்முகநாதமுதலிமூலம் பரணிதரன் அட்சரா லண்டன் | | 2000. 00 |
| N. பூங்கோதை | கரவெட்டி | 10000. 00 |
| ஆ. நிராதரன் | கொழும்பு-6 | 1மூடை அரிசி |
| V. நடராஜா | கனடா | 5000. 00 |
| பா. பாலச்சந்திரன் | சுண்ணாகம் | 1000. 00 |
| புனிதவதி சிவசுப்பிரமணியம் | வட்டுக்கோட்டை | 5000. 00 |
| தவராசா லஷ்மிகரன் | ஆவரங்கால் | 10000. 00 |
| ச. ரவிச்சந்திரா | இணுவில் | 3000. 00 |
| அ. தில்லைநாதன் | ஆவரங்கால் | 5000. 00 |
| மு. லோகநாதன் | உருத்திரபுரம் | 5000. 00 |
| ஜெயக்குமார் மயூரா | உருத்திரபுரம் | 20000. 00 |
| திரு குலேந்திரதாசன் குடும்பம் | உருத்திரபுரம் | 1000. 00 |
| இ. பிரதீபன் குடும்பம் | உருத்திரபுரம் | 2000. 00 |
| மு. மார்க்கண்டு குடும்பம் | உருத்திரபுரம் | 1000. 00 |
| T. சுவேந்திரன் | கரவெட்டி | 2000. 00 |
| த. தனுஷன் | ஊரெழு | 1000. 00 |
| திருமதி பூபாலசிங்கம் | U.K | 1000. 00 |
| J. சந்திரப்பிரகாசம் குடும்பம் | பருத்தித்துறை | 8000. 00 |
| த. ஸ்ரீதரன்மூலம் நடராசா யோகரத்தினம் நினைவாக யாழ்ப்பாணம் | | 10000. 00 |
| மாணிக்கம் சிவநாதபிள்ளை நினைவாக | ஊர்காவற்துறை | 20000. 00 |
| க. பார்த்தீபன் | மண்கும்பான் | 1000. 00 |
| பொ. கமலகரன் | கனடா | மரக்கறி, 2மூடை அரிசி |
| ம. சியாமளன் | கொழும்பு | 1000. 00 |
| இ. ராதாகிருஷ்ணன் | ஏழாலைமத்தி | 1000. 00 |
| திருமதி மகேந்திரநாதன் | லண்டன் | 5000. 00 |
| க. சகுந்தலாதேவி | வியாபாரிமூலை | 1000. 00 |
| க. அழகராசன் | தாவடிச்சந்தி | 1000. 00 |
| ம. சஞ்சயன் | கனடா | 100 டொலர் |
| S. ஜெகதீபன் (கலாராணிமூலம்) | நாச்சிமார் கோவிலடி | 2600. 00 |
| வ. சச்சிதானந்தன் | பலாலிறோட் | 8000. 00 |
| சி. ஸ்ரீஸ்கந்தராஜா | கொழும்பு | 5000. 00 |
| ஸ்ரீ சிவராம் ரேடர்ஸ் | யாழ்ப்பாணம் | 3புட்டி பருப்பு |
| மு. கந்தசாமி குடும்பம் | கோண்டாவில் | 15000. 00 |
| ப. சதீஸ்குமார் | தெல்லிப்பளை | 500. 00 |
| S. சிவனேசன் | | 3000. 00 |
| கா. தயாபரன் | கொழும்பு | 3மூடை அரிசி |
| கார்த்திகா ஜீவகுமார் | அச்சுவேலி | 2000. 00 |
| க. சிவக்கொழுந்து P.M. நினைவாக | உடுப்பிட்டி | 10000. 00 |
| திருமதி சி. நாகேந்திரன் | யாழ்ப்பாணம் | 25000. 00 |

(தொடரும்...

# வட இந்திய பத்திரிநாத், கேதார்நாத், கங்கோத்திரி, யமுனோத்திரி, காசி யாத்திரை

– புவனேஸ்வரி சிவஞானசுந்தரம் அவர்கள் –

"கோபுர தரிசனம் கோடி புண்ணியம்", "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்ற எமது சான்றோர் கூற்றுக்கிணங்க நாம் கலா நிதி ஸ்ரீரெங்கநாதன் அவரது மகன் ராஜன் அவர்களின் துணையுடன் வட இந்திய யாத் திரை செல்ல ஆயத்தமானோம். எம்முடன் 15பேர் சேர்ந்து வந்தனர்.

நாம் முதலில் கொழும்பு கட்டுநாயக்கா விமானம்மூலம் டில்லி சென்று அங்கு பேருந் தின் உதவியுடன் கங்கோத்திரி, யமுனோத் திரி, கேதார்நாத், பத்திரிநாத், மதுரா, ஆக்ரா, அலகாபாத், கயா, புத்தகாய, காசி, இராமேஸ் வரம், திருப்புலானி, மதுரை, சென்னை மூல மாக, திரும்பவும் கொழும்பு வந்தடைந்தோம்.

இயற்கை அன்னையின் படைப்பு வியப்பிற்குரியன. மலைகள், நதிகள், இயற் கைக் காட்சிகள், எமது மனதைக் கவர்ந்தன. இங்கு பல மலைவாசிகளையும் கண்டோம். குளிரான இப் பிரதேசம் எம்மை மகிழ்ச்சியில் ஆழ்த்தின. இறைவனது படைப்புக்கள்தான் என்னே. கங்கா நதியை பூவுலகிற்குக் கொண்டு வருவதற்கு தவம் செய்த பகீரதனுடைய உருவம் உண்மையில் உயிருடன் இருப்பது போன்ற தோற்றம், கங்கை ஸ்நானம் செய் தல், கங்கா நீரை அருந்துதல், கங்கையைப் பூஜித்தல் இந்தப் புனித யாத்திரையில் கிடைக்கக்கூடிய பெரும்பேறு.

புத்தம் புதிதாய்ப் பிறந்து ஓடிவரும் கங்கை நீர் தெள்ளத் தெளிவாக இருக்கும். எத்தனை ஆண்டுகள் வேண்டுமானாலும் வைத் திருக்கலாம். கங்கையில் நீராடினால் நமது பாவங்கள் அனைத்தும் களையப்படுவதாக ஒரு நம்பிக்கை. இங்கு கங்கைத் தாய் நுரைத்துக் கொண்டு வீராவேசமாக ஓடி வரு கிறாள்.

யமுனோத்திரி ஒரு பக்கம் அலகந்தா போன்ற நீலவண்ண ஆறுகள் மறுபக்கம் சலசல என்று ஓடிக் கொண்டிருக்கின்றன. மற்றொரு பக்கம் மலைக்கு எல்லாம் அரச னான இமாலயத்தின் உயர்ந்த பனிச் சிகரங்கள் விண்ணை முட்டிக்கொண்டு நிற் கின்றன. வனத்தின் ஒப்பற்ற அழகு, பறவை களின் கானம், மலர்களின் நறுமணம் ஆகா யத்தில் தெளிந்த நீலவானம் இவையெல் லாம் சேர்ந்து நாம் சுவர்க்க லோகத்தில் சஞ்சரித்துக் கொண்டிருப்பதாக எண்ண வைக்கின்றன.

இந்தக் கவின்மிகு அழகில் சொக்கிப் போய் இன்னும் தாகத்துடன் இந்த அழகைப் பருக நம் கண்கள் நாற்புறமும் சுழன்று கொண்டே இருக்கின்றன. ஏனென்றால் இந்த மாதிரியான ஒரு விருந்து அடிக்கடி கிடைக் காதது.

இமாலயம் இந்த அளவுக்கு ரம்மிய மானது. காலம் காலமாக மனதில் அடங்கிக் கிடந்த ஒரு அபிலாஷையைப் பூர்த்தி செய் யும் நேரம் வந்துவிட்டது. இதை எண்ணி நான் பூரணமாக மகிழ்ச்சி அடைந்தேன்.

யமுனோத்திரி செல்ல நடைப் பய ணம் குதிரைகளும், தண்டிகளும் இங்கே கிடைக்கும் கடல் மட்டத்திலிருந்து 3323 மீற் றர் உயரத்தில் அமைந்துள்ளது. இங்குதான்

அனுமான் இலங்கையை எரித்தபின் தன் வாலை அணைத்ததால் இது "பந்தர் பூஞ்ச்" ஆயிற்று.

மேமாதம் தொடக்கம் அக்டோபர் மாதம் வரையும்தான் இக் கோயிலை தரிசிக்கலாம் மற்றைய நாளில் பனிக்கட்டிகள் மூடிக்கிடக்கும். இங்குள்ள வெந்நீர் ஊற்று முக்கியமானது இங்குதான் யமுனா நதி உற்பத்தி ஸ்தானம். இங்கு சூரியனார் கோவிலும் உண்டு.

கேதார்நாத் நாராயணர்கள் பத்திகாச்சிரமத்தில் மண்ணாலான லிங்கத்தை பூசை செய்து தவம் புரிந்தார்கள். அவர்களின் தவத்தால் ஈர்க்கப்பட்ட சிவபெருமான் அவர்கள் முன்னே தோன்றி கேட்கிற வரத்தைத் தருவதாக வாக்களித்தார். சிவபெருமான் அங்கேயே தங்கியிருந்து அருள்செய்ய வேண்டும் என்று வரம் கேட்டார்கள் நாராயணர்கள். அவ்வாறே ஜோதிலிங்கமாக கேதாரநாதர் அங்கேயே தங்கிவிட்டார். இது சிவபுராணம் கூறும் கதை. குருஷேத்திர யுத்தத்திற்குப் பிறகு சாந்தியை வேண்டிப் பாண்டவர்கள் இங்கே வந்தனர். பாண்டவர்களைப் பார்த்த சிவன் எருமை கடா உருவெடுத்து அங்கிருந்து ஓடினார். சிவன் பூமிக்குள் மறைய ஆரம்பித்தார். எருமையின் பின் பாகம் கேதாரத்தில் தங்கிவிட மற்ற பாகங்கள் நான்கு இடங்களில் தங்கின. மகாபாரதப் போர் முடிந்த பின் பஞ்சபாண்டவர்கள் தங்கள் பாவத்தில் இருந்து விடுபடும் நோக்கத்துடன் கட்டப்பட்ட கோயில் இது.

இக்கோயில் கடல் மட்டத்திலிருந்து 3583 மீற்றர் உயரத்தில் இமயமலைச் சாரலில் அமைந்துள்ளது. லிங்கம் கருங்கல்லால் ஆனது. அழகிய சிற்பங்கள் கண்ணைக் கவர்கின்றன. இங்கு மந்தாகினி நதி பாய்கின்றது. மலைப் பிரதேசம். பனி மூடிய மலைச் சிகரங்களை மிக அருகில் காணலாம். பனி வெயிலில் உருகி ஓடுவது வெள்ளியை உருக்கி ஊற்றியதுபோல் இருக்கும்.

இத்திருத்தலங்களைத் தரிசிக்கும் வாய்ப்பு எல்லோருக்கும் கிடைப்பதில்லை. முன் செய்த நல்வினைப் பயனாலும் உடல் வலிமையும் உள்ளத்தில் தென்பும் கருத்தில் நிறைய ஆர்வமும் திருவருள் துணையும் கிடைக்கப் பெற்றவர்களுக்கு இப்பேறு கிடைக்கும். மேலும் நாம் நினைக்கும்பொழுது எல்லாம் சென்று நேரில் தரிசிக்க முடியாது. ஆண்டில் ஆறு மாதகாலம் நல்ல உறை பனிக்குள்ளேயே மூர்த்தியும், கோவிலும் புதைந்து கிடக்கும். பனி உருகும் வேனிற் காலத்தில்த்தான் பக்தர்கள் சென்று தரிசிக்க முடியும்.

மலைகளில் சிறந்தது இமயம். நதிகளில் சிறந்தது கங்கை. தெய்வத்தில் முதன்மையானவர் சிவன். இவ்வுன்னத சிறப்புக்களைத் தன்னகத்தே கொண்டது கேதாரநாத். வைகாசி தொடக்கம் ஐப்பசி மாதம் மட்டுமே இவ் ஆலயத்தைத் தரிசிக்க முடியும். இவ் ஆலயத்திற்கு செல்ல நடைப் பயணம், குதிரைப்பயணம், தண்டிகள் உள்ளன.

இப்போது ஹெலி என்னும் விமானம் மூலமும் செல்லலாம். இங்கு பிரயாணம் செய்யும்போது குளிர் மிகவிருப்பதால் உடம்பைக் கம்பளி ஆடை, கால் உறை, கையுறை, ஸ்வெற்றர், குல்லாய், பிப்ளர் போன்றவற்றால் மூடியிருந்தால் குளிரின் கடுமை தெரியாது.

பத்திரிநாத் வசிட்ட முனிவரின் மனைவி அருந்ததி கணவனிடம், "பிரபுவே ஸ்ரீ பத்திரிநாதருடைய முக்கியத்துவத்தை விளக்கிக் கூறுங்கள்" என்று கேட்டாள். பத்திரியை தூய உள்ளத்துடன் தரிசித்தால் கிடைக்கிற நன்மைகள் என்ன? பத்திரிநாதரை தரிசிப்பவன் எவனும் அவன் எப்படிப்பட்ட பாவியாயினும், பத்தியினால் புனிதமடைந்து மோட்சம் அடைகின்றான் என வசிட்டர் மனைவிக்குப் பதிலளித்தார்.

*சுயநலம் இன்றி வாழ்வதே நல்லொழுக்கம். எந்நிலையிலும் சுயநலத்தை மறந்து செயற்படு.*

இங்கு அலகந்தா ஆறு சலசலத்துடன் ஓடிக்கொண்டு இருக்கின்றது. இக்கோயில் இமாலயத்தின் சாரலிலே 3100 மீற்றர் உயரத்தில் சுற்றுச்சூழல் பாதிக்காத இயற்கைச் சூழலில் அமைந்துள்ளது. இங்கு சரஸ்வதி, தௌவி, மந்தாகினி, பிண்டார் முதலிய துணை நதிகள் உற்பத்தியாகின்றன. வெந்நீர் ஊற்றும் உண்டு, இலந்தை மரங்கள் அடர்ந்த வனம் இது.

இக்கோயில் எப்போது நிறுவப்பட்டது என்பதற்கு வரலாற்று பூர்வமான ஆதாரங்கள் எதுவும் இல்லை. உத்திரக்கண்ட யாத்திரையின் வழியெங்கும் நிகரற்ற இயற்கை அழகு காணக்கிடக்கின்றது. இந்த அழகுக்கு உலகெங்கும் ஈடு இணை இல்லை. வெளிப்படுத்த சொற்களும் இல்லை. பத்திரிநாத் செல்ல நடைப்பயணம் மட்டுமே என்ற காலம் முடிந்துவிட்டது. இப்போது வாகன வசதி உண்டு. இந்தப் பாதையில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வரிசை வரிசையாக போய்க் கொண்டு இருக்கிறார்கள். இதே பாதையில் சென்றுதான் பலர் சுவர்க்கத்தை அடைந்தார்கள். ஆதிசங்கரருடைய காலடிச் சுவடுகள் இந்த பாதையில் பதிந்துள்ளது. சிவபெருமானின் அவதாரமாகவே கருதப்படுபவர் அவர். இந்தப் பாதைகளும், மரஞ்செடி, கொடிகளும் எல்லோருடைய இன்பதுன்பங்களின் உரையாடல்களையும், ஆனந்தத்தையும் களைப்பின் நெடு மூச்சுக்களையும் காலங் காலமாக கேட்டு வருகின்றன.

**மானா:**

இங்கு பிள்ளையார் மகாபாரதம் எழுதிய இடம் உண்டு. அத்துடன் வசிட்ட மகா முனிவர் வசித்த குகை அவர் பாரதம் எழுதிய இடம் அனைத்தும் இருக்கிறது. அங்கு சென்றால் ஒரு பக்கம் திபெத்- மற்றப் பக்கம் சீனா. இங்குதான் சரஸ்வதி நதி உற்பத்தி ஆகின்றது. இங்கிருந்துதான் பஞ்ச பாண்டவர்கள் சுவர்க்கத்தை அடைந்தனர். பின்னர் கண்ணன் பிறந்த இடமான மதுரா சென்று பிருந்தாவனம் கோயில் தரிசனம், பின் கயா. இந்த கயை எங்கே இருக்கிறது என்ற கேள்விக்கு விடை வித்திய மலைச் சாரலுக்கு வடக்கே மகத நாட்டிலே சம்பகம் என்னும் பெயர் கொண்ட இன்பத் தேன் பாயும் மது வனத்திலே ஆனந்த மலையெனத் திகழும் கோலாகல பாரதத்திலே இந்த திருத்தலம் இருக்கிறது. இங்கே இறைவன் கதாதரராகக் கொலு வீற்றிருக்கிறார். அவர் அருளால் அவருக்கும் மேலாகப் புகழ் பெற்றவன் கயாசுரன். அவன் பெயராகவே இத்தலம் கயை என்று போற்றப்படுகிறது.

இங்கு வந்து பிண்டம் போட்டுச் சிரார்த்தம் செய்பவர்களின் பித்ருக்கள் அனைவருக்கும் பிரம்பலோகம் சித்திக்க வேண்டும். அவர்களை எந்தவகைப் பாவமும் தீண்டக்கூடாது என்று கயாசுரன் வரம் கேட்டான்.

நம் முன்னோர்கள் நம் வம்சத்தில் யாராவது ஒருவர் கயைக்கு வந்து நம்மைக் கரையேற்றமாட்டார்களா? என்று காத்திருப்பார்களாம். காரணம் கயாசுரன் பெற்ற வரம். நமது சாஸ்திரங்களும் பிள்ளையாகப் பிறந்ததன் பயன் என்ன என்று கூறும்பொழுது அவர்கள் மரித்தபின் அவர்கள் நினைவாக அந்த நாட்களில் திதி கொடு- அதாவது சிரார்த்தம் செய் கயைக்குப் போய் அவர்களை நினைத்துப் பிண்டம் போடு- இது உன் கடமை என வலியுறுத்துகின்றன.

கயையிலே புனித தீர்த்தம் இல்லாத இடமே இல்லை. அக்னி புராணம் இங்கு அஷ்டகயா பஞ்சகயா, ஏகோத்திஷ்டம் என்ற மூன்று சிராத்தங்கள் ஏற்றவை. இப்பொழுது அவசர காலத்தை உத்தேசித்து ஒரே நாளில் செய்யும் ஏகோதிஷ்டம் என்பது விஷ்ணு பதத்தில் பிண்டம் போடுவது ஆகும்.

*பிறரிடமிருந்து நல்லனவற்றைக் கற்றுக்கொள்ள மறுப்பவன் இறந்தவனுக்கு ஒப்பாவான்.*

கயையிலே தங்கள் முன்னோருக்கும் மட்டு மன்றி உற்றார், உறவினர், நண்பர், பகைவர் என்று எல்லோருக்கும். (முப்பத்திரண்டு பிண் டம் போடலாம்) பிண்டம் போட்டு அவர்களுக்கு நற்கதி கோரலாம். ஏன்? தனக்குமே கூட ஆத்ம பிண்டம் போட்டு விஷ்ணு பதத்தில் ஒப்படைக்கலாம் என்ற கயைப் பிண்டத்துக்கு அத்தனை மகத்துவம் அத்தனை விஷேசம்.

கயை போய் வருகிறவர்கள் அஷ்ய வடத்தின் அடியில் ஒரு காயை, ஒரு கனியை, ஒரு கீரையை உட்கொள்வதில்லை என்று விரதம் மேற்கொள்ள வேண்டும். அங்கே எந்தப் பொருளை விட்டோமோ அந்தப் பொரு ளைக் கார்த்திகை மாதத்தில் தானம் செய் யச் சொல்கிறது சாஸ்திரம்.

"நீத்தார் கடன் தீர்த்த நேர்த்தியான தீர்த்தம்" என்ற பெருமையோடு வரலாற்றுப் புகழ் கொண்டது கயாஷேத்திரம்.

காசி, காசி என்றால் எல்லோர் மன திலும் எழும் கேள்வி இவர்கள் ஏன் இப் போது காசி செல்கின்றார்கள் என்பதாகும். அங்கு சித்தர்கள் இருப்பார்கள். பிணங்கள் மிதக்கும் என்று இன்றுள்ள காசிவேறு காசி யில் வாராணாசி" என்னும் நதி ஓடுகின்றது. ஆதிகாலத்தில் காசி இந்துக்களின் புகழ் பெற்ற தீர்த்த ஸ்தலமாக உள்ளது. பகவான் மகாதேவ் தன்னுடைய திரிசூலத்தின்மேல் கால்களை வைத்து நின்று இந்த காசி நகரத்தைப் படைத்தார் என்றும் பகவான் சங்கரர் இந்தக் காசி நகரத்தில் இருந்து வருகிறார் என்றும் நம்பப்படுகிறது. ஆகை யால் எந்த மனிதரும் தன்னுடைய சரீரத்தை இங்கு தியாகம் செய்தால் மோட்சம் அடைந்து சிவலோகம் செல்வதாக ஐதீகம். ஆகையால் மக்கள் காசியிலே இறந்து விடுவதற்காகத் தங்கள் கடைசிக் காலத்தை இங்கேயே கழிக் கின்றனர். பகவான் விஸ்வநாதர் கோயிலை ஔரங்கசீப் உடைத்துவிட்டான். தற்சமயம் இருக்கும் கோயில் மஹாராணி அகல்யா பாயினால் கட்டப்பட்டது. கோயிலின் உயரம் 51 அடி கோயிலில் உள்ளே சிவலிங்கம் வைக்கப்பட்டு இருக்கின்றது. இந்தச் சிவ லிங்கம் காசியில் பிரசித்தி பெற்றது. அவர் தலையில் கங்கை நீரை ஊற்ற வைத்தும் ஐந்து தடவை செய்யும் ஆராத்தியும் முக்கிய மானது- பார்க்கத்தக்கது. பூஜை நடக்கும் போது நூற்றுக்கணக்கான மணி ஓசைகளும், மேளதாளமும் வாசிக்கும்போது கோயிலின் உள்ளே நுழைய மிகவும் உற்சாகம் பிறக் கிறது.

இங்கு கால பைரவர் கோயிலுண்டு. அன்னபூர்ணா கோயில், விஸ்வநாதர் கோயில் அருகில் உள்ளது. விசாலாட்சி கோயில் மிக வும் அழகுடையது.

காசி வாரணாசியில் பிரம்மஸ்வருபி யான ஆயிரக்கணக்கான லிங்கங்கள் உள் ளன. அவற்றில் ஒன்றுதான் ஜோதிலிங்கமாக இருக்கும் விஸ்வநாதர். இவரைத் தரிசித்தது உண்மையிலேயே மகிழ்ச்சி.

எனவே காசிக்குச் செல்வதற்கு வயது முக்கியமல்ல. எவரும் எவ்வயதினரும் சென்று வழிபடலாம். "கண்கெட்ட பின் சூரிய வணக்கம் செய்ய இயலாது" எனவே எமது உடலில் வலிமை உள்ளநேரம் போய் இக் கோயில்களைத் தரிசித்துவிட்டு வரலாம்.

பின் இங்கு உள்ள நீரை எடுத்துக் கொண்டு போய் இராமேஸ்வரம் சென்று 21 தீர்த்தமாடி இராமநாத சுவாமிக்கு அபிஷே கம் செய்து உத்திரகோச மங்கை மரகதத் திலான சிவனையும் மதுரை மீனாட்சி அம்மை யையும் வணங்கி சென்னை வந்து சொப்பிங் செய்து மறுநாள் நாடு திரும்பினோம். சுபம். இத்திருத்தலங்கள் சென்று வந்தது கனவா? என நினைக்கத் தோன்றும் அவ்வளவு மகத் துவம் பெற்ற யாத்திரை சைவ சமயிகளாய் பிறந்த நாம் இவ் யாத்திரைகளை வசதிக் கேற்ப போய் வந்து நாம் பெற்ற இன்பத்தை எல்லோரும் பெற வாழ்த்துகின்றோம்.

*அமைதியான மனமே உங்களின் மிக முக்கியமான மூலதனம்.*

# திருமுறை பாடிப் பணிவோம்

– திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்கள் –

நாவுக்கரசப் பெருமான் அருளிச்செய்த தேவாரங்கள் நான்காம் ஐந்தாம் ஆறாம் திருமுறைகளாக வகுக்கப்பெற்றுள்ளமை நாம் யாவரும் அறிந்ததே. திருக்குறுந்தொகையாகப் பாடப்பட்ட தேவாரங்கள் ஐந்தாம் திருமுறையாக அமைந்துள்ளமையையும் சென்ற முறை கண்டோம். ஆறாம் திருமுறையுள் உள்ள தேவாரங்கள் திருத்தாண்டகங்களாக அருளப் பட்டவை. இத்திருமுறையுள் 99 பதிகங்களாக 981 தேவாரங்கள் உள்ளன. அத்தனை தேவாரங்களும் இறைனை நினைந்து பாடும் அடியாரை நைய வைத்து நில்லாது தீவினைகள் நீங்கச் செய்வன. "சமணசமயத்திலிருந்தேனே" என்ற குற்ற உணர்வும் "அவ்வாறிருந்த என்னை யும் ஒரு பொருட்டாகக் கருதி ஈசன் ஆட்கொண்டானே" என்ற பக்தி உருக்கமும் முதுமையின் கனிவும் இவரது தேவாரங்கள் மனதை உருகச் செய்வனவாக அமையக் காரணங்களாக இருந்திருக்க வேண்டும்.

இதே காரணங்கள் தனக்கு சிவபிரான் திருவடித் தீட்சையளித்து தன் தீவினைகளை நீக்கவேண்டும் என்ற பேரவாவை அவருள் ஏற்படுத்தியிருந்தன. திருச்சத்தி முற்றத்திலே கோவில் கொண்டிருந்த சிவக்கொழுந்தீசரிடம் திருநாவுக்கரசு சுவாமிகள் தனக்குத் திருவடி தீட்சையருளுமாறு வேண்டி நின்றார். ஈசன் அவரைத் திருநல்லூருக்கு வருமாறு பணித்தார். திருநல்லூரிலே சிவபெருமானது திருவடி தீட்சை பெறும்பேறு அவருக்குக் கிட்டியது. அப்போது அவர்

நினைந்துருகும் அடியாரை நைய வைத்தார்
நில்லாமே தீவினைகள் நீங்க வைத்தார்
சினந்திருகு களிற்றுரிவைப் போர்வை வைத்தார்
செழுமதியின் தளிர்வைத்தார் சிறந்து வானோர்
இனந்துருவி மணிமகுடத் தேறத் துற்ற
இனமலர்கள் போதவிழ்ந்து மதுவாய்ப் பில்கி
நனைந்தனைய திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்லவாறே.

என்ற தேவாரத்துடன் ஆரம்பிக்கும் பதிகத்தைப் பாடினார். திருவடி சூட்டிய ஆனந்த அனுபவத்துள் மூழ்கியவாறே பாடிய தேவாரம் இது. இறைவனை நினைந்து பக்தியில் உருகி மனம் கரைந்து போகிறது. நினைந்து உருகிய அடியவரை நல்லூரில் வீற்றிருக்கும் எம்பெருமான் நைய வைத்தார். அப்பர் பெருமான் செய்த தீவினைகள் பற்றிய கவலைதானே அவரை வாட்டியவண்ணமிருக்கிறது. இறைவன் அந்தத் தீவினைகள் நில்லாது நீங்கச் செய்துவிட்டார். கோபத்தோடு வந்த யானையின் தோலைப் போர்த்தியவர் சிவபெருமான். அவர் முடியிலே செழுமையான சந்திரனின் துளிர் போன்ற பிறையைச் சூடியிருக்கிறார். இலகுவிற் கிட்டாத சிவபிரானின் பாதங்களைத் தேடிக் கண்ட தேவர்கள் தம் மணிமகுடஞ் சூட்டிய சிரங்களை அவ்வடிகளில் வைத்து வணங்கியபோது அவற்றிலிருந்த பல்லின மலர்களின் மோதுகள் கட்டவிழ்ந்து தேனைச் சிந்த அதனால் நனைந்த திருவடிகளை நல்லூரெம்பிரான் நல்ல வகையில் என்தலைமேல் வைத்தார் என்கிறார் நாவுக்கரசர். தேவர்களுக்குக்

*கடவுள்மீது அசைக்கமுடியாத நம்பிக்கை வைத்துவிட்டால் என்றும் துன்பம் இல்லை.*

கிட்டாத திருவடிகள் தேனில் நனைந்து தண்மையாக மென்மையாகத் தலைமேல் வைக்கப்படும்போது ஆகா என்ன ஆனந்தம்! அந்த ஆனந்தப் பரவசத்தை அனுபவிக்கும் நினைவுடன் இந்தத் தேவாரத்தைத் தினமும் பாடும்போது துன்பங்களெல்லாம் பறந்தோடுமல்லவா?

அப்பர் பெருமான் திருப்பூவணத்தில் வீற்றிருக்கும் ஈசனைத் தரிசிக்க கோவிலினுட் சென்றபோது அரனின் திருக்காட்சி கிட்டியது. ஈசனை நேரிலே கண்டால் எப்படியிருக்கும்? அந்த ஆனந்தத்தில் திருநாவுக்கரசு சுவாமிகள்

வடியேறு திரிசூலந் தோன்றுந் தோன்றும்
வளர்சடைமேல் இளமதியந் தோன்றுந் தோன்றும்
கடியேறு கமழ்கொன்றைக் கண்ணி தோன்றும்
காதில்வெண் குழைதோடு கலந்து தோன்றும்
இடியேறு களிற்றுரிவைப் போர்வை தோன்றும்
எழில் திகழுந் திருமுடியு மிலங்கித் தோன்றும்
பொடியேறு திருமேனி பொலிந்து தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனிதனார்க்கே

என ஆரம்பித்துப் பதிகமொன்றைப் பாடினார். தன் கண்முன் தோன்றிய திருக்காட்சியை அப்பதிகத்தின்மூலம் எம் கண்முன் தோன்றச் செய்தார்.

சோலைகள் அழகுசெய்யும் திருப்பூவணத்தில் கோவில் கொண்டருளியிருக்கும் புனிதராகிய சிவபிரானின் கூர்மையான திரிசூலம் தோன்றுகிறது. அவரது நீண்ட சடாமுடியில் பிறைச் சந்திரன் தோன்றுகிறது. புதிய நறுமணங் கமழும் கொன்றைமாலை தோன்றுகிறது. அர்த்தநாரீஸ்வர வடிவங் கொண்டவராதலால் காதுகளில் வெண்குழையும் தோடும் கலந்து தெரிகின்றன. இடிபோன்று பிளிறும் யானையின் தோலாகிய போர்வை தோன்றுகிறது. அழகு மிகுந்த திருமுடி ஒளிர்ந்து காட்சி தருகிறது. நீறுபூசிய திருமேனி பொலிவாகத் தோன்றுகிறது.

இது முதலாவது தேவாரத்தின் பொருள். சிவபெருமானை நேரிலே காண அப்பர் பெருமானுக்குக் கிட்டியபேறு எமக்குக் கிடைக்காதெனினும் அவ்வேளையில் அவர் பாடிய பதிகத்தைப் பாராயணஞ் செய்யும்போது சிவபிரானை மனக்கண் முன் கொணர்ந்து வழிபடக் கூடியதாக உள்ளது. இப்பதிகத்தின் இறுதித் தேவாரத்தில் நாவுக்கரசு சுவாமிகள்

"ஆருருவ உள்குவார் உள்ளத் துள்ளே
அவ்வுருவாய் நிற்கின்ற அருளுந் தோன்றும்" எனப் பாடுவது போல் நாம் எவ்வாறு நினைந்து வணங்குகின்றோமோ அவ்வுருவாய் நின்று அருள் செய்யும் பெற்றியன் எமது ஈசன்.

நாவுக்கரசு சுவாமிகள் இறைவனை எங்கும் எதிலும் கண்டு வணங்கினார். எல்லாமாய் நிற்பவனல்லவா சிவபெருமான்.

இருநிலனாய்த் தீயாகி நீருமாகி
இயமான னாயெறியுங் காற்று மாகி
அருநிலைய திங்களாய் ஞாயி றாகி
ஆகாச மாயட்ட மூர்த்தி யாகிப்
பெருநலமுங் குற்றமும் பெண்ணும் ஆணும்
பிறருருவுந் தம்முருவுந் தாமே யாகி
நெருநலையாய் இன்றாகி நாளை யாகி
நிமிர்புன் சடையடிசன் நின்ற வாறே.

*மனிதப்பிறவி கிடைப்பதற்கு அரிதானது. இதைப் பயன்படுத்தி கடவுளை அறிய முற்படுங்கள்.*

எனத் தொடங்கி இப்பதிகம் பாடும்போது அவர் அனைத்துமாய் இறைவன் நிற்கக் கண்டார். பெருநிலம், நெருப்பு, நீர், இயமானன், வீசும் காற்று, நிலையான சந்திரன், சூரியன், ஆகாயம் என்பனவாகி அட்டமூர்த்தியாகி, பெரும் நன்மையும் குற்றமுமாகி, பெண், ஆண், பிற உருக்கள் தமது உருவம் என்பனவாகி, நேற்று, இன்று, நாளை என முக்காலமுமாகி சிவபெருமான் நிற்கிறார் என்பது இத்தேவாரத்தின் பொருள். யஜமானன் என்பது இயமானன் என்று வருகிறது. அறிஞர் ஆன்மாவே இயமானன் எனப்படுகிறது என்பர்.

இத்தேவாரத்தில் நாம் காணும் அப்பர் பெருமானின் நோக்கு வியக்க வைக்கிறது. பெருநலம் இறைவனாகத் தோன்றலாம். ஆனால் குற்றமும் இறைவனாகத் தெரிகிறதே. இந்தப் பக்குவநிலையை அடைவது எல்லோருக்கும் இயலக்கூடியதல்ல. இச்சந்தர்ப்பத்தில் சம்பந்தப்பெருமான் "குற்றம்நீ குணங்கள்நீ கூடலால வாயிலாய்" என இதேபோன்று இறைவனைக் கண்டதும் ஒப்புநோக்கத்தக்கது.

திருநாவுக்கரசு சுவாமிகளுக்கு சிவபெருமானைக் கயிலாயத்தில் தரிசிக்கவேண்டுமென்ற ஆசை ஏற்பட்டு அதற்காக நடந்து சென்று, கால்கள் புண்ணாகியதால் தவழ்ந்து சென்று, கைகால்கள் தேய்ந்துபோக நெஞ்சால் உந்திச் சென்று, அதுவும் ரணமாகிவிட உருண்டுருண்டு சென்று அதுவும் இயலாத நிலையில் எம்பெருமான் நேரிலே அவர் முன் தோன்றி "இப்பொய்கையில் மூழ்கி, திருவையாற்றில் கயிலாயத் திருக்காட்சியைக் காண்பாயாக" என்றருளினார். அப்பரடிகளும் அவ்வாறே செய்து கயிலாயத்தில் சிவபெருமான் வீற்றிருக்கும் காட்சியைத் திருவையாற்றில் கண்டு

வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி
மீளாமே ஆளென்னைக் கொண்டாய் போற்றி
ஊற்றாகி உள்ளே ஒளித்தாய் போற்றி
ஓவாத சத்தத் தொலியே போற்றி
ஆற்றாகி அங்கே அமர்ந்தாய் போற்றி
ஆறங்கம் நால்வேத மானாய் போற்றி
காற்றாகி யெங்குங் கலந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

எனத் தொடங்கும் பதிகத்தைப் பாடினார். வேறுபட்டு விண்ணாய் நின்றவனே போற்றி. என்னை மீளா அடியானாய் ஆட்கொண்டவனே போற்றி. உள்ளே ஊற்றாக ஒளித்திருப்பவனே போற்றி. ஓயாத சத்தத்துள் ஒலியாய் இருப்பவனே போற்றி. ஆற்றும் திறனாயிருப்பவனே போற்றி. நான்கு வேதங்களும் ஆறு அங்கங்களும் ஆனவனே போற்றி. காற்றாகி எங்கும் கலந்து நிற்பவனே போற்றி. கயிலைமலையில் வீற்றிருப்பவனே போற்றி என இந்தத் தேவாரம் சிவபிரானைப் போற்றுவதுபோல் இப்பதிகத்தில் தொடர்ந்து வரும் தேவாரங்களும் போற்றுகின்றன. இதேபோன்று சிவபிரானைப் போற்றித் துதிக்கும் வேறு பதிகங்களையும் அப்பர் அருளிச் செய்துள்ளார்.

வடமொழியில் அர்ச்சனைச் சுலோகங்களை ஒத்தனவாக இவை அமைந்துள்ளன. இதனால் தமிழில் வழிபட விரும்புபவர்கள் இப்பதிகங்களைப் பாடி வணங்குகின்றனர். தினமும் வழிபடும்போது இப்பதிகங்களைப் பாடி ஒவ்வொரு போற்றிக்கும் இறைவனுக்கு மலர்தூவித் துதிக்கும் வழக்கத்தை ஏற்படுத்தலாம்.

*அக்கறை உள்ளவனுக்கு அனைத்தும் எளிதாகக் கிடைக்கும்.*

(கட்டுரைத்தொடர் - 35

# சித்தர்களின் ஞானம்

– திரு சிவ மகாலிங்கம் அவர்கள் –

## ஈழத்துச் சித்தர்கள்

## வேதாந்த மட குருபரம்பரையில் வந்த சித்த புருஷர்கள்

இந்துசமய தத்துவ சமூகப் பணிகள் செய்துவரும் குறிப்பிடத்தக்க நிறுவனங்களில் ஒன்றாக கந்தர்மடத்திலுள்ள வேதாந்த மடம் சிறப்பிடம் பெற்று விளங்குகிறது. யாழ்ப்பாணக் குடாநாட்டின் திருநெல்வேலிப் பகுதியில் அமைந்துள்ள பல்கலைக்கழகத்திற்கு முன்பாக உள்ள குமாரசுவாமி வீதியில் சிவ குருநாதபீடம் என்று அழைக்கப்படுகின்ற வேதாந்த மடம் ஆன்மீக ஒளிபரப்பும் கேந்திர நிலையமாக மிளிர்கிறது.

ஆரம்ப காலத்தில் கந்தர்மடம் கந்த புராண ஒழுங்கையில் அமைந்திருந்த சார்ஜன் சுவாமிகளின் இல்லத்தில் ஆன்மீக தாகம் உடையவர்கள் சிலர் ஒன்றுகூடி ஆன்மீகம் சம்பந்தமான ஆய்வுகளில் ஈடுபட்டனர். சார்ஜன் சுவாமிகள் கடையிற் சுவாமிகளின் அருளாட்சிக்கு உட்பட்டவர். இங்கே நடைபெற்ற சத்சங்கத்தில் பதினாறு வயது இளைஞனாக இருந்த கனகரத்தினம் சுவாமிகளும் கலந்துகொண்டார். வேதாந்த விசாரணைகளில் ஈடுபட்ட இந்தக் குழுவில் ஆன்மீக தாகம் கொண்ட பலர் கலந்துகொண்டார்கள். இவர்களில் வை.சி.சி. குமாரசுவாமி என்பவரும் ஒருவராக இருந்தார். இவர் தனக்குச் சொந்தமான "செம்மண்கிடங்கடி" எனத் தற்போது மடம் அமைந்திருக்கும் இடத்தில் 1904ஆம் ஆண்டில் ஓர் ஓலைக்குடில் அமைத்து அதில் வகுப்புக்கள் நடாத்துவதற்கு வசதியளித்தார். 1915ஆம் ஆண்டில் அந்தக் காணியில் 6 பரப்பை சிவகுருநாதபீடம் என்ற பெயரில் அமைந்த நிறுவனத்திற்குத் தருமசாதனம் செய்தார். அத் தருமசாதன உறுதியில் திரு தம்பையா அவர்களும் (மகாதேவ சுவாமிகள்) திரு சி. குமாரசுவாமி அவர்களும் நம்பிக்கைப் பொறுப்பாளர்களாக நியமிக்கப்பட்டார்கள். அவர்கள் ஆற்றவேண்டிய கடமைகள் பற்றியும் தரும சாதனத்தில் விரிவாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. மகாதேவ சுவாமிகளின் முயற்சியினால் நிலையான கட்டிடம் அமைக்கப்பட்டு கிணறும் வெட்டப்பட்டன. கனகரத்தினம் சுவாமிகள் இம்மடத்தின் பீடாதிபதியாக நியமிக்கப்பட்டார். கனகரத்தினம் சுவாமிகள் தமது சீடர்களில் முதன்மையானவராக இருந்த திரு தம்பையா அவர்களுக்குத் தீட்சை அளித்து மகாதேவ சுவாமிகள் என்னும் தீட்சா நாமத்தை வழங்கினார். 1921ஆம் ஆண்டு முதல் மகாதேவ சுவாமிகளே குரு பீடாதிபதியாக இருந்து செயற்பட்டு வந்தார். மகாதேவ சுவாமிகள் பீடாதிபதியாக 1942ஆம் ஆண்டுவரை பணியாற்றினார். சிவகுருநாத பீடத்தின் பொற்காலமாக இவரது அருளாட்சிக்காலம் போற்றப்படுகிறது. இவரைத் தொடர்ந்து இராமலிங்க சுவாமிகள், நமசிவாய சுவாமிகள், சோமஸ்கந்தவேள் சுவாமிகள் ஆகியோர் குரு பீடாதிபதிகளாக இருந்து செயற்பட்டார்கள். தற்பொழுது ஸ்ரீமத் வேத வித்யாசாரர் சுவாமிகள் குருபீடாதிபதியாக இருந்து பணியாற்றுகின்றார்.

*கோபத்தைக் கைவிட்ட மனிதனின் வாழ்வில் துன்பம் குறுக்கிடுவதில்லை.*

சார்ஜன் சுவாமிகள், கனகரத்தினம் சுவாமிகள், மகாதேவ சுவாமிகள் ஆகிய மூவரும் வேதாந்த ஞானிகளாக இருந்த தோடு சித்தபுருஷர்களாகவும் திகழ்ந்தார்கள்.

## 1) சார்ஜன் சின்னத்தம்பி சுவாமிகள்

நாம் பல பிறவிகளிலும் செய்த வினையின் பயனாகவே நமக்கு இந்த மானிட சரீரம் கிடைக்கிறது. எடுத்த மானிடப் பிறவியைச் சரியாகப் பயன்படுத்தாதலால்த் தான் நாம் தொடர்ந்தும் பிறவிப் பிணிக்கு ஆளாகின்றோம் என்பதைப்

**பின்னை நின்று என்னே பிறவி பெறுவது**
**முன்னை நன்றாக முயல்தவம் செய்கிலர்**

எனத் திருமந்திரம் குறிப்பிடுகிறது.

சார்ஜன் சின்னத்தம்பி சுவாமிகள் வடமராட்சி தும்பளை என்ற கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் யாழ்ப் பாண நீதிமன்றத்தில் பொலிஸ் பிரிவின் சார்ஜனாகக் கடமையாற்றினார். அக்காலத் தில் அவர் தமது மனைவி பிள்ளைகளுடன் கந்தர்மடத்தில் உள்ள கந்தபுராண ஒழுங்கை யில் வசித்து வந்தார். இக்காலத்தில் இவரது பூர்வ புண்ணிய பலன் இவரை ஆன்மீக வாழ்க்கையில் ஈடுபடச்செய்தது. யாழ் நகரை அண்டிய பெரியகடைப் பகுதியில் நடமாடிப் பல சித்துக்களைப் புரிந்தும் பலரை அருளாட் சிக்கு உட்படுத்தியும் வாழ்ந்த கடையிற் சுவாமிகளை சிலர் பைத்தியக்காரன் (விசரன்) என்று நினைத்தார்கள். சார்ஜன் சின்னத்தம்பி தலைமையில் வந்த நகர் காவலர்கள் இவரை அங்கொடை மனநோயாளர் வைத்திய சாலைக்குக் கொண்டு செல்வதற்காக யாழ் சிறைச்சாலையில் அடைத்து வைத்தார்கள். இவரது ஆன்மீக விசரை சிறையில் இவரை அடைத்தவர்களால் உணர்ந்துகொள்ள முடிய வில்லை. அடுத்தநாள் அவரைக் கொழும் புக்குக் கொண்டுசெல்வதற்காக சிறைக் கதவினைத் திறந்து பார்த்தால் கடையிற் சுவாமிகளை அங்கே காணவில்லை. ஆனால் சுவாமிகளோ பெரியகடை வீதியில் உல்லாச மாகப் பவனி வந்துகொண்டிருந்தார். சிறைக் கதவு பூட்டப்பட்ட நிலையில் காவலர்கள் கட மையில் இருக்க சுவாமிகள் எவ்வாறு வெளி யில் வந்தார் என்பது பலரையும் வியப்பில் ஆழ்த்தியது. சார்ஜனாகக் கடமையாற்றிய சின்னத்தம்பியின் மனதில் இந்நிகழ்வு பெரும் மாற்றத்தினை உருவாக்கியது. அன்றுமுதல் தன் இல்லறக் கடமைகளுடன் கடையிற் சுவாமிகளிடம் பக்திபூண்டு அவர் வழிநடத் தலில் ஆன்மீகத் தேடலில் ஈடுபட்டார். சார்ஜன் சுவாமிகள் தத்துவ சாஸ்திரங்களிலும், சமய அறிவிலும் மிகவும் ஆற்றல் உள்ளவராக விளங்கினார். திரு வை.சி.சி. குமாரசுவாமி என்பவரும் இவருடைய தாபனத்தில் தொழில் புரிந்த திருநெல்வேலியைச் சேர்ந்த கனகரத் தினம் என்பவரும் தங்களது ஓய்வு வேளை களில் சின்னத்தம்பியின் வீட்டுக்குச் சென்று தர்க்க சாஸ்திரம், சமயம், வேதாந்த விசா ரணை என்பவற்றில் ஈடுபட்டு வந்தார்கள். சார்ஜன் சுவாமிகளுக்குப் பொன்னப்பா சுவாமிகள், சுந்தரம் சுவாமிகள், சின்னையா உபாத்தியாயர், குருநாதர் பொன்னையா, கந்தர்மடத்தைச் சேர்ந்த க.ச. இராமலிங்கம் ஆகியோர் உட்பட பலர் சிஷ்யர்களாக இருந் தார்கள். இவரும் இவரது சீடர்களும் அடிக் கடி கீரிமலைக்குச் சென்று மடங்களிலும் அமைதியான கடற்கரைகளிலும் தத்துவ விசாரணைகளை நடாத்தி வந்தார்கள்.

1897ஆம் ஆண்டு வீரத்துறவி சுவாமி விவேகானந்தர் யாழ்ப்பாணம் வருகை தந் திருந்தார். யாழ் இந்துக் கல்லூரியின் பிரார்த் தனை மண்டபத்தில் இவருடைய ஆன்மீக உரை இடம்பெற்றது. இவருடைய வருகை யைத் தொடர்ந்து வேதாந்த கல்வியைக் கற் பதிலும் ஆன்மீக விசாரணை செய்வதிலும்

ஆர்வமுள்ளவர்கள் பலர் ஈடுபட்டனர். சுவாமி விவேகானந்தர் யாழ்ப்பாணத்தில் தங்கி இருந்தவேளை அடியார்கள், அன்பர்களோடு கூடிய கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. அங்கு கூடியிருந்தோரிடம் சுவாமிகள் கேட்ட கேள்விகளுக்குப் பொருத்தமான விடையைச் சார்ஜன் சின்னத்தம்பி அவர்களே வழங்கியிருந்தார். விவேகானந்தர் இவரை "வேதாந்த வித்து" என்று கூறி ஆசீர்வதித்திருந்தார். 1908ஆம் ஆண்டு பங்குனிமாத சதய நட்சத்திரத்தில் (29.03.1908)இல் சார்ஜன் சுவாமிகள் பரிபூரண நிலையை அடைந்தார். யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையிலே உள்ள கோம்பயன் மணல் மயானத்தில் இவரது சமாதி வைக்கப்பட்டது. ஞாபகார்த்த நடுகல் ஒன்றும் இவரது சமாதியின்மேல் வைக்கப்பட்டு உள்ளது. இவரது குருபூசையானது வேதாந்த மடத்தில் ஆண்டுதோறும் விமரிசையாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இவரது பாதரட்சைகளும் (மிதியடி) இவரின் படமும் வைத்து வேதாந்த மடத்தில் நித்திய பூசை நடாத்தப்பட்டு வருகிறது.

## 2) கனகரத்தினம் சுவாமிகள்

திருநெல்வேலிக் கிராமத்தின் தெற்குப் பகுதியில் வாழ்ந்த கந்தையா (சைவக்காரக் கந்தையா) தங்கம் (கோயிலாச்சி) தம்பதியரின் தவப்பயனால் உதித்த குழந்தைகள் எழுவரில் கனகரத்தினம் மூன்றாவது குழந்தையாக 1880ஆம் ஆண்டில் அவதாரம் செய்தார். தந்தையார் வேளாண்மைத் தொழிலே செய்து வந்தார். தாயார் நாள்தோறும் தவறாமல் அருகிலே இருந்த சிவன்கோயில், முத்துமாரி அம்மன் கோயில் ஆகியவற்றுக்குச் சென்று வழிபாடு செய்வதை வழமையாகக் கொண்டிருந்தார். இதனால் இவர் கோயிலாச்சி என்று அனைவராலும் அன்போடு அழைக்கப்பட்டார்.

சிறுவனாக இருந்த கனகரத்தினம் இளமையிலே உலகியல் வாழ்வில் எதுவித பற்றுமின்றி, தனது உடைகளில் கூட அக்கறையின்றி சிறு துணியை இடையிலே உடுத்தியபடி உலாவி வருவார். சில நாட்களில் செம்மணியில் உள்ள மயானத்திற்குச் சென்று அங்கே தியானத்தில் அமர்ந்து விடுவார். சகோதரர்கள் தேடிச் சென்று வீட்டிற்குக் கூட்டி வருவார்கள். இவருடைய தந்தையார் இளம் வயதிலேயே காலமாகி விட்டார். தாயார் மூத்தமகளின் திருமணத்தைச் செய்வதற்குப் பணம் இல்லையே என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தார். இதனை உணர்ந்த கனகரத்தினம் தங்கள் தோட்டத்தில் மரவள்ளி பயிரிட்டு நிறைந்த பணத்திற்கு விற்றுத் தாயாரிடம் கொண்டுவந்து கொடுத்தார். தன் மகனின் செயலால் மகிழ்வடைந்த தாயார் "இது எனக்குப் போதும்- இனி நீ உனக்குத் தேடிக்கொள்" என்று விடை கொடுத்தார். பொருளைத் தேடிக்கொள் என்றுதான் தாயார் விடையளித்தார். ஆனால் கனகரத்தினம் பதினாறு வயதில் அருளைத் தேடுவதற்காக வீட்டை விட்டுப் புறப்பட்டு விட்டார்.

கடையிற் சுவாமிகளின் அருளாட்சிக்கு உட்பட்ட சார்ஜன் சின்னத்தம்பி சுவாமிகளுடன் கனகரத்தினம் சுவாமிகளுக்கு தொடர்பு ஏற்பட்டது. சார்ஜன் சுவாமிகளின் வீட்டிலேயே அவரிடம் புத்தகங்களை வேண்டிப் படிக்கத் தொடங்கினார். இந்தியாவிற்குச் சென்று பல திருத்தலங்களையும் தரிசித்துக் கொண்டு திருப்பெருந்துறைக்கு வருகை தந்தார். அங்கே தீர்த்தக்கரையில் துயில்கொள்ளும்பொழுது இறைவன் காட்சி கொடுத்து ஆசீர்வதித்து "நீ யாழ்ப்பாணம் போ. அங்கே உன் குரு உனது வரவை எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்" என்று கூறினார்.

இந்த ஆனந்த அனுபவத்துடன் யாழ்ப்பாணம் வந்த கனகரத்தினம் சுவாமிகள்

நேரே சென்று தனது குருநாதராகிய சார்ஜன் சுவாமிகளின் பாதார விந்தங்களைப் பணிந்து நின்றார். அவரும் "நீ திரும்பி வருவாய் என்று எனக்குத் தெரியும்" என்று அவரை ஆசீர வதித்து தனது பிரதம சிஷ்யனாக ஏற்றுக் கொண்டார். எங்கும் வியாபித்திருக்கும் பரம் பொருள் தன்னுள்ளேயும் இருப்பதை உணர்ந்து அதனைத் தேடிக் கண்டுகொள் ளும் முயற்சியில் ஈடுபட்டார். நாளாந்தம் திரு முறைகள் ஓதுவதுடன் திருமந்திரம், தாயு மான சுவாமிகளின் பாடல்கள், கைவல்ய நவநீதம் ஆகிய ஞான நூல்களைப் படிப் பதிலும் ஆர்வத்துடன் ஈடுபட்டு வந்தார். இவர் களுடன் கொழும்புத்துறையைச் சேர்ந்த சுப்பிரமணிய ஐயர் என்பவரும் இணைந்து கொண்டார். இவர் எழுதிய பிரதிகளே "ஆன்ம விசாரம்" என்ற நூலாகப் பின்பு வெளிவந்தது.

திரு கனகரத்தினம் சுவாமிகள் வை.சி.சி. குமாரசுவாமியின் தொழில் நிறுவனத் தில் சுருட்டுத் தொழிலாளியாக வேலை செய்து வந்தார். அக்காலத்தில் இப்படியான தொழில் நிலையங்களில் வேலை செய்பவர் களை உற்சாகமூட்டுவதற்காக இதிகாச, புராணக் கதைகளை விரிவாக எடுத்துக் கூறும் வழக்கம் நிலவி வந்தது. இவ்வேளை களில் கனகரத்தினம் சுவாமிகளுக்கு முன் னால் சுருட்டுவதற்கான புகையிலைகள் இருக்க இவர் தன்னை மறந்து தியானத்தில் ஆழ்ந்துவிடுவார். சக தொழிலாளிகள் கனகரத் தினம் துயில் கொள்கிறார் என்று நையாண்டி செய்வார்கள். ஆனால் அவரது முதலாளிக்கு அவருடைய பக்குவநிலை தெரியும். அவருடன் சேர்ந்து ஆன்மீக விசாரணைகளில் ஈடுபடு வதுடன் தேவையான ஞான நூல்களையும் அவருக்கு வாங்கிக் கொடுத்தார்.

இவருடைய அருளாட்சிக்கு உட்பட்ட கண்ணம்மாச்சி, தெய்வானை, சின்னக்குட்டி ஆகிய பெண்களும் இவ் விசாரணைக் குழுவில் கலந்துகொள்வார்கள். பெண்கள் கலந்து கொள்வதால் சந்தேகம் கொண்ட சுவாமிகளின் உறவினர் ஒருவர் மறைந்து நின்று அங்கு என்ன நடக்கிறது என்று உளவு வேலை பார்த்தார். அப்பொழுது சுவாமிகளைத் தரிசிக்கவந்த கொழும்புத்துறை சுப்பிரமணிய ஐயர் அவர்கள் தான் கொண்டுவந்த மலர் களைச் சுவாமிகளின் பாதங்களில் இட்டுச் சாஷ்டாங்கமாக நிலத்தில் வீழ்ந்து வணங்கி னார். இதனைக் கண்ட சுவாமிகளின் உற வினர் தமது மதியீனத்தை நொந்து சுவாமி களின் உண்மை நிலையை உணர்ந்து அவ ரின் பாதங்களில் வீழ்ந்து வணங்கித் தானும் ஆசியினைப் பெற்றுக்கொண்டார்.

கனகரத்தினம் சுவாமிகளும் அவரது சிஷ்யர்களும் கீரிமலைக்குச் சென்று கிருஷ்ண பிள்ளை மடத்தில் தங்கியிருந்தபொழுது கரம்பொன்னைப் பிறப்பிடமாகக் கொண்ட தம்பையா (மகாதேவ சுவாமிகள்) அங்கே வைத்திலிங்கம் மடத்தின் கட்டிட வேலை களை மேற்பார்வை செய்யும் பணியில் ஈடுபட் டுக்கொண்டிருந்தார். கடலில் நீராடிவிட்டு வந்த கனகரத்தினம் சுவாமிகளின் முகத்தில் அமைதி, சாந்தம், ஞானஒளி வீசுவதைத் தம்பையா கண்டார். அவரின் பாதார விந்தங் களில் சாஷ்டாங்கமாக வீழ்ந்து கண்ணீர் மல்க வணங்கி நின்றார். சுவாமிகள் அவ ரைப் "பயப்படாதே எழுந்திரு" என்று ஆசீர வதித்து தன் கரங்களினாலேயே தூக்கி எழுப்பி விட்டார். அந்நாள் முதல் மகாதேவா சுவாமிகள் கனகரத்தினம் சுவாமிகளால் உடைச்சிவளவில் நடாத்தப்பெற்ற ஆன்மீக வகுப்புகளில் தவறாது கலந்துகொண்டார்.

சிவகுருநாத பீடத்தில் கனகரத்தினம் சுவாமிகள் நடாத்திய வகுப்புக்களை மகா தேவா சுவாமிகளிடம் ஒப்படைத்துவிட்டு சுவாமிகள் சதா தியானத்தில் அமர்ந்து விடு வார். கனகரத்தினம் சுவாமிகள் தனது

சிஷ்யரான தம்பையாவுடன் (மகாதேவ சுவாமிகள்) இந்தியாவிற்குத் தலயாத்திரை செய்தார். அங்கு பல தலங்களையும் தரிசனம் செய்துகொண்டு இருவரும் திருப்பெருந்துறையை அடைந்தனர். இத்தலத்திலேயே தம்பையாவுக்குத் தீட்சை அளித்து மகாதேவ சுவாமிகள் என்னும் தீட்சா நாமத்தையும் குருவான கனகரத்தினம் சுவாமிகள் வழங்கினார். 1922ஆம் ஆண்டு ஆவணிமாத மிருகசீரிட நட்சத்திரத்தில் கனகரத்தினம் சுவாமிகள் பிறவிப்பிணி நீங்கிச் சமாதிநிலையை அடைந்தார். இவருடைய சமாதி வேதாந்த மடத்திலே வைக்கப்பட்டது. அன்றுமுதல் மகாதேவ சுவாமிகள் மடத்தின் பொறுப்பினை ஏற்றுக்கொண்டார்.

### 3) ஸ்ரீமத் மகாதேவ சுவாமிகள்

கரம்பொன் கிராமத்தைச் சேர்ந்த நாராயணர் இராமநாதன் என்பவரும் அவர் மனைவியாகிய அன்னபூரணி அம்மையாரும் செய்த தவத்தின் பயனாக அவர்களின் சிரேஷ்ட புத்திரனாக (05.09.1874) திருவாதிரை நட்சத்திரத்தில் மகாதேவ சுவாமிகள் தோன்றினார். ஆரம்பக் கல்வியை கரம்பொனிலே நடைபெற்ற திண்ணைப் பாடசாலையிலே பயின்றார். ஆங்கிலக் கல்வியைப் பெறுவதற்காக வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியிலே இணைந்து கொண்டார். அங்கே சைவசமய மாணவர்களை மதமாற்றம் செய்வதைக்கண்டு மனம் கொதித்தார். இதனால் யாழ்ப்பாணக் கல்லூரியை விட்டு விலகிய இவர் ஆறுமுக நாவலர் இயற்றிய நூல்களையும் அறிஞர்கள் பலர் எழுதிப் பதிப்பித்த பிற நூல்களையும் பெற்றுக் கருத்தூன்றிப் படித்து வந்தார். எப்பொழுதும் பக்திப் பாடல்களைப் பாடிக் கொண்டும் இறைவனுடைய நாமங்களை ஓதிக்கொண்டும் இருப்பார். சமயாசார நூல்களையும் இலக்கிய இலக்கண நூல்களையும் அறிஞர்கள் வாயிலாகக் கேட்டும், தாம் கற்றும் தமது அறிவைப் பெருக்கிக் கொண்டார். சீவர்களைச் சிவமாகக் கருதி தம்மால் இயன்ற தொண்டுகளையும் உதவிகளையும் செய்வதே இவரது புறவழிபாடாயிற்று. மனித சமுதாயமெல்லாம் ஒரே குலம்; உலகமெல்லாம் ஒரு வீடு; கடவுள் ஒருவரே ஆவார்; எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்துவதும், அருட்பணிகள் புரிதலுமே இறைவனை அடையும் வழி என நினைந்து செயற்பட்டார். யாருடனும் அதிகம் பேசமாட்டார்; பிறர் பேசுவதைச் செவிமடுப்பார். மிகவும் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருப்பார்.

தம்பையா அவர்கள் தலயாத்திரை செய்து பாரத நாட்டின் பல புண்ணிய தலங்களையும் தரிசித்தார். காசி விசுவநாதர் ஆலயத்திற்குச் சென்று தன்னை மறந்து விசாலாட்சி அம்பாள் சமேத விசுவநாதரை உள்ளம் உருகி வழிபட்டார். அங்கே ஒரு துறவியின் தரிசனம் அவருக்குக் கிடைத்தது. சந்நியாசம் மேற்கொள்வதற்கு தமக்கு அனுமதி அளிக்குமாறு குருவிடம் வேண்டி நின்றார். சந்நியாசம் பெறுவதற்கு உமக்குக் காலம் இருக்கிறது. உனது உதவி குடும்பத்துக்குத் தேவை. உனது கடமையை முடித்தபின் துறவு மேற்கொண்டு சமயப்பணியும் கல்விப் பணியும் செய்யவேண்டுமென்று குரு கூறினார். தனது பிறந்தகமாகிய கரம்பொனுக்கு வந்த தம்பையா அவர்கள் தனது சகோதரிகள் இருவருக்கும் திருமணம் செய்து வைத்து தனது குடும்பக் கடமைகளை நிறைவேற்றியபின் துறவு வாழ்க்கையை மேற்கொண்டார். கரம்பொன் கிராமத்தைச் சேர்ந்த முத்துக்குமாருச் சட்டம்பியாரிடம் இலக்கண இலக்கிய நூல்களை எல்லாம் கற்றபின்பு இந்தியாவிற்குச் சென்று சமயஞானம் பெற்று ஊருக்குத் திரும்பினார். பிரபல வர்த்தகர் வைத்தியலிங்கம் கீரிமலையில் ஒரு மடம் கட்டுவித்தார்.

*புத்தியால் மனதை அடக்கியாள்பவன் வெற்றி இலக்கை எட்டுவது உறுதி.*

சிறாப்பர் மடம் என்று அழைக்கப்பட்ட இந்த மடத்திலே கந்தபுராண படனம், சத்சங்கம் போன்ற பல்வேறு சமய நிகழ்வுகள் இடம் பெற்று வந்தன. நமது நாட்டில் ஏற்பட்ட போர்ச் சூழ்நிலையால் இம்மடம் முற்றாக அழிக்கப்பட்டுவிட்டது. இம் மடத்தை கட்டு வதற்குப் பொறுப்பாக கடமை, கண்ணியம், கட்டுப்பாடு நிறைந்த மகாதேவ சுவாமிகளை வர்த்தகர் வைத்திலிங்கம் நியமித்தார்.

கனகரத்தினம் சுவாமிகளின் சிஷ்ய ராக மாறியபின் மகாதேவ சுவாமிகளும் வேதாந்த மடத்தில் தனது குருநாதருக்கு உதவியாக இருந்து வேதாந்த வகுப்புக் களை நடாத்தி வந்தார். ஆன்மீக நாட்டமும் தத்துவ விசாரணைகளில் ஈடுபாடும் கொண்ட பலர் இவ்வகுப்பில் கலந்து கொண்டு பயன் பெற்றார்கள். மகாதேவ சுவாமிகள் வேதாந்த மடத்திற்கு வரும் மாணவர்களுக்குப் பாடம் போதிப்பதோடு ஆலயங்களிலும், பாடசாலை களிலும் சென்று சமயப் பிரசாரங்களும் செய்து வந்தார். வாக்கும் வாழ்வும் ஒன்றான இவர் தான் சாதனைசெய்து பெற்ற அனுபவங் களையே போதனைகளிலும் கூறி வந்தார். இவர் விரிவுரையாற்றும்பொழுது திருமுறைகள், பெரியபுராணம், கந்தபுராணம், திருவிளை யாடற் புராணம், திருவாதவூரடிகள் புராணம் ஆகியவற்றில் வரும் பாடல்களையும் கதை கள், உபகதைகளையும் எடுத்துக் கூறுவார்.

சைவசேனாதிபதி ஆறுமுகநாவலரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி கிராமங்கள்தோறும் சைவப் பாடசாலைகள் நிறுவும் முயற்சியில் ஈடுபாடு கொண்டு செயற்பட்டார். தான் பிறந்த கரம்பொன் கிராமத்தில் சண்முகநாத வித்தியா சாலையை நிறுவினார். பல இடங்களிலும் சைவப் பாடசாலைகளை ஆரம்பிக்குமாறு பல ரையும் தூண்டி வந்தார். இந்துபோட் இராச ரத்தினம் நிறுவிய பல சைவப் பாடசாலை களுக்கு இவரே அத்திவாரம் இட்டுள்ளார்.

மகாதேவா சுவாமிகளின் தோற்றத் தினையும், இயல்பினையும் பற்றிப் பண்டித மணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் பின் வருமாறு கூறியுள்ளார். ஆறடி உயரமான அன்புருவம், செக்கச்செவேல் என்றிருக்கும் திருமேனி; நல்ல தோற்றப்பொலிவு; முழந் தாளை மறைத்தும் மறையாதும் அமைந்த அகலங்குறைந்த காவி வேட்டி; மிகச் சிறிய ஒரு அங்க வஸ்திரம்; இவையே அம் மகா னின் வெளிவேடப் பொலிவு. விழுமிய ஒழுக் கம், இன்சொல், இரக்கம், சாந்தம், ஆன்மீகச் சிந்தனை என்பன சுவாமிகளின் உள்ளீடாய தோற்றம். அகத்தின் ஒளி சுவாமிகளின் முகத்தில் பிரகாசித்துக் கொண்டிருக்கும். ஆடம்பரமான வெளிவேடம் சுவாமிகளிடம் எட்டுணையுமில்லை.

கனகரத்தினம் சுவாமிகளுக்குப் பின்பு வேதாந்த மடத்தினை மகாதேவ சுவாமிகளே தலைமைதாங்கி வழிநடாத்தினார். வேதாந்த தத்துவ வகுப்புகளை மகாதேவா சுவாமிகள் இங்கே நடாத்தி வந்தார். இவரின் சிஷ்யர் களில் கிளிநொச்சி ஜெயந்திநகரில் தனது குருநாதரின் பெயரில் மகாதேவா ஆச்சிர மத்தை அமைத்துப் பரிபாலித்துவந்த வடி வேற் சுவாமிகள் சிறப்பாகக் குறிப்பிட வேண் டியவர் ஆவார். வட்டுக்கோட்டையைச் சேர்ந்த இராமலிங்க சுவாமிகளும் இவ்வகுப்புகளில் கலந்து கொண்டார். மகாதேவா சுவாமிகளுக் குப் பின்பு இராமலிங்க சுவாமிகள் வேதாந்த மடத்தின் குருபீடாதிபதியாக நியமிக்கப்பட் டார். வடிவேல் சுவாமிகள் தனது குருநாதரைப் போற்றித் துதித்துப் பின்வரும் பாடலைப் பாடியுள்ளார்.

> "என்னைத் தன்னகத்தே வைத்து ஆண்டவன்
> சொன்ன ஓர் மொழி சோதி உருவினில்
> மன்ன வைத்து மனத்திருள் நீக்கிய
> மன்னனாம் மகாதேவ குருபரன்"

*அறவழியில் பொருள்தேடி நல்வழியில் செலவழிப்பதே சிறந்த வாழ்வு.*

இராமலிங்க சுவாமிகளை வேதாந்த மடத்தின் குருபீடாதிபதியாக நியமித்த பின்பு இவர் இறைவனை இடையறாது தியானித்து ஏக சிந்தனை வயப்பட்டவராக வாழ்ந்து வந்தார். சித்திரபானு வருடம் ஐப்பசித் திங்கள் 30ம் நாள் (30.10.1942) ஞாயிற்றுக் கிழமை அவிட்ட நட்சத்திரம் கூடிய சுப தினத்தில் பரிபூரணத்துவம் அடைந்தார். இவருடைய சமாதி சிவகுருநாத பீடமாகிய வேதாந்த மடத்தில் வைக்கப்பட்டுள்ளது.

(தொடரும்...

## மயிலேறி ஆடிவா சண்முகனே!

பல்லவி

வரம் ஒன்று தரவேண்டும் வடிவேலனே! – நினை
வளமார் செந்தமிழாலே நான் பாடவே

(வர)

அநுபல்லவி

கரங்குவித்துன் கழல் பணிந்தேன் கதிர்வேலனே! – நல்ல
கவி ஞானந் தந்தெனக்கு அருள்வாய் குகனே!

(வர)

சரணம்

''அருணகிரி'' பாட, அடியெடுத்துக் கொடுத்தவனே!
அருந்திருப் புகழ்பாட அருள்மாரி பொழிந்தவனே!
வருந்துயர் எதுவெனிலும் வந்ததனை களைபவனே!
வாயார உனைப்பாட வரந்தா! உமை மகனே!

(வர)

அற்புதங்கள் செய்கின்ற ஆறுமுகன் நீயன்றோ?
அருள் ஞானப் பழமான ஆண்டவனும் நீயன்றோ?
நற்றமிழ்க் கடவுளென்று நாம் போற்றும் நாயகனே!
நான் பாட மயிலேறி ஆடிவா சண்முகனே!

(வர)

-கி. குலசேகரன்-

# அலைபாயும் நெஞ்சே ஆற்றங்கரையான் ஆலயம் சென்று அடங்கு

– திரு பு. கதிரித்தம்பி அவர்கள் –

இறைவன் உலகத்தையும் உயிரினங்களையும் படைத்துள்ளான். உயிரினங்கள் வாழ்வதற்கேற்ப பஞ்சபூதங்களையும் கொடுத்துள்ளான். படைக்கப்பட்ட உயிரினங்களில் மானுடப்பிறப்பு அரிதிலும் அரிது. அரிய பிறவியை எடுத்த மனிதன், மனதை வழிப்படுத்தாது புலன்வழி சென்று அல்லல் உறுகின்றான். நிம்மதியாக வாழமுடியாது மண் ஆசை, பொன் ஆசை, பெண் ஆசையில் அகப்பட்டு இறைவனை நினையாது மனதை அலைபாய விட்டு கவலையுடன் வாழ்நாளைக் கழிக்கின்றான். நிம்மதியைக் கொடுப்பவன் செல்வச்சந்நிதியான் என்பதை அறிந்து, ஆலயம் சென்று வழிபட, அலைபாயும் நெஞ்சம் ஒடுங்கிவிடும்.

மனிதனை ஐம்பொறிகளும், மலங்களும் நல்லதை உணரவிடாது தடுக்கின்றன. மனிதனிடம் இறையருள் ஏற்படுமாயின், மனதை புலன்வழி செல்லாது தடுக்க முடியும். இறைவன்தான் பெரியவன். அவன் எல்லாச் சக்திகளையும் உடையவன் என்ற எண்ணம் மனதில் தோன்றும். இதனால் மனிதன் மனதை அலைபாயவிடாது. ஆலயங்கள் சென்று வழிபடுவான். ஆலயங்கள் சென்று வழிபட மலங்களின் சக்திகளும் குறைந்துவிடும். உலக ஆசையும் பறந்துபோகும். மனிதனிடமுள்ள ஆசை நீங்கினால் இறைவனை அடையலாம் என திருமூலர் பின்வரும் பாடல்மூலம்

"ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள்
ஈசனோடு ஆயினும் ஆசை அறுமின்கள்
ஆசை படப்பட ஆய்வரும் துன்பங்கள்
ஆசை விடவிட ஆனந்தமாமே" எனத் திருவாய் மலர்ந்தருளியுள்ளார்.

இன்னும் அவர் ஆசை விட்டவனுக்கு உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம், வாய் கோபுர வாசல், தெள்ளத் தெளிந்தார்க்கு சீவன் சிவலிங்கம், புலன்கள் ஐந்தும் காளா மணி விளக்கே என பின்வரும் பாடல்மூலம் எடுத்தியம்புகின்றார்.

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணி விளக்கே"

திருமூலர் கூறியவழி செல்லாத மனிதன் மனதை அலைபாயவிட்டு அலைவதைக் கண்டு செல்வச்சந்நிதியான், அடியார்களுக்கு அருள்பாலிக்க தொண்டைமானாறு சந்நிதியில் காத்துக்கொண்டிருக்கின்றான். மானுடர்களாகிய நீங்கள் செல்வச்சந்நிதியான் ஆலயம் சென்று, காதலாகி கண்ணீர் மல்க வேண்டுங்கள்.

கலியுகவரதன் செல்வச்சந்நிதியான், எந்நிதியும் கொடுப்பவன் செல்வச்சந்நிதியான். மாறாத நோய்களையும் மாற்றுபவன் சந்நிதியான் என்ற உண்மைகளை "இந்துசமய அற்புதங்கள்" என்ற நூல்மூலம் மக்களுக்குத் தெரியப்படுத்தியுள்ளார்கள். மாறாத நோயுள்ள பலர் செல்வச்சந்நிதியான் ஆற்றில் முழ்கி வீதியை வலம் வந்து, பூசகரின் உச்சி விபூதிபெற்று குணமடைந்தவர்கள் பலர் உளர். முருகன் அடியார்கள் வெள்ளிக்கிழமைகளில் சந்நிதியான் ஆலயம் சென்று பிரதிட்டை செய்து சந்தோஷமாக வாழ்வதை அடியார்கள்மூலம் அறியக்கிடக்கின்றோம். சந்நிதியான் விபூதிக்கும் பிரசாதம் பெறுவதற்கும் நெருக்கமாக அடியார்கள் செல்வதைக் கண்கூடாகக் காண்கின்றோம். இதேபோல கற்பூர தீபத்தைக் கண்டு தொழ உச்சிமேல் கைவைத்து உளம் உருகி நிற்கும் அடியார்கள் பலர்.

தொண்டைமானாறு செல்வச்சந்நிதியான் ஆலயம் வரும் அடியார்கள் பசிபோக்க முருகன் சந்நிதியான் ஆச்சிரமத்தைச் சுட்டிக்காட்டி நிற்கின்றான். பணம் தேடியது போதும், ஊரும் சதமல்ல; உற்றார் சதமல்ல என்று உணர்ந்து சந்நிதியான் ஆலயம் சென்று அலைபாயும் மனதை அடக்கிக்கொள்ளுங்கள்.

# வட இந்திய யாத்திரை - 05

(தொடர்ச்சி...

– மோகனதாஸ் சுவாமிகள் –

**17.11.2016 வியாழக்கிழமை:**

அன்று மாலை திரிவேணி சங்கம வழிபாட்டை முடித்து கயா நோக்கி எமது பயணம் ஆரம்பமாயிற்று. வழியில் சீதாமடி எனும் இடத்தைப் பார்வையிடும் வண்ணம் பிரதான வீதியிலிருந்து விலகி நான்கு கிலோமீற்றர் தூரம் காட்டுப்பாதையூடாக பிரயாணம் செய்து அவ்விடத்தை அடைந்தோம். கடந்தமுறை நாம்போனவேளை இவ்விடம் பிரசித்தம் அடையவில்லை. நாமும் போகவில்லை. "இம்முறை பார்ப்போம்" எனும் முனைப்போடு சென்றிருந்தோம்.

சீதாமடி எனும் பெயருக்கேற்ற வகையில் அடர்ந்த வனப்பகுதியில் இவ் இடம் அமைந்துள்ளது. இவ் இடத்தில் சீதா சம்பந்தப்பட்ட பல சம்பவங்கள் நடைபெற்றதாக அறியக்கூடியதாக இருந்தது. லவன், குசன், ஆஞ்சநேயர் போன்றோர் இவ்விடத்தில் இருந்த தாகவும் இராமாயணத்தில் இறுதியாக சீதை பற்றிய சம்பவங்கள் இங்கே நடைபெற்றதை உறுதிப்படுத்தும் முகமாகவும் பல விடயங்களை இங்கே காணக்கூடியதாக இருந்தது. அதில் குறிப்பாக சீதை இறுதியாகப் பூமியில் உள் நுழைந்த இடம் எனும் பகுதியை நேரில் காணக் கூடியதாகவும் அவ்விடம் நான்கு பாதிகளாக வெடித்து பிளந்து நிலம் கீழிறங்கியுள்ளதை யும் அத்துடன் சீதை அக்கினிமூட்டி உள் இறங்கிய இடத்தையும் தரிசிக்கக்கூடியதாக இருந்தது. இப்பிரதேசத்தைப் புனிதப் பிரதேச மாகப் போற்றி வருகின்றார்கள்.




இப்பகுதியைச் சூழ கோமதி எனும் நாமம்பூண்ட நதி ஓடிக்கொண்டிருக்கிறது. எல்லாவற்றுக்கும் மேலாக ஒரு சிறிய ஆலயத் தினைப் பார்வைக்கு விருந்தாக அமைத்திருக் கின்றார்கள். ஒரு விக்கிரகங்களும் இல்லை. ஆனால் அதன் மையத்தில் சீதை அக்கினியில் இறங்குவதைப் போன்று சிலை ஒன்றை அமைத் திருக்கிறார்கள். அக்கினி சீதையைச்சூழ கொழுந்துவிட்டு எரிவதையும் அதன் நடுவே சீதை நிற்பதையும் வெண் பளிங்கு கல்லில் வடித்த சிற்பியின் கைவண்ணத்தை பாராட்டி யாக வேண்டும். அத்தோடு அச்சூழலில் பர்ணசாலைகள்போல் சிறு சிறு குடில்கள்

அமைத்து முனிசிரேஷ்டர்கள் தங்கி இருந்ததுபோன்ற அமைப்பையும் உருவாக்கி அவ்விடத்தின் புனிதத்தைப் போற்றி வருகிறார்கள். ஆனாலும் மற்ற இடங்களில் காணப்படும் யாத்திரிகர் கூட்டம் இங்கு இல்லை. அமைதி சூழ்ந்த இடமாக இப்பிரதேசம் உள்ளது. நாமும் இப்பகுதியைப் பார்வையிடும் பொழுது நிறைவானதும்- நிம்மதியான மனத்துடனும் அவ்விடத்தின் சூழலுக்குள் உள்வாங்கப்பட்டோம் என்றுதான் கூறவேண்டும். இரவு எட்டு மணியளவில் எமது பிரயாணம் கயாவை நோக்கி ஆரம்பமாயிற்று. 18.11.2016 வெள்ளிக்கிழமை அதிகாலை நான்கு



மணியளவில் கயாவை அடைந்து விடுதியில் தங்கினோம். கயா பிதிர்க்கடன் செய்வதற்கு பிரசித்தமான இடமாக விளங்குவதால் அக்கடமைகளை நிறைவேற்றும் முகமாக வட இந்திய தென் இந்திய யாத்திரிகர்களால் நிரம்பி வழிந்தது. காசியில் கங்கை விஷேடம் போல் இங்கே பல்குனி நதி சிறப்புடன் விளங்குகிறது. இராமபிரானுடைய தந்தையாகிய தசரதனுக்கு இங்கேதான் சிரார்த்தம் செய்ததாகவும் சீதையின் சாபத்தால் எவ்வளவுதான் நதியில் வெள்ளம் பெருகினாலும் அவ்வளவு நீரும் வெளியேறிவிடும் காரணத்தால் நதியில் நீரைக் காணமுடியாது. சில இடங்களில் மட்டும் நீர் இருப்பதைக் காணலாம். சிரார்த்தம் செய்ய விரும்புவோர் நதியில் குளி தோண்டினால் நீர் வெளிப்படும். அந்நீரின்மூலம் தமது கடமையை நிறைவேற்றுகிறார்கள். சிரத்தையோடு செய்வதே சிரார்த்தம் என்றதன்படி இங்கே கூடும் இந்துக்களை வரவேற்கத் தமிழ் தெரிந்த புரிந்த பிராமணர்கள் பலர் இருக்கின்றார்கள். அந்த வகையில் எம்மோடு வந்தவர்கள் அனைவரும் தனித்தனியாகவும் தம்பதிகளாகவும் அமர்ந்து தத்தமது பிதிர்க்கடன்களை நிறைவேற்றினார்கள். நம் நாட்டில் செய்யும் பிதிர்க்கடனுக்கு சமமாகவே அச்செயற்பாடு அமைந்திருந்தது. சிரார்த்தம் செய்து



பிண்டம் போட்டு அதை எடுத்துப்போய் விஷ்ணு பாதத்தில் சமர்ப்பித்து அவரை வழிபட்டபின் அஷ்யவடம் என்று சொல்லப்படுகின்ற ஆலமரத்து அடியில் உள்ள விக்கிரகங்களைத் தரிசித்து, கயாவில் சிரார்த்தம் செய்த ஒருவர் காமம், குரோதம், மோகம் ஆகிய மூன்று பற்றுக்களையும் விட்டு விடவேண்டும் என்பதற்கமைவாக நமக்குப் பிடித்த ஒரு இலை, ஒரு காய், ஒரு பழம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு இங்கே துறந்துவிடவேண்டும். அதன் பின் நமது வாழ்க்கையில் அவற்றை நாம் தொடவே கூடாது. அதன்படி எம் குழுவினரும் தமக்கு விருப்பமான ஒன்றைக் கூறி அக்கடமைகளை நிறைவு செய்தனர்.

அன்று மாலை புத்தகயாவை நாடி எமது குழுவினர் சென்றனர். புத்தபகவான் கயாவுக்கு வந்து அருகே உள்ள உருபேலா என்கிற இடத்தில் 6 ஆண்டுகள் தவம் செய்து ஞானோதயம் பெற்றார். அவர் ஞானம் பெற்ற அரசமரத்தடியில் மேடை அமைத்து அவ்விடத்தைச் சூழ பாதுகாப்பாக கம்பிக்கிராதி வேலிகளை அமைத்துள்ளார்கள். அங்கே இரு பெரிய காலடிச் சுவடுகள் காணப்படுகின்றன. புத்தர் தவம் மேற்கொண்டு மறைந்த வைகாசிப் பௌர்ணமியை புத்த பூர்ணிமா என்று அழைக்கிறார்கள்.



அசோகச் சக்கரவர்த்தி போதி மரத்தை வழிபட்டு புத்தருக்கு ஆலயம் அமைத்த இடம் மகாபோதி கோயில் என்று அழைக்கப்படுகின்றது. 170 அடி உயரம் கொண்ட இக்கோயிலினுள் அமைதியே உருவான புத்த பகவான் அமர்ந்திருக்கும் நிலையானது வழிபடும் எல்லோர் மனத்திலும் ஆழ்நிலைத் தியானத்திற்கு வழி வகுக்கின்றது என்பதை அங்கே இருந்து தியானத்தில் ஈடுபடும் மக்கள் மூலம் அறியலாம்.

உலகம் தழுவிய மதமாக பௌத்தம் பரவி உள்ளதால் திபேத்தியர்கள், ஜப்பானியர்கள், தாய்லாந்துக் காரர்கள், இலங்கையர், இந்தோனேசியர்கள் எனப் பல நாட்டவரும் தத்தம் நாட்டுச் சிறப்புக் கலையைப் பிரதி பலிக்கும் வண்ணம் இங்கே தனித்தனி ஆலயங்கள் அமைந்துள்ள ஆலயங்களில் அந்தந்த நாட்டவர்கள் தேசிய உடையில் நடமாடுவதைப் பார்க்க முடிந்தது. இலங்கை பௌத்த ஆலயம் உட்பட அனைத்துப் பௌத்த ஆலயங்களையும் தரிசித்தோம். (தொடரும்...



# படங்கள் தரும் பதிவுகள்



ஞானச்சுடர் சிறப்புப்பிரதி பெற்றோரிற் சிலர்...



*பெருந்தன்மையுடன் இருங்கள். பிறர் செய்த குற்றங் குறைகளை மன்னிக்கப் பழகுங்கள்.*



ஞானச்சுடர் சிறப்புப்பிரதி பெற்றோரிற் சிலர்...



உன்னிடத்தில் இருக்கும் கடவுளிடம் நம்பிக்கைகொள்.



ஞானச்சுடர் சிறப்புப்பிரதி பெற்றோரிற் சிலர்...



தேவைகளைக் குறைத்துக்கொண்டால் வாழ்வில் திருப்தியும் சந்தோஷமும் உண்டாகும்.



ஞானச்சுடர் சிறப்புப்பிரதி பெற்றோரிற் சிலர்...



சந்நிதியான் ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப் பட்டுவரும் சமுதாயப் பணிகளின் வரிசையில் யா/ தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலய சிறுவர் வகுப்பறைக்கு 3 சீலிங் மின்விசிறியினை திரு அ. குமாரவேல் அவர்களும் இரா. செல்வவடிவேல் அவர்களும் அப் பாடசாலை ஆசிரியரிடம் கையளிக்கும் நிகழ்வு.



சமுதாயப் பணிகளில் யா/ அல்வாய் வடக்கு றோ.க.த.க. பாடசாலை வாணி விழாவினை முன்னிட்டு 97 மாணவர்களுக்கான பரிசுப் பொருட்கள் வழங்கப்பட்டது.



சந்நிதியான் ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் சமுதாயப் பணிகளின் வரிசையில் வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலகத்தில் நடைபெற்ற முதியோர், மாற்றாற்றலுடையோர் தினத்தை முன்னிட்டு முதியோர்களுக்கான 30 உடுபுடவைகள் வழங்கப்பட்டது.



சமுதாயப் பணிகளின் வரிசையில் மாத்தளை கலைமகள் மகா வித்தியாலய பயன்பாட்டிற்காக இரண்டு மடிக் கணனிகள் ஆச்சிரம சுவாமிகளால் வழங்கப்பட்டது.



*காலையில் எழும்போதும், இரவில் தூங்கும்போதும் கடவுளை வழிபடு.*







தவறுகளைச் சிந்தித்து உங்களை நீங்களே திருத்திக் கொள்ளுங்கள்.

# ஞானச்சுடர் வாசகர்போட்டி 2017

## வினாக்கள்

01. ஆன்ம ஈடேற்றத்துக்கு நாம் செய்யவேண்டியது யாது?

02. மூவாய் பிறவாய் இறவாய் போற்றி எனும் தேவாரம் பாடியவர் யார்?

03. திரௌபதிக்கு திருமாங்கலியப் பிச்சை இட்டவர் யார்?

04. துன்பக் கடலைக் கடக்க எது தேவை?

05. எமது ஆரோக்கியத்தைப் பேண நாம் என்ன செய்யவேண்டும்?

06. உயிருக்குரிய இரு இயல்புகள் எவை?

07. இருவினை ஒப்பு என்பதன் பொருள் யாது?

08. உயர்ந்த பக்குவம் பெற எம்மால் மேற்கொள்ளவேண்டியது யாது?

09. மன்மதனது தொழிற்பாடு மிகுந்த காலம் எது?

10. செய்யுள் நடையில் இருந்த சமய நூல்களை வசன நடையில் எழுதியவர் யார்?

11. உண்மையான கர்மயோகி என்று யாரைக் கூறலாம்?

12. ஞானப் புதையல் எனக்கூறும் அகவலின் பெயர் கூறுக?

13. மானிடப்பிறவி எடுத்ததன் பயன் யாது?

14. மனிதனைக் கெடுக்கும் இயல்பு எவை?

15. ஆன்மீகப் பாதையில் செல்வதற்கு எது தேவை?

16. ஜோன் எனும் நாமம்பூண்ட பெரியார் யார்?

17. ஞானபண்டித ஆன்மீகச் செம்மல் எனும் விருது யாருக்கு வழங்கப்பட்டது?

18. உள்ளத்தூய்மையின்மூலம் உருவாவது எது?

19. கல்வி கற்கவேண்டிய காலத்தின் வரையறை யாது?

20. ஒழுக்க விதிமுறைகளை கடைப்பிடிக்கும் பருவம் யாது?

21. குழந்தைவேற் சுவாமிகளின் பெற்றோரின் பெயர் யாது?

22. 2017ஆம் ஆண்டு வைகாசிப் பெருவிழாவில் கௌரவிக்கப்பட்ட இருவர் பெயர் யாது?

23. உலகப் புகழ்பெற்ற எழுத்தாளர் யார்?

24. தமிழ் வேதம் எனப் பாராட்டப்பட்ட நூல் யாது?

25. எழுத்தாளன் என்று கூறுவது எதனால்?




போட்டியில் எவரும் பங்குபற்றலாம். ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட விடைகளையும் எழுதி அனுப்பலாம். ஆனால் அவை தனித்தனியாக அனுப்பப்படவேண்டும்.

2017ஆம் ஆண்டு தை மாதம் தொடக்கம் ஐப்பசிமாதம் வரை வெளிவந்த ஞானச்சுடர் மலர்களிலிருந்தே வினாக்கள் எடுக்கப்பட்டுள்ளதால் விடைகளும் மலருக்குள் இருந்தே எடுக்கப்படவேண்டும்.

விடைகளை அச்சிடுவதோ, பிரதி செய்வதோ, போட்டோ பிரதி எடுப்பதோ அனுமதிக் கப்படமாட்டாது.

விண்ணப்பங்களை வாசகர் போட்டிக்குழு, சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை, செல்வச்சந்நிதி, தொண்டைமானாறு என்ற முகவரிக்கு 20.01.2018 தைமாதத்திற்கு முன்பு தபால்மூலமோ, நேரிலோ கையளிக்கவும்.

போட்டியின் பெறுபேறுகள் தைமாத ஞானச்சுடர் மலரில் வெளியிடப்பட்டு அதன் பரிசில்கள் மாசி மாத ஞானச்சுடர் வெளியீட்டின்போது வழங்கப்படும்.

## ஞானச்சுடர்
## சந்தாதாரரின் கவனத்திற்கு...

வணக்கம்!

தாங்கள் காட்டிவரும் பேராதரவுக்கு மனமார்ந்த நன்றிகள். 2018ஆம் ஆண்டுக்கான உங்களுடைய சந்தாப் பணத்தினைச் செலுத்தி தங்கள் பதிவினைப் புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். புதிய ஆண்டில் பிரதிகளைத் தவறாது பெற்றுக் கொள்வதற்கு வசதியாக தங்கள் சரியான முகவரியைத் தபால் மூலமோ - தொலைபேசி மூலமோ தெரியப்படுத்துமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

-சைவ கலை பண்பாட்டுப் பேரவை-

*ஒளிவு மறைவு இன்றி பேச்சிலும் செயலிலும் நேர்மையைப் பின்பற்றுங்கள்.*

ஞானச்சுடர் 2017 கார்த்திகை மலர்

# மார்கழி மாத வாராந்த நிகழ்வுகள்

01.12.2017 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

"இன்னிசை"

(பக்கவாத்திய சகிதம்)

---

08.12.2017 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில்

கருத்தரங்கு : "ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்"

வழங்குபவர்கள் :- திரு அ. குமாரவேல் குழுவினர்

---

15.12.2017 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :- "கலைநிகழ்வு"

வழங்குபவர்கள் :- காரைநகர் கிழவன்காடு

கலாமன்ற மாணவர்கள்

---

22.12.2017 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

விடயம் :- "முருகநாம பஜனை"

வழங்குபவர்கள் :- முருகன் அடியார்கள்

---

29.12.2017 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

## ஞானச்சுடர் மார்கழி மாத வெளியீடு

வெளியீட்டுரை :- திரு சோ. பரமநாதன் அவர்கள்

(கிராம சேவையாளர், குப்பிளான்)

மதிப்பீட்டுரை :- திரு ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி அவர்கள்

(இளை. பிரதிக் கல்விப் பணிப்பாளர்)

240ஆவது மலர்

பதிவு இல. *QD/82/NEWS/2017*

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்

